

ரகசியம் இருப்பதை ஏற்றுக் கொண்டிட்டார் பாருங்கோ...

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 299 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 04, செவ்வாய்க்கிழமை 20.09.2016


## மாணவர்களின் வளர்ப்பு விதம் குறித்து தலைமை நீதியரசர் சிறீபவன் கவலை

### யாழ். இந்துக் கல்லூரி பரிசளிப்பு நிகழ்வில் நேற்று உரை



யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு செல்லும் போது, பாதுகாப்பை உறுதிப் படுத்துங்கள் என்று சொல்கின்ற அளவுக்கு எங்களுடைய பாடசாலைகளில் மாணவர்கள் என்ன விதத்தில் வளர்க்கப்பட்டிருக்கின்றனர் என்பது கேள்விக் குறியாகியுள்ளது. எதுவாக இருந்தாலும் மாணவர்களை நல்ல பழக்கவழக்கங்களுடன் நல்ல நிலைக்குக் கொண்டுவந்துவிடும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. >> 25ஆம் பக்கம்

## இறுதிப்போர் இரகசியங்கள் கமால் குணரத்ன வசம்

### ஆனாலும் வெளியிட மாட்டேன் என்கிறார்



கொழும்பு, செப்ரெம்பர் 20

இறுதிப் போரின் இரகசியங்கள் பல என்னிடம் உள்ளன. ஆனால் அவற்றை வெளியிடமாட்டேன். அவை என்னுடனேயே உயிரிழந்து மண்ணுக்குள் மறைந்துவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரதன.

இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகள் மீது இராணுவத்தினர் எறிகணைகளை வீசினர், சரணடைந்த >> 23ஆம் பக்கம்

### எறிபந்தாட்டத்தில் வெள்ளி வென்றது யூனியன் கல்லூரி

யாழ்ப்பாணம், செப். 20

பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்ட எறிபந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

அச்சிலியாகொட மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் குமாரதாஸ வெல்ல வித்தியாலய அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் தங்கப்பதக்கத்துக்காக மோதின. 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று தேசியச் சம்பியனானது குமாரதாஸ வெல்ல வித்தியாலய அணி. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

(விரிவு பக். 26)

## கிளிநொச்சி சந்தை சீரமைப்பு ஆரம்பம்



கிளிநொச்சி, செப்.20

கிளிநொச்சி பொதுச் சந்தையில் தீ விபத்தில் எரிந்த கடைகளை மீளச் சீரமைக்கும் பணிகள் ஆரம் பமானது. முதற்கட்டமாக 22 பழக்கடைகளை அமைக்கும் பணி யில் கரைச்சி பிரதேச சபை ஈடுபட்டுள்ளதாக >> 23ஆம் பக்கம்

## வட்டுவாகலில் கடற்படைக்கு காணிகளை வழங்க முடியாது

### கரைதுறைப்பற்று ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

முல்லைத்தீவு, செப். 20

முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள பொது மக்களின் காணியை கடற்படைக்கு வழங்கமுடியாது.

இவ்வாறு கரைதுறைப்பற்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மதியம் 12 மணியளவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் காணிகள் வழங்குவது தொடர்பான அனுமதியைபெற்றுக்கொள்வதற்காக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் இணைத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனை அடுதே குறித்த காணியை கடற்படை >> 25ஆம் பக்கம்

## 24ஆம் திகதி ஊர்வலத்துக்கு தமிழரசுக் கட்சி ஆதரவில்லை

யாழ்ப்பாணம், செப். 20

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்க முடியாது என இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.

இந்த ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பேரவை உறுப்பினர்கள் நேற்று முன்தினமிரவு சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே தமிழரசுக் கட்சி தமது நிலைப்பாட்டை விளக்கி அவர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி ஒழுங்கு செய்யப்படும் ஊர்வலத்தில் பங்குகொள்வது தொடர்பான சந்திப்பே இவ்வாறு இடம்பெற்றது. யாழ். வர்த்தகர் ஒருவரின் இல்லத்தில் ஞாயிறு இரவு 8 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணியையும் தாண்டி கலந்துரையாடல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இடம்பெற்ற சந்திப்பில் பேரவையின் ஊர்வலத்துக்கு தமிழ் தரப்பின் அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர் பார்ப்பதாகவும், தற்போது தமிழர் >> 05ஆம் பக்கம்

## கல்குடாவில் பெரும் துயரம்

### கடலில் மூழ்கி பிள்ளைகள் சாவு சோகத்தால் பெற்றோர் தற்கொலை



மட்டக்களப்பு, செப். 20

கடல் அலையில் அள்ளுண்டு உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாத பெற்றோர்கள் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ள துயரச் சம்பவம் மட்டக்களப்பு, கல்குடா பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. >> 05ஆம் பக்கம்

உரிமைக்கான தியாகப் பயணம் பக். 11

## யாழ்ப்பாண வணிகர் கழகம் ஊர்வலத்தில் பங்கேற்காது

யாழ்ப்பாணம், செப்.20

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் ஊர்வலத்தில் யாழ்ப்பாண வணிகர் கழகம் பங்குபற்றமாட்டாது என்று அதன் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் பேரவையின் ஊர்வலத்துக்கு தமிழ் யாழ்ப்பாண வணிகர் கழகத்திடம் நேரடி ஆதரவு கோரப்பட்டது. அதற்கு யாழ். வணிகர் கழகம் நேரடி ஆதரவும் இல்லை, எதிர்ப்பும் இல்லை எனப் பதிலளித்துள்ளோம். வர்த்தக நிலையங்களைப் பூட்டி அதற்கான ஏற்பாட்டினைக் கழகம் ஊடாக மேற்கொள்ள முடியாது. வணிகர்கள் ஒவ்வொருவரும் சுயமாக முடிவெடுத்து, போக விரும்பினால் அதற்குக் கழகம் தடையாக இருக்கமாட்டாது என்ற எமது நிலைப்பாட்டை அவர்களிடம் தெளிவாகக் கூறியுள்ளோம் என்றார் ஜெயசேகரம். (வ-101)

## தமிழ்க் கைதிகள் மீண்டும் நாளை முதல் போராட்டம்

கொழும்பு, செப். 20

அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நாளை 21ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட் >> 05ஆம் பக்கம்

## நிரந்தர வீடுகள் கோரி மக்கள் போராட்டம்

### முல்லையில் 3 பிரதேசங்களில் முன்னெடுப்பு



முல்லைத்தீவு, செப். 20

நிரந்தர வீடுகளைப் பெற்றுத்தருமாறு கோரி முல்லைத்தீவில் மூன்று பிரதேச செயலகங்களுக்கு முன்னால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத் >> 05ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சரின் கட்சியினர் யாழ். செயலக நிகழ்வில் அடாத்து

யாழ்ப்பாணம், செப். 20

முன்னாள் அமைச்சரும் தற்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் ஒருவரின் கட்சி அமைப்பாளர்கள், வடக்கு மாகாண சபை ஆளும்கட்சிஉறுப்பினர்களுக்கு ஒதுக்கிய ஆசனங்களில் அடாத்தாக அமர்ந்தனர். மாகாண சபை உறுப்பினர்களுக்கு இருக்கை ஒதுக்கப்பட்டு ஆசனங்களில் பெயர்கள் ஒட்டப்பட்டிருந்த நிலையில், அவற்றைக் கிழித்தெறிந்து விட்டு அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள் அமர்ந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்டச் செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்விலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

நிகழ்வில் மேடைக்கு முன்பாக, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டது. ஆசனங்களில் மாகாண சபை உறுப்பினர்களின் பெயர்களும் எழுதி ஒட்டப்பட்டிருந்தன.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சரும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவரினுடைய கட்சியைச் சேர்ந்த தொகுதி அமைப்பாளர்கள் நிகழ்வுக்கு வந்தனர். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினருடனேயே நிகழ்வு நடைபெறும் இடத்துக்குப் பிரவேசித்தனர். தமக்கு முன்வரிசையில் ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

முன்வரிசை ஆசனங்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. நிகழ்வுக்கான அழைப்பிதழ் வழங்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே ஆசன ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்.

இதனையடுத்து கட்சி அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் பெயர்களை கிழித்தெறிந்துவிட்டு, அந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

முன்னைய ஆட்சிக் காலத்தில், இவ்வாறான செயற்பாடுகளிலேயே கட்சி அமைப்பாளர்கள் ஈடுபட்டிருந்தனர். ஆட்சி மாற்றத் தின் பின்னர், பொது நிகழ்வுகளில் பங்கெடுக்காமல் ஒதுங்கியிருந்த இவர்கள், தற்போது முன்னாள் அமைச்சருடன் மீளவும் பொது நிகழ்வுகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். (வ-5)

# பனை தறிக்கும் அனுமதிகளை தவறாகப் பயன்படுத்த முயற்சி

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 20

பளைப் பகுதியில் பனை மரம் தறிப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை சட்டவிரோதமாக பயன்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. ராஜபக்ச தெரிவித்தார்.

பளைப்பகுதியில் அனுமதியின்றி தறிக்கப்பட்ட பனை மரங்களை கைப்பற்றிய பின்னர், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுமதிப்பத்திரம் இன்றி தறிக்கப்பட்ட 80 பனைமரத் துண்டுகள், பளை - தர்மக்கேணி பகுதியில் கைப்பற்றப்பட்டன. நேற்று முன்தினம் தர்மக்கேணி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த 80 பனை மரத் துண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

பனை மரங்களைக் கொண்டு வந்த சந்தேகநபர்கள் தப்பித்துச் சென்றுவிட்டனர். அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பளைப்பகுதியில் குறைந்தளவான மரங்களைத் தறிப்பதற்கே அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அதற்கான அனுமதிகளை எடுப்பவர்கள் அதில் குறிப்பட்ட தொகையைக் காட்டிலும், அதிகமான மரங்களைத் தறித்துச் செல்கின்றனர்.

குறிப்பாக பனை மரங்களைத் தறிப்பதற்காக அனுமதி குறித்த நாட்களுக்கு வழங்கப்படாது அதிக நாட்களுக்கு வழங்கப்படுகின்றது. இதைப் பயன்படுத்திக் கொள்ளும் மரக்கடத்தல் கும்பல் அந்த அனுமதிப் பத்திரங்களை வைத்துக்கொண்டு, பல முறை அதிகளவான பனை மரங்களைத் தறிக்கின்றனர். பனை மரங்கள் தறிக்கும் பகுதிகள் போடப்படாமையினால், பளை முழுவதும் மரங்களை தறித்துக் கொண்டு செல்கின்றனர். இவ்வாறு கொண்டு சென்ற பனை மரங்களே நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன - என்றார். (வ-21,ரி3)



# யாழ். கலாசார நடுவண் நிலைய கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாண கலாசார நடுவண் நிலையத்துக்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக புல்லுக்குளம் மற்றும் யாழ். பொதுநூலகத்துக்கு இடைப்பட்ட வீதி நிரந்தரமாக மூடப்பட்டது. எதிர்வரும் காலத்தில் மேற்படி வீதி, பாதசாரிகள் நடைபாதையாக மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய அரசின் நிதி உதவியில் யாழ். கலாசார நடுவண் நிலையம் யாழ். பொது நூலகத்துக்கு அருகில் அமைக்கப்படவுள்ளது. இலங்கை மதிப்பில் 1.7 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார நடுவண் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்காக காங்கேசன்துறை வீதியில் இருந்து யாழ். பொது நூலகத்திற்கு முன்பாகச் செல்லும் எஸ்பிளேன்ட் வீதி வரையான வைத்தியலிங்கம் வீதி (புல்லுக்குளத்துக்கும் இடைப்பட்ட வீதி) மூடப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அறிவித்தல் கடந்த மாதமே யாழ். மாநகர சபையினால் விடுக்கப்பட்டது.

கலாசார நடுவண் நிலையம் அமைக்கப்பட்ட பின்னர், மேற்படி வீதியூடாக வாகனப் போக்குவரத்து தடை செய்யப்படும். பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மாத்திரம் (பாதசாரிகள் நடைபாதை) அனுமதிக்கப்படும். மேலும் புல்லுக்குளத்தினுள் திறந்தவெளி அரங்கமும் அமைக்கப்படவுள்ளது. (வ-5)

# நினைவு பேருரை

பண்டிதர் க.வைத்தீசு வரக்குருக்களின் 101 ஆவதுபிறந்ததின நினைவுப் பேருரையும் திருமுறை இசையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காரை நகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சு ஓய்வுநிலை உதவிச்செயலாளர் ப.விக்கினேஸ்வரனின் தலைமையில் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் கருவறையில் திருமுறை எனும் தலைப்பில் நாயன்மார் கட்டு இ.குகதாசன் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார். (ந-ரி)

# கிளிநொச்சி சந்தை தீ இடர் பாதிப்பு; ஜனாதிபதி, பிரதமருக்கு அறிக்கை

## மாவட்டச் செயலாளரினால் அனுப்பி வைப்பு

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சி மாவட்ட சந்தை வளாகத்தில் இருந்த 124 கடைகள் எரிந்து நாசமானது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைவருக்கும் அனுப்பி வைத்து இழப்புகளுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தீ இடரின் போது 124 கடைகள் எரிந்து நாசமாகின. அவை தொடர்பான முழுமையான அறிக்கையை ஜனாதிபதி , பிரதமர் உள்ளிட்ட அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவர்களுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, வடக்கு மாகாண ஆளுநருக்கும் அந்த அறிக்கையின் பிரதி அனுப்பி வைக்கப்பட்டது.

தீ இடரினால் வர்த்தகர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டமையையும், இதற்கான ஏற்பாட்டு வழிகளையும் குறிப்பிட்டோம். எனவே விரைவில் ஓர் சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகின்றேன்.

அதேநேரம் இவ்வாறானதொரு பெரியளவிலான அழிவு ஏற்பட்டமைக்கான காரணம் மாவட்டத்தில் ஓர் தீ அணைப்பு சேவை இல்லாதமையே என்பதையும் முக்கியமாக சுட்டிக்காட்டி, அதனை இங்கு ஆரம்பிப்பதற்கான அனுமதி மற்றும் அதற்கான ஒதுக்கீடுகள் தொடர்பிலும் கோரிக்கையை விடுத்துள்ளோம். கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதி இடராகவே இது இருக்க வேண்டும். இவ்வாறு ஒரு தீயணைப்பு சேவை இன்மை காரணமாக இன்னுமோர் தீ இடர் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது- என்றார். (வ-101)

# மக்களின் காணிகளை மீள ஒப்படையுங்கள்

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்து

முல்லைத்தீவு, செப். 20

கோவணத்துடன் வந்தவர்களிடம் ஆவணத்தை கேட்காதீர்கள், காணி உரிமையாளர்களுக்கு சொந்த மான காணிகளை அவர்களிடமே மீள வழங்குங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் காட்டமாக தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி தொடர்பான விவாதத்தின் போதே மாகாணசபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது "புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணி தனியார் ஒருவருக்கு சொந்தமான காணி. அதனை அவருக்குப் பெற்றுக்கொடுக்க அல்லது அவர் ஏற்றுக்கொள்ளும் இடத்தில் மாற்றுக்காணி வழங்கவேண்டும்" என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் இணைத்தலைவர்களிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த பிரதேச செயலாளர், குறித்த நபரிடம் காணிக்குரிய ஆவணம் ஒன்றுமில்லை எனத் தெரிவித்தார். இதனை அடுத்து காட்டமான ரவிகரன் 'கோவணத்துடன் வந்தவர்களிடம் ஆவணத்தைக் கேட்காதீர்கள். அந்த காணிக்குரிய சொந்தகாரர் அவர் தான் என்பதை இங்குள்ள யாரை வேண்டும் என்றாலும் கேட்டால் தெரியும். எனவே அவருக்கு அந்தக்காணியை பெற்றுக் கொடுக்க வேண்டும் அல்லது அவருக்குரிய மாற்றுக்காணியை வழங்க வேண்டும். இது தொடர்பாக தீர்மானம் எடுங்கள்.

பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியில் பல்வேறு பட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளமையால், அவருக்கு மாற்றுக்காணி வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். (வ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது அனுப்பிய அதிகாரிக்கு நீதிவான் கடும் எச்சரிக்கை

பாலியல் துர்நடத்தைக்கு முயன்ற குற்றச்சாட்டு வழக்கில் சாட்சியை அச்சுறுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்படும் பிரதேச செயலர், நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு ஒருவரை அனுப்பியமை தொடர்பில் மன்னார் நீதிவான் ஏ.ஜி. அலெகஸ்ராஜா கடுமையாக எச்சரித்தார்.

மன்னாரில் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு தொழிற்பயிற்சியை மேற்கொள்ளச் சென்ற இளம் பெண் ஒருவர் மீது துர்நடத்தைக்கு முயற்சித்த குற்றச்சாட்டில் அந்தக் கல்வி நிலையத்தின் இயக்குநர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிவான் மன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபர் சார்பாக மன்னார் பிரதேச செயலாளர் செயற்பட்டதாகவும், வழக்கின் சாட்சியான இளம்பெண்ணின் தந்தையை அந்த வழக்கை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு அச்சுறுத்தியதாகவும் அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் மன்னார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் நீதிமன்றின் உத்தரவில், அது தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளருக்கு எதிரான வழக்கு விசாரணை மன்னார் நீதிவான் மன்றத்தில் நேற்று இடம்பெறவிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மன்னார் பிரதேச செயலாளர் சார்பாக நபர் ஒருவர் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று நீதிவானுடன் கதைக்க முற்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா, மன்றில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வரும்போது, அது தொடர்பாக நீதிவானுக்கு தூது அனுப்புவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்ததோடு, மன்னார் பிரதேச செயலாளரினால் நீதிவானின் உத்தியோக பூர்வ இல்லத்துக்கு நபர் ஒருவரை அனுப்பியமையைக் கண்டித்தார்.

சாட்சியான இளம் பெண்ணின் தந்தையை அச்சுறுத்திய குற்றச்சாட்டில், விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமாரை, 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

மேலும், பாலியல் குற்றம் தொடர்பில் மன்னார் பிரதேச செயலாளர் உதவி ஒத்தாசை வழங்கினாரா? சாட்சியாளரை அச்சுறுத்தினாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவும் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டது. குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4,56)

# வீடமைப்பு அதிகார சபையின் முயற்சிக்கு அனுமதி கிடையாது

## கரைதுறைப்பற்று ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

முல்லைத்தீவு, செப்.20

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் தனியாரின் நிலம் 10 ஏக்கரை அபகரித்து தேசிய வீடமைப்பு அதிகார சபை வீடுகள் கட்ட எடுத்த முடிவை அனுமதிக்க முடியாது.

இவ்வாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரைதுறைப்பற்றுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் 10 ஏக்கர் நிலத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் சுமார் 80 வீடுகள் அமைத்து வழங்கவுள்ளதால், அதனை வழங்க ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்டது. இந்த முடிவை அனுமதிக்க முடியாது என பெரும் கண்டனங்கள் எழுந்தன. குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் நேரடியாகவே தமது கண்டனங்களையும் தெரிவித்தனர்.

இந்த 10 ஏக்கர் காணி தனியாருக்குச் சொந்தமானது. இதனால் தேசிய வீடமைப்பு அதிகாரசபை யின் திட்டத்துக்கு அனுமதியும் மறுக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (வ-101)

# ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் செய்தி சேகரிக்கத் தடை

தென்மராட்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்கள், கூட்டத்தின் கலந்துரையாடலுக்கு இடையூறாகச் செயற்பட்டதாகத் தெரிவித்து சபையிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அங்கு பொதுமக்களுக்கு நடுவில் நின்று ஒளிப்பதிவு செய்த செய்தியாளரை இடைஞ்சல் இல்லாமல் விலகி நிற்குமாறு கூறப்பட்டது. அந்தச் செய்தியாளர், அதனைச் செவிமடுக் காமல், அவ்வாறு கூறியதனையும் ஒளிப்பதிவு செய்தபடி நின்றதால், அவரை வெளியேற்றினார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

கேரதீவில் உப்பளம் அமைப்பது தொடர்பாக க.அருந்தவபாலன் உரையாற்றுகையில், அவருக்கும், இணைத்தலைவர்களுக்கும் இடையே நின்று இருபக்கமும் மாறி மாறி அந்தச் செய்தியாளர் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார். இதனால் முகம் பார்த்துக் கதைக்க முடியாதுள் ளது. ஓரமாக நின்று தேவையான வற்றை ஒளிப்பதிவு செய்யமாறு சுமந் திரன் கூறினார். அவ்வாறு கூறிய பின்னரும் ஒளிப்பதிவு செய்துகொண் டிருந்ததனால், அவரை வெளியே போகுமாறு சுமந்திரன் பணித்தார்.

அந்த செய்தியாளர் வெளியேறிய சிறிது நேரத்தில் வேறொரு செய்தியாளர் அங்கு வந்து ஓரமாக நின்று அனைவரின் கருத்துக்களையும் ஒளிப்பதிவு செய்தார். அந்தவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, அந்தச் செய்தியாளரிடம் ஒளிப்பதிவு செய்வதை நிறுத்துமாறு கூறினார். முதல் ஒரு ஊடகவியலாளரை வெளியேற்றிய பின்னர், மற்றொருவரை அவ்வாறு செய்ய விடுவது சரியில்லை. நாங்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிரானவர்களில்லை. ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட நிலையில் செயற்படக்கூடாது எனவும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். இந்தநிலையில் அனைத்துச் செய்தியாளர்களும் கூட்டத்திலிருந்து வெளியேறினர். (வ-9)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 552
சீட்டிழுப்பு திகதி 2016.09.19 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
39 41 54 59 H
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 51,377,600/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1298
சீட்டிழுப்பு திகதி 2016.09.19
வெற்றி இலக்கங்கள்
35 47 52 60 B
ரூ. 24,781,640/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 28
சீட்டிழுப்பு திகதி 2016.09.19
வெற்றி இலக்கங்கள்
06 19 20
இலட்சாதிபதிகள் 47
வழங்கப்பட்ட மொத்த பரிசு 8,688,120/=

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு
* கட்டில் * மொரட்டுவ செற்றிகள்
* அலுமாரி
* சாப்பாட்டுமேசை, கதிரை
271, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 773 0567

வேலையாள்கள் தேவை
சிறிராம் ஜுவல்லறிக்கு
வேலையாள்கள் தேவை.
நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: 193,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 077 234 9933

வீடு விற்பனைக்கு
சிறிய குடும்பத்துக்கு ஏற்ற சிறு புதிய வீடு யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு - பகல் ஒரு மணிக்குப்பின்
தரகர் வேண்டாம். 077 8052324

தவறிவிட்டது
கனகரத்தினம் சிவானந்தன் ஆகிய எனது தே.அ.அட்டை, வாகன லைசென்ஸ், முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மானிப்பாயி லிருந்து காக்கை தீவு வழியாக யாழ். வந்த போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 3486305

செம்மலை மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் சீட்டிழுப்பின் முடிவுகள் (17.09.2016)

முதலாம் பரிசு - மோட்டார் சைக்கிள்
பெயர் - ந. ஆத்விகா பற்றுச்சீட்டு இல. 2749
முகவரி - செம்மலை. அளம்பில்.முல்லைத்தீவு.

2 ஆம் பரிசு - 32 இஞ்சி தொலைக்காட்சி
பெயர் - மதீஸ்வரன் சசிகலா பற்றுச்சீட்டு இல. 5748
முகவரி - முதலாம் வட்டாரம். முள்ளியவளை.

3 ஆம் பரிசு - நகர்த்தும் குளிரூட்டி (Moving A.C)
பெயர் - துசிந்தன் தவராசா பற்றுச்சீட்டு இல. 5247
முகவரி - வற்றாப்பளை.

மற்றும்

பத்து ஆறுதல் பரிசுகள் - (மின்னமுத்தி)

| பெயர் | பற்றுச்சீட்டு இல. | முகவரி |
|---|---|---|
| 1. பா.லாவன்யா | 933 | தங்கபுரம்.முல்லைத்தீவு |
| 2. இ.கவிதா | 2699 | செம்மலை |
| 3. வி.டக்சிகா | 1278 | 5ஆம் வட்டாரம்.குமுழமுனை |
| 4. றொபேட் | 5914 | திருகோணமலை |
| 5. க.சுவர்னா | 4778 | கள்ளப்பாடு |
| 6. ந. மகேசலிங்கம் | 1072 | செம்மலை |
| 7. மதியழகன் | 3936 | - |
| 8. ந. தர்மலிங்கம் | 458 | செம்மலை |
| 9. மு. கரிகாலன் | 5415 | உடுப்புக்குளம் |
| 10. சம்மந்தன் ஐயா | 3660 | கற்பகப் பிள்ளையார் ஆலய குருக்கள், குமுழமுனை. |

தொடர்புகளுக்கு:
தொ.பேசி இல - 077 2270786, 077 2270785
Email - kirusanp@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருநாகல் – தம்புள்ளை அதிவேக பாதையை நிர்மாணிக்க அனுமதி

கொழும்பு, செப். 20

குருநாகலிலிருந்து தம்புள்ளை வரையிலான 60 கிலோமீற்றர் மத்திய அதிவேகப்பாதையின் பிரிவு 4 இன் நிர்மாணப் பணிகளை 'ரஜரட்டை மீள் எழுப்புவோம்' அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

'ரஜரட்டை மீள் எழுப்புவோம்'அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், தற்போதுள்ள வீதிகளில் மேற்குறித்த வீதியுடன் சேர்த்து150 கி.மீற்றரைச் சீரமைப்பதற்கும், புதிய 100 கி.மீற்றர் வீதியை நிர்மாணிப்பதற்கும் அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. (ந–4)

# அயலுறவு அமைச்சு ஜாவத்தைக்கு

கொழும்பு, செப். 20

தற்போது கொழும்பு கோட்டையில் இயங்கும் அயலுறவு அமைச்சை ஜாவத்தையில் அமைக்க அமைச் சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

ஜாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் அளவிலான இடத்தை அயலுறவு அமைச்சுக்கு ஒதுக்கிக் கொள்வதற்கு அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவினால் மேற்படி அமைச்சரவைப் பத்திரம் முன் வைக்கப்பட்டது.

தற்போது கொழும்பு கோட்டையில் அமைந் துள்ள கட்டடமா னது பிரித்தானியர் ஆட்சியின் போது நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும். (ந–4)

# காக்கைதீவுச் சந்தையில் புதிய சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

வலி.தெற்கு, செப்.20

காக்கைதீவுச் சந்தையில் 9 மாதங்களுக்குப் பின் பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் காக்கைதீவு இறங்குதுறையிலுள்ள மீன் சந்தையை 2016ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு விடுவதற்காகப் பிரதேச சபையால் கேள்வி கோரப்பட்ட போது குத்தகைக்கு எடுப்பதற்கு முன் வந்த இரு பொது அமைப்புக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகச் சந்தை 8 மாதங்களாகக் குத்தகைக்கு விடப் படாமல் இயங்கி வருகின்றது.

மேற்படி சந்தை வளாகத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம் கிடைக்காமையால் நிரந்தரமான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படவில்லை. சந்தைக்கு வரும் மக்கள் தங்கள் வாகனங்களை வீதியோரங்களில் நிறுத்துவதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகின்றது. இந்த நிலையில் வருமானத்தைக் கருத்திற் கொண்டு சந்தை வளாகத்தில் பிரதேசசபையினால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு தற்பொழுது குத்தகைக்கு வழங் கப்பட்டுள்ளது. அத்துடன் வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைய மல்லாகம் நீதிவானின் ஆலோசனைப் படி விரை வில் மீன் சந்தையை அமைப்பதற் கான ஒழுங்குகளைப் பிரதேசசபை மேற் கொண்டுள் ளது. (ந–115)

# மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மாதனைப் பிரதேசம், அச்செழுப் பிரதேசம், நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கோயிலாக் கண்டி, கேரதீவு வீதி, அச்சுவேலி–சங்கானை வீதி, செல்வநாயகபுரம் (வயாவிளான்) ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சியில் சிலாவத்தை, உடுப்புக்குளம், அலம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, கொக் கிளாய் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந் தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

வவுனியாவில் தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம், குட்செட் வீதி, மடுக் கந்தவிலிருந்து குடாகச்சக் கொடிவரை பெரியபூந்தோட்டம், பெரியார்குளம், பிரமணாலங்குளத்தில் இருந்து மடு தேவாலயப் பிரதேசம் வரை, தெற்கிலுப்பைக்குளம் கிராமம், T.M.M அரைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்,

மன்னாரில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக் கண்டல், நிலாச்சேனை, வேட்டையன் முறிப்பு, மினுக்கன், பாப்பா மோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக் கண்டல், ஆண்டாங்குளம், கண் ணாட்டி, பரப்புக்கடந்தான் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (ந–ரி)

# வவு. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 26ஆம் திகதி

வவுனியா, செப். 20

வவுனியா மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் திங்கட்கிழமை வவுனியாமாவட்டச்செயலகத்தில் இடம்பெற உள்ளது என்று வவுனியா மாவட்டச் செயலகம் தெரிவித்தது. ஜனாதிபதியின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்துக்கு அமைய ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான கடிதங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் களான வடமா காண முதலமைச்ச, அமைச்சர் ரிசாட் பதியுதீன், குழுக் களின் பிரதித் தலைவர் செல் வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான் ஆகியோருக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்டுள்ளது என்று வவு னியா மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. கிருபாசுதன் தெரிவித்துள்ளார். (ந–4)

# வன்னியசிங்கம் நினைவஞ்சலி நிகழ்வுகள்

கோப்பாய்கோமான் அமரர். கு.வன்னியசிங்கத்தின் 67 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலிச் சந்தியில் அமைந்துள்ள வாழைக் குலைச் சங்க மண் டபத்தில் நடைபெறும். வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா கலந்து கொள்வார். வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி உரை ஆற்றுவர். மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதி உதவியும் வழங்கப்படவுள்ளது என கோப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி கிளை தெரிவித்தது. (ந–11)


**நல்லூரில் வீடு வாடகைக்கு**

நல்லூரில் இரு அறைகளுடனான சிறிய வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பங்களுக்கு பொருத்தமானது.

**077 797 7924**

**காணி விற்பனைக்கு**

இல.15 வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் வீதியில் 1 ½ பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை பேசித்தீர்க்கலாம்.

**077 160 4004**

**அறைகள் வாடகைக்கு**

இல.171, முதலாம் குறுக்குத்தெரு வீதி, வேம்படி கல்லூரிக்கு அருகில் உள்ள வீட்டில் அறைகள் வாடகைக்கு உள்ளன. (ஆண்கள் மட்டும்)

**076 681 8575**

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பம் 1987 ஆம் ஆண்டு பிறந்த உத்தர நட்சத்திரம் 19½ பாவமுடைய அரச வங்கி உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு படித்த அரச உத்தியோக மணமகன் தேவை.

**077 372 0646/ 077 603 3295**

**வீடு விற்பனைக்கு**

தெல்லிப்பழை கொல்லன்கலட்டியில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6 அறை, 2 குளியலறையுடன் வீடு விற்பனைக்கு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**077 100 1390**

(செவ்வாய், புதன் தினங்களில் பார்வையிடலாம்)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் A9வீதி. Hospital Roadபோன்ற தெருக்களில் அல்லது சுற்றுப்புறங்களில் உள்ள இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
யாழ் கச்சேரிக்கு அருகில் இருந்தால் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 362 7055

**தவறிவிட்டது**

பருத்தித்துறை முதலாம் கட்டைக்கும், தம்பசிட்டி வீதிக்கும் இடையில் 18.09.2016 அன்று ப.சசீந்திரன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், வங்கி அட்டை மற்றும் அடையாள அட்டை, பணம் அடங்கிய எனது பணப்பை தவறிவிட்டது.
கண்டெடுத்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 106 1062, 077 927 6853**


## பொது அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பூநகரி ப.நோ.கூ.சங்கம் பதிவு இல. (PA/48) உடைய எமது சங்கத்தில் பணிபுரிந்து பணி விலகிய பணியாளர்கள் சங்கத்தில் பிணைப்பணம் செலுத்தியிருப்பின் தங்களிடமுள்ள மூல ஆவணங்களை 05.10.2016 ஆம் திகதிக்கு முன்னதாக பூநகரி வாடியடியில் அமைந்துள்ள தலைமைக்காரியாலயத்தில் பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**து.இரத்தினசிங்கம்**
**தலைவர் 077 246 3027**
**பூநகரி ப.நோ.கூ. சங்கம் வாடியடி, பூநகரி.**

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்
## கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்தரம் - 2016

**மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரணதரப் பயிற்சி நெறியில் 1ஆம், 2ஆம் பிரிவுகளில் சித்தி பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்

அல்லது

02. கூ.ப (சாதாரணதர) பயிற்சி நெறியில் மூன்றாம் பிரிவில் சித்தி பெற்று 2வருடம் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்த நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்.

அல்லது

03. க.பொ.த(உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்ற நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்

04. வெளிவாரி மாணவர்களைப் பொறுத்தவரை க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.

அல்லது

05. கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள்.

**விண்ணப்ப முடிவு திகதி : 10.10.2016**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

விண்ணப்பப்படிவங்களை சபையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

அதிபர்

**குறிப்பு :** இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து சித்தியடைபவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு உண்டு.


**2017இற்கு உங்கள் பிள்ளைகளை தயார்ப்படுத்துகின்றீர்களா?**

**தரம் 4 புலமைச்சுடருடன்**

**இணைந்து தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.**



**ஒக்டோபர் முதல் மாதம் தோறும் 1ஆம், 15ஆம் திகதிகளில் வெளிவருகின்றது.**



**உங்கள் பிரதியை பெற்றுக்கொள்ள:–**

வடமாகாணம் : 0776569617, கிழக்கு மாகாணம்: 0718724057, கொழும்பு: 0718628378, மலையகம்: 0718724056, தலைமை அலுவலகம்: 0716850005


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்குடாவில்...

கல்குடா-பட்டியடிச்சேனை கிராமத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகம் (வயது - 54) மற்றும் அவரது மனைவியான யோகலட்சுமி சண்முகம் (வயது -46) ஆகியோரே வீட்டு முற்றத்திலுள்ள மரத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டனர். இந்தச் சம்பவத்தால் கல்குடா பிரதேசமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக உயிரிழந்த சகோதரர்களான சண்முகம் சதீஸ்குமார் (வயது - 21), கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் சண்முகம் சுரேஷ் (வயது - 17) உட்பட 5 பேர் நேற்று முன்தினம் மாலை பாசிக்குடா கடலுக்குச் சென்றுள்ளனர். கடலில் நீராடிக்கொண்டிருக்கையில் சுரேஷ் திடீரெனக் கடல் அலையில் அள்ளுண்டு சென்றுள்ளார். அவரைக் காப்பாற்றுவதற்காகப் பாய்ந்த சகோதரர் சதீஸும் நீரில் மூழ்கினார். இதையடுத்து அந்த இருவரையும் காப்பாற்றுவதற்காக ஏனைய மூவரும் முயற்சித்தவேளை அவர்களும் சிறிதுதூரம் அலையில் அடித்துச்செல்லப்பட்டனர். எனினும், கடற்படையின் சுழியோடிகளும், மீனவர்களும் இணைந்து குறித்த மூவரையும் காப்பாற்றி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஆனால், சதீஸ்குமார் மற்றும் அவரது சகோதரர் சுரேஷ் ஆகியோர் கடலில் மூழ்கி காணாமற்போனார்கள். இவர்களைத் தேடும் பணி நேற்று முன்தினம் இரவு வரை இடம்பெற்றது. இந்நிலையில், தங்கள் பிள்ளைகளுக்கு என்னநடந்ததோஎனக்கவலையில்ஏங்கிக்கொண்டிருந்த பெற்றோர்சோகம் தாங்காது சடலங்கள் கிடைப்பதற்கு முன்னரே நேற்று அதிகாலை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டனர்.

கடலில் மூழ்கி உயிரிழந்த சகோதரர்கள் இருவரினதும் சடலங்களும் நேற்றுப் பகல் கடற்படையினரால் மீட்கப்பட்டன. சகோதரர்களின் சடலத்தைக் கண்ட சகோதரி திருமதி தினேஷ்வரி (வயது - 27) துயரம் தாங்காது அந்த இடத் திலேயே மயங்கி விழுந்தார். இதையடுத்து அவர் வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார். இதேவேளை, சகோதரர்கள் இருவரினது சடலங்களும், தற்கொலை செய்துகொண்ட பெற்றோரினது சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-21,4)

## 24ஆம் திகதி...

பிரதேசங்களில் உள்ள நில விடுவிப்பு , கைதிகள் விடயம் , காணாமற்போனோர் பிரச்சினை , பௌத்த மயமாக்கல் என்பனவற்றைச் சுட்டிக் காட்டுவதே இதன் நோக்கம். இதனை அமைதி வழியில் எடுத்துக்காட்டி, அழுத்தம் கொடுப்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டமையினால், இதற்கு ஆதரவினைக் கோருவதாக பேரவையினரால் கோரப்பட்டது.

இதன்போது பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் புதிய அரசமைப்பு உருவாக்கம் இந்த ஆண்டு இடம்பெறும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்த போது, அதனை நையாண்டி செய்த தரப்புக்களுடன் இணைந்து செயற்படும் ஓர் அமைப்பு மேற்கொள்ளும் ஊர்வலம் என்பது ஒரு புறமிருக்க, இதே அமைப்பு தற்போது அரசமைப்பு மாற்றம் நிகழத்தான் போகின்றது என்பதை அறிந்து, அதற்கான மாதிரியைத் தயாரித்து வழங்குவதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் கூற்று சரியானதே என்பதை ஏற்று விட்டீர்கள்.இது ஒரு விடயமல்ல.

எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கும் போது, இது நடக்காது அல்லது இதில் பிரயோசனம் இல்லை என எதிர்த்துவிட்டு, பின்பு அதையே கோருவதன் மூலமாக, முன்பு நாம் எடுத்த நிலைப்பாடு சரியென நீங்கள் ஆமோதிப்பதாகவே கொள்ளவேண்டியுள்ளது. இவை அனைத்திற்கும் அப்பால், தற்போது புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் இறுதிக் கட்டத்தினைத் தொட்டு, அதனை நாடாளுமன்றத்தில் நவம்பரில் முன்வைப்பதற்கான பேச்சு வார்த்தையில் நாம் ஈடுபட்டுள்ளோம். அதற்கான பேச்சு வார்த்தையில் ஈடுபடும் தரப்பான நாமும், இதில் பங்கெடுப்பதென்பது இரட்டை நிலைப்பாடாக பன்னாட்டுச் சமூகம் நோக்கலாம். எனவே அதன் முடிவு தெரியாமல், இவ்வாறான செயல்களில் பங்கு கொள்ள முடியாது. இருப்பினும் மக்கள் பேரவையின் முதலாவது நிலைப்பாட்டில் நாமும் இணங்குகின்றோம். அவைதொடர்பில் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் தற்போதும் மிக இறுக்கமான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

இதனால் சில முன்னேற்றமும் கண்டுள்ளோம். ஆனாலும் ஊர்வலம் நடத்துவதான உங்கள் முடிவிற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. அது உரிமை. தடைபோடவும் முடியாது என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் , சி.சிறிதரன் ஆகியோரும் பேரவை சார்பில் மருத்துவ வல்லுநர்களான பூ. லக்ஸ்மன் , சி.சிவன்சுதன் மற்றும் பாலமுரளி, பங்குத்தந்தை ரவிச்சந்திரன் உட்பட ஏழுபேர் பங்கேற்றனர். எதிர்காலத்தில் அரசமைப்பு உருவாக்கத்தின் முன்னேற்றம் தொடர்பில் சந்தித்து உரையாடுவது எனவும் இதன்போது முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## நிரந்தர...

தனர். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே அந்தப் பிரதேச செயலகங்களுக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள் இந்தப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமது பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும், காணி பிணக்குகளிற்கு தீர்வை வழங்க வேண்டும், நிரந்தர வீடுகளை அமைத்துத் தரவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டங்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்கள் கூட்டத்திற்கு வரும் போது ஆரம்பிக்கப்பட்டன. மக்களுடைய போராட்டங்களை கேட்டறிந்து கொண்ட இணைத்தலைவர்கள் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களின் போது, இது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதாகத் தெரிவித்ததை அடுத்து போராட்டங்கள் கைவிடப்பட்டன. இந்தப் போராட்டங்களின் போது இணைத்தலைவர்களுக்கு கோரிக்கைகள் அடங்கிய மனுவும் கையளிக்கப்பட்டது. (வ-21)

(மற்றுமொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)

## தமிழ்...

டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடயத்தில் இதுவரை காலம் வழங்கிய வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை, பல வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் அறிவித்தனர்.

பன்னாட்டுச் சமூகத்தையும் மக்களையும் ஏமாற்றும் வகையிலேயே தம்மை விடுதலை செய்வதற்காக அரசு சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கின்ற போதிலும், அது காலத்தைக் கடத்தும் செயற்பாடு எனவும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.

(வ-21)



edexcel PEARSON London South Bank University WOLVERHAMPTON CIOB RICS

INTAKE NOW ON

Sharpen your skills with BCAS today for Colourful Careers tomorrow

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை
யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

UGC Recognized
TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

BMS BIOMEDICAL SCIENCE
BIOTECHNOLOGY

LLB LAW

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

18 YEARS
ISO 9001:2008

HOTLINE : 021 2219910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகளை அடுத்தாண்டு பாதுகாப்புக் கமரா கண்காணிக்கும்

## சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
அடுத்த வருடம் சகல சிறைச்சாலைகளிலும் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜெனரல் நிசான் தனசிங்க தெரிவித்தார்.
பாதுகாப்புக் கமராக்கள் முதலில் மஹர மற்றும் களுத்துறை சிறைச் சாலைகளிலேயே பொருத்தப்படவுள்ளன என்று சிறைச் சாலைகள் திணைக்கள ஆணையாளர் குறிப்பிட்டார்.
நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பாதுகாப் புக் கமரா பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என் றும் சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க தெரிவித்தார். (ற-5)

# கல்வி நிர்வாக சேவை தரம் III; 293 பேருக்கு நேர்முகத் தேர்வு

அச்சுவேலி, செப்.20
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ஆளணிக்கு (திறந்த நிலை) போட்டிப் பரீட்சை மூலமாக உயர் புள்ளி அடிப் படையில் நேர்முகத் தேர்வுக்கு 293 பேர் அழைக்கப்பட்டுள் ளனர்.
ஆளணிக்குத் தெரிவு செய்யப் படவுள்ள 219 பேருக்கு மேலதி கமாக 25 வீதமான தொகை யினர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பொது ஆளணிக்கு 265 பேரும், தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கு 14 பேரும், பொறி யியல் தொழில்நுட்பம் பாட நெறிக்கு 8 பேரும், உயிரியல் தொழில்நுட்பப் பாடநெறிக்கு 6பேரும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். 197 பேர்பொதுநிலை ஆளணிக்கும், 11பேர் தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கும், 6 பேர் பொறி யியல் தொழில்நுட்பப் பாட நெறிக்கும், 05பேர் உயிரியல் தொழில்நுட்பப் பாடநெறிக்கும் உதவிக் கல்விப்பணிப்பாளர் களாக நியமிக்கப்படவுள்ளனர்.
கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு உரிய நிலையங்கள் வழங்குவதற்கு முன்னர் இவர் களுக்குப் பயிற்சி அளிக் கப்படவுள்ளது.
நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டவர்களில் 26 பேர் தமிழர்கள். 8பேர் முஸ்லிம்கள்.
ஆர்.ராஜ் ரெனுசியஸ் - யாழ்ப் பாணம், கே.கஜனி - யாழ்ப்பா ணம், எஸ்.மைதிலி - திருகோண மலை, என்.எம்.எஸ்.அலி - அக்கரைபற்று, ஏ.ஏச்.முகமட் பசீல் - மல்வான, ஏ.பி.யோசேப் - முல்லைத் தீவு, சி.சுபகரன் மட் டக்களப்பு, ஏ.ரகீம் ஓட்டமாவடி, எஸ்.நிருஸன் யாழ்ப்பாணம், எஸ். திவ்வியா திருகோண மலை, ரி.அஞ்சலியோ லம்பேட் கொழும்பு, பி.பத்மரூபன் வவுனியா, ஜெ.தஜின் நிசா ஒட்ட மாவடி, எஸ்.ஜசிந்தன் திருகோண மலை, ம.பாலசுப்பிரமணியம் யாழ்ப்பாணம், எம்.எம்.சித்தி பாத்திமா பாலமுனை, பி.திவி கரன் மட்டக்களப்பு, எஸ்.வருணி திருகோணமலை, எஸ்.புவ னேந்திரன் யாழ்ப்பாணம், எம்.மாதுரி அக்கரைப்பற்று, எம்.எஸ்.என். முகமட் பொத்து வில், வை.சார்ல்ஸ் சஜீவன் மட் டக்களப்பு, என்.நவஜீவன் திரு கோணமலை, எம்.வைணவி மட் டக்களப்பு
ரி.சிவதேவி யாழ்ப்பாணம், கே.விக்கினராசா கொழும்பு, எஸ்.பிரியந்தினி, வவுனியா, ஜே.எம்.அஸீலாம், எஸ்.கல் பனா வட்டுக்கோட்டை, எஸ். அன் பரசி பருத்தித்துறை, எஸ்.குக நாதன் கொழும்பு, எஸ்.துசியந் தன் செங்கலடி, எம்.ஏ. அசீமா செங்கலடி, ஜெ.தாஜின் நிசா ஒட் டமாவடி ஆகியோரே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள னர். (ற-11)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மாணிக்கம் பூபாலசிங்கம்
(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்)
மண்ணில் 31.10.1953
விண்ணில் 03.10.2012
திதி:- அபரபக்க சதுர்த்தி
மாண்புடன் இம் மண்ணில் வாழ்ந்திட்ட எம் மாணிக்கமே
மீளாத் துயர் தந்து நான்காண்டு ஆனபோதும்
உங்களுக்கு ஈடு இணை இனி எங்களுக்கு யார்....?
நின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
நினைவுகளுடன்
தாயகம்,
மனைவி- பூ.கமலாதேவி.
மனற்பகுதி, புத்தூர்.
மகள் - பூ.கனிதா.
(Em 4723)(11.18)

## நூலகங்களுக்கு புத்தகம் வழங்கும் நிகழ்வில்

# தமிழ்ப் புத்தகங்கள் வழங்குவதற்கு ஒதுக்கிய கொட்டகைகள் குறைவு

## பாடசாலை அதிபர்கள் முறைப்பாடு

கொழும்பு, செப். 20
கல்வி அமைச்சால் நாடு முழு வதிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக் கான புத்தகங்களை வழங்கும் நிகழ்வில் மிகக் குறைந்த அள விலேயே தமிழ்ப் புத்தகங்களைக் காட்சிப்படுத்துவதற்கான கொட் டகைகள் வழங்கப்பட்டுள்ளன என்று குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.
பாடசாலை அதிபர்கள், இலங் கைக் கல்விச் சமூக சம்மேள னத்திடம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத் தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
அங்கு அமைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான கொட்ட கைகளில் இரண்டு கொட்டகை கள் மாத்திரமே தமிழ்ப் புத்தகங் களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன என்று அதிபர்கள் குற்றம் சுமத் தியுள்ளனர்.
அதனால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் ஒரே நேரத் தில் புத்தகங்களைத் தெரிவு செய் வதில் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்கின என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
சில புத்தகங்களுக்குத் தட்டுப் பாடுகள் நிலவியது என்றும் முறையிடப்பட்டுள்ளது.
இத்தகைய கண்காட்சிகள் எதிர் வரும் காலங்களில் நடத்தப்படும் பட்சத்தில், இந்தப் பிரச்சினை குறித்து தமது முழுமையான அவதானம் செலுத்தப்படும் என்று கல்வி ராஜாங்க அமைச்சர் வி.ராதா கிருஷ்ணன் தெரிவித்தார். (ற-4)

# கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, செப். 20
பிரபல பாடசாலைகளில் மருத் துவர்களின் பிள்ளைகளை உள் வாங்கும் சலுகை போன்று, கல்வித் துறைகளில் பணியாற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கல்வித் துறையின் கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.
கல்வித் துறைக்குள் பணியாற்றும் ஊழியர்களுக்கான சலுகை களைக் கழித்து மருத்துவர் களுக்கு மட்டும் எவ்வாறு சலுகை வழங்கலாம். இந்தச் சார்பு நடவடிக்கை கவலையளிக்கிறது என்று சங்கத்தின் செயலாளர் அஜித் கே. திலகரத்ன குறிப்பிட்டார்.
இது குறித்து அவதானம் செலுத்துமாறு கல்வி அமைச் சரிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். மூன்று வருடங்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள கல் வித்துறையின் கல்விசாரா ஊழியர்களின் பிள்ளைகளைப் பிரபல பாடசாலைகளில் உள்வாங்க சுற்றறிக்கை ஊடாக வாய்ப்பளிக் கப்பட்டுள்ளது. எனினும் அது செயற்படுத்தப்படுவதில்லை - என்றும் குறிப்பிட்டார். (ற-4)

# மேய்ச்சல் தரை இன்மையால் கால்நடை வளர்ப்போர் சிரமம்

## அப்துல்லா மஹ்ரூப் எம்.பி. சுட்டிக்காட்டு

மூதூர், செப். 20
கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்மையால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கால் நடை வளர்ப்பாளர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். கால்நடை களுக்கு மேய்ச்சல் தரையை ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அகில இலங்கை மக் கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோண மலைமாவட்ட நாடாளுமன்றஉறுப் பினருமான அப்துல்லா மஹ் ரூப் தெரிவித்தார்.
இந்த மாகாணத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் 17 சதவீதத்தைத் தேசிய பால் உற் பத்தியில் பங்களிப்புச் செய் கின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
சம்பூர் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய விவசாயக் கண்காட்சியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் நடை பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ற-40)

# அரச அலுவலருக்கான பயிற்சிகள் விரைவில்

யாழ்ப்பாணம், செப். 20
வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் நான்காவது காலாண்டுக்கான அரச அலுவலர்களுக்கான பயிற் சியை விரைவில் முன்னெடுக்கவுள்ளது.
வடமாகாணப் பிரதித் தலைமைச் செயலாளர் (ஆளணியும் பயிற்சி யும்) அ.சிவபாலசுந்தரம் இதற்கான விவரங்களைத் திரட்ட நட வடிக்கை எடுத்துள்ளார்.
அரச அலுவலர்களுக்கான பயிற்சியாளரை அரச நிறுவனத் தலைவர் தெரிவு செய்யும்போது இதுவரை பயிற்சி நெறியில் பங்குபற்றாதவராக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட அலுவலரை தொடர்ச்சியாகப் பயிற்சிக்கு அனுப்புவதைத் தவிர்த்தல் வேண்டும்.
சிகாஸ், அலுவலக முகாமைத்துவம், கடிதம் எழுதும் திறன், ஓட்டோ கட் சமூக அபிவிருத்தி உட்பட 40க்கும் மேற்பட்ட பயிற்சிகளை நான்காவது காலாண்டில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
விவரங்களைத் திரட்டி உரிய படிவத்தின் ஊடாக அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

# காக்கைதீவு மீன் சந்தைக்கான முன் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 20
நீதிமன்ற ஆலோசனைக்கமைய காக்கை தீவு இறங்குதுறையில் மீன்சந்தை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. முதற் கட்டமாக கரை யோரப் பாதுகாப்பு அமைச்சிடம் இதற்கான அனுமதி கோரப் பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் காக்கைதீவு இறங்குதுறையில் கூறுமண்டபத்துக்கு அருகில் பிரதேசசபையின் அனுமதி யின்றி சுகாதார விதிமுறை களுக்கு முரணான வகையில் அமைக்கப்பட்ட மீன்சந்தை குறித்துப் பிரதேசசபை நீதிமன் றம் மூலம் நடவடிக்கை எடுத்தது.
தற்போது மீனவர்களின் கோரிக் கையின் படி நீதிவானின் ஆலோ சனைக்கமையப் பொருத்தமான இடத்தில் சந்தை அமைக்கப் படவுள்ளது.
சந்தை அமைக்கப்படவுள்ள இடம் மணல் போட்டு நிரவ வேண்டியிருப்பதால் இதற்குத் தேவையான மணலைப் பெறு வதற்கு நடவடிக்கையெடுத் துள்ள பிரதேச சபைச் செயலாளர் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரின் உதவியை நாடி யுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டது. (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த ஆயுள்வேத கல்லூரியில் முறைகேடு என ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், செப். 20

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று மாணவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். தமது பிரச்சினைகள், சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் தரவேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று சுன்னாகத்தில் அமைந்துள்ள கல்லூரி வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாம் 46 ஆறாவது நாளாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

தமது கல்லூரி வட இலங்கை சுதேச மருத்தவ சபைக்குக் கீழ் இயங்குகிறது. வட மாகாண சபையால் வருடாந்தம் 4.5 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படுகிறது. அவற்றுக்கான அறிக்கைகள் இதுவரை மாணவர்களின் பார்வைக்கு வரவில்லை. 5 வருடங்களாக டிப்ளோமா கற்கை நெறி கற்பிக்கப்படுகிறது. குறித்த பாடப்பரப்பு அரசினால் அங்கீகரிக்கப்படவில்லை. அரசு வேலை வாய்ப்பு வழங்குவதும் இல்லை. ஆனால் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் போது அரசால் அங்கீகரிக்கப்பட்டது என்று எமக்கு தெரிவித்தனர்.

காலப்போக்கில் நாம் இதனை அறிந்து கொண்டோம். அரசுடன் இணைந்த கல்வி நிறுவனம் போன்று அரசியல்வாதிகளை தமது கொண்டாட்டங்களுக்கு விருந்தினர்களாக அழைத்தனர். மருந்து உற்பத்தி போன்ற கற்றல் பரிசோதனைக்கு உரிய மூலப் பொருள்களை நாம் எமது சொந்தச் செலவில் கொள்வனவு செய்து, பரிசோதனைகளில் ஈடுபடுகின்றோம். சுன்னாக தண்ணீரில் எண்ணெய் கலந்துள்ளதால், கல்லூரி வளாகத்தில் பயிரிடப்படும், மருத்துவதாவரங்களை பயன்படுத்த முடியாதுள் ளது.

மின்சார உற்பத்தி மையத்துக்கு அடுத்த வளாகமாக கல்லூரி அமைந்துள்ளதால், அதன் பாதிப்புகளும் எம்மைத் தாக்குகின்றன. எமது மருந்து உற்பத்தி நிலையத்துக்கு சில அடிகள் தொலைவில் மலசல கூடம் அமைந்துள்ளதால் எமது மருந்து உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாத சூழல் நிலவுகின்றது. மருந்து உற்பத்திக்குப் பயன்படும் இயந்திரங்களும் உரிய வகையில் இல்லை. முன்னதாக யாழில் இயங்கி வந்த கல்லூரி, தற்போது சுன்னாகத்தில் இயங்குவதால் நாம் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகிறோம்– என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

கற்பிக்கும் தமக்கு உரிய வகையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை - என்று அங்கிருந்த விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது வட இலங்கை சுதேச மருத்தவ சபைத் தலைவர் திருலோகமூர்த்தி தெரிவித்ததாவது:

மாணவர்களின் பிரச்சினைகளை நாம் அறிவோம். அவர்களுக்காக பலருடன் நாம் கலந்து ஆலோசிக்கிறோம். பல அதிகாரிகளுடன் குறைகளை முன்வைத்துள்ளோம். எம்மால் அரச வேலை வழங்க முடியாது. ஆனால் அதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். விரைவில் அவர்களுடைய கோரிக்கைகள் தீர்க்கப்படும் - என்று தெரிவித்தார். (ற-4,ரி4)

# கௌரவப் பிரச்சினையாக மாறியுள்ள புலமைப் பரிசில் பரீட்சைத் தேர்ச்சி

## பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் பத்மநாதன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.20

தற்காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சி அடைவது ஒரு கௌரவப் பிரச்சினையாக மாறியள்ளது. அனைத்துப் பெற்றோரும் தெரிந்து கொள்ளுங்கள். இந்தப் பரீட்சை மாணவர்களின் கல்வியைத் தீர்மானிக்காது. இந்தப் பரீட்சையில் தேர்ச்சி அடையாதவர்கள் பிற்காலத்தில் உயர் கல்வியில் சிறப்பாகப் பயின்று எதிர்காலத்தில் நல்ல நிலைமையில் இருக்கின்றார்கள். அதை உணர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வழிநடத்த வேண்டும்.

இவ்வாறு பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்தும் பாரதி விழா கடந்தவாரம் பாடசாலையின் ஒட்லி மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பத்மநாதன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவர்கள் தமது பாடசாலை வாழ்க்கையில் பல சவால்களை எதிர்நோக்குகிறார்கள். மாணவர்கள் காலை பாடசாலைக்கு வருகின்றனர். மாலை ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கிறனர். எந்தவித ஓய்வும் இன்றி தமது பாடசாலை வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.

புலமைப்பரிசில் பரீட்சை எழுத ஆயத்தமாகும் மாணவர்கள் படும் துயரம் பெரும் துயரம். தாய்கள் பக்கத்து வீட்டு பிள்ளை பள்ளிக்கூடத்தில் அதிக புள்ளி எடுத்துள்ளான். நீ என்ன செய்யப் போறாய் என்று கூறிப் பிள்ளைகளை பிழிந்து எடுக்கின்றனர். அது ஏற்புடையதல்ல – என்றார்.

நிகழ்வு அரங்கில் மாணவ, மாணவிகள் இணைந்து தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர். ஆசியுரையை கல்லூரி அதிபர் வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

பாரதிக்கோர் செய்தி என்ற தலைப்பில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கவிதை வழங்கினார். கவிதையில் இன்றைய காலத்து மாணவர்களின் நிலை, பெண்களின் பாதுகாப்பு, தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவுகள் என அனைத்தும் எடுத்துக்காட்டப்பட்டது.


பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் வில்லுப்பாட்டு நடைபெற்றது. தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் குறித்த மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். (ற-4,ரி1)

# கண்டாவளை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 20

கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் தெரிவித்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ற-ரி)



கிளிநொச்சி – வட்டக்கச்சியில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டுவிலகி, வடிகாலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. ஓட்டோவில் பயணித்த 3 பேர் காயமடைந்தனர். வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற ஓட்டோவே விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# வினைத்திறன் காண் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், செப்.20

மத்திய மற்றும் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கங்களால் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சகல தரங்களுக்குமான வினைத்திறன் காண் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் வகுப்புகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு யாழ். கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று சங்கச் செயலாளர் திருமதி க.விஜயலதா தெரிவித்தார். (ற-9)

# தொழில்நுட்ப அலுவலர் வெற்றிடத்தை தற்காலிக அலுவலர் கொண்டு நிரப்புக

## தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

தென்மராட்சி, செப்.20

வடமாகாண அரச அலுவலகங்களில் வெற்றிடமாகக் காணப்படும் தொழில்நுட்ப அலுவலர்களின் வெற்றிடத்தை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டால் மாகாண சபை உடனடியாகத் தற்காலிக ஏற்பாடாக ஓய்வு பெற்ற தொழில்நுட்பஅலுவலர்களை சேவைக்கு அழைத்து வேலைகளை விரைவில் பூர்த்தி செய்யவேண்டும்.

இவ்வாறு நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்முடிவெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையில் தொழில்நுட்ப அலுவலர் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அவர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் வேலைகள் முடிவுறாத நிலையில், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பும் அபாயம் உள்ளது என்று பொது மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அதன்போது இணைத் தலைவர் மாவை.சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய அரசு தொழில்நுட்ப அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரும் போது ஜீ.சீ.ஈ. உயர்தரச் சித்தியையும் வடமாகாண சபை விண்ணப்பங்கள் கோரும் போது ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் கட்டாயம் விஞ்ஞான பிரிவில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்று கோருவதால் வடமாகாணத்தைச் சேர்ந்த பலர் விண்ணப்பிக்க முடிவதில்லை. ஏன் இந்த நிலை என்று தெரியவில்லை. அதனால் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அலுவலகங்களில் பற்றாக்குறை காணப்படுகிறது.

தற்போது தொழில்நுட்ப அலுவலர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது அபிவிருத்திப் பணிகளைப் பின்னோக்கிச் செல்லும் நிலை காணப்படுகிறது.

பிரதேச அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி மீளச் செல்லாமல் தடுக்க, மாகாண சபை உடனடியாக தற்காலிக ஏற்பாடாக ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர்களை மீள்நியமனம் செய்து அபிவிருத்தி வேலைகளைத் துரித கதியில் முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வவுனியா வடக்கு பிரதேச சபையை சிங்கள மயமாக்குவதற்குச் சூழ்ச்சி

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா, செப். 20

வவுனியா வடக்குப் பிரதேச சபையை முழுமையாகச் சிங்கள மயமாக்கும் சூழ்ச்சியைத் தடுத்து நிறுத்தக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபையினர் அனைவரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வலியுறுத்தின.

இது குறித்துத் தெரிவிக்கப்பட்டாவது:

வவுனியா வடக்கு பிரதேச சபைப் பிரிவில் தற்போது சுமார் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களில் சிங்களவர் கிடையாது. வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு தற்போது வரை 14 உறுப்பினர்கள் தேர்வாகின்றனர். இறுதியாக 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தேர்வான 14 பேரில் 3 சிங்களப் பிரதிநிதிகள் தேர்வானமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்துவதோடு இது தொடர்பில் கேள்விகளும் எழுகின்றன.

சிங்கள மக்களே வாழாத பிரதேச சபைக்கு சிங்களப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவது தொடர்பில் மக்களால் அதிருப்தியும் வெளியிடப்பட்டது. முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தின் சில பகுதிகளையும் வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேச சபை அல்லாத பகுதிகளையும் உள்ளடக்கி சம்பத் நுவர பிரதேச செயலாளர் பிரிவில் 9 கிராம சேவகர் பிரிவு உள்ளது. அங்கு சுமார் 9 ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்கின்ற போதிலும் இவர்களுக்கென தனியான ஒரு பிரதேச சபை கிடையாது. அதில் 4 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 600 வாக்காளர்களை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் எல்லை நிர்ணயம் செய்து அவர்களுக்கு 4 வட்டாரங்களாகவும் பிரிவிடை செய்யப்பட்டுள்ளது. உடனடியாக சம் பத் நுவர பிரதேசத்தை ஒரு தனியான பிரதேச சபையாக மாற்ற ஆவன செய்ய வேண்டும். இல்லையெனில் வவுனியா வடக்கான நெடுங்கேணி முதல் கனகராயன் குளம், புளியங்குளம் உள்ளிட்ட பகுதிகளை இழக்க வேண்டிய சூழல் ஏற்படும்- என்று தெரிவிக்கப்பட்டது.

"பிரதேச சபை எல்லைப் பரப்புக்குள் சிங்கள மக்கள் வாழ்பவர்களாயின் அது தொடர்பில் அவர்களுக்கான எல்லை நிர்ணயம் செய்வது கடப்பாடு. ஆனால் எங்கோ வசிப்பவர்களுக்கு பிரதேச சபை இல்லை என்பதனைக் காரணம் காட்டி இன்னுமோர் சபையின் வளர்ச்சியை நசுக்கும் நோக்கில் இடம்பெறும் இவ்வாறான செயல்களையும் நல்லாட்சியின் பெயரில் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா என்ற கேள்வியும் எழுவதோடு, இதன் பின்னால் நிரந்தர சூழ்ச்சியும் உள்ளதோ என்ற அச்சம் மக்களுக்கு மட்டுமன்றி எமக்கும் உள்ளது"- என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா மாவட்டத்தின் உள்ளூராட்சிச் சபை வட்டார நிர்ணயத்தின் போதும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர் என்று உள்ளூராட்சிச் சபைகளின் வட்டார நிர்ணய சபை நிர்ணய குழு அங்கத்தவரான பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இதங்கு இரு வழிகளில் தீர்வு வழங்க முடியும். அந்த மக்களுக்கு என ஒரு தனியான பிரதேச சபையை உருவாக்கி அவர்களை அந்தச் சபையின் கீழ் இயங்க ஏற்பாடு செய்வது. அதே போன்று 4 வட்டாரங்களின் கீழ் வரும் சிங்கள மக்களையும் அதே மக்கள் வாழும் வவுனியா தெற்கு பிரதேச சபையுடன் இணைப் பது. அவர்களை வடக்குக்கு வெளியே உள்ள மாவட்ட பிரதேச சபைகளுடன் இணைக்க முடியாது. அவ்வாறு இணைப்பதானால் அது வேறு மாகாணம் என்ற ரீதியில் அது அரசியல் யாப்பு மாற்றத்தின் மூலம் மட்டுமே சாத்தியமாகும்- என்றும் குறிப்பிட்டார். (ற-4,101)




நீண்ட காலமாக இராணுவ வசம் இருந்த திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான மலையருவி சந்தைக் கட்டடம் அண்மையில் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது. சந்தையை இயங்க வைப்பதைத் தவிர வேறு எந்தத் தேவைக்கும் அதை நகர சபை வழங்கக்கூடாது என வலியுறுத்தி தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் திருகோணமலை நகரசபைக்கு முன்னால் மக்களால் பதாகைகளை ஏந்தி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-40)

# வலி.மேற்கு மண்டிகைக்குளத்தை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

வலி.மேற்கு கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட சங்கானை மண்டிகைக் குளமும் அதனோடு இணைந்த வாய்க்கால் மற்றும் அணைச்சுவர், வீதி என்பன பல தசாப்த காலமாகச் சீரமைக்கப்படாதுள்ளன. அவற்றைச் சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி.மேற்குப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூடத்தில் கலந்து கொண்ட பொது மக்கள், விவசாயிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத் தனர்.

வலி. மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத்தலைவர்கள் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது;

மண்டிகைக்குளம் சாராயப் போத்தல்களால் நிறைந்துள்ளது. சம்பந்தப்பட்ட கமநல சேவைகள் நிலையம் இதுவரை எந்தவித சீரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ளவில்லை. 2017 வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, மண்டிகைக்குளத்தை சீரமைப்புச் செய்ய இணைத் தலைமைகள் மற்றும் பிரதேச செயலர் முன்வர வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

# அதிகாரப் பகிர்வு மூலமாகவே தீர்வு

## அமைச்சர் மனோ திட்டவட்டம்

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தான் தீர்வு என்பதில் திட்டவட்டமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

இவ்வாறு தேசிய சகவாழ்வுக் கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

தேசிய சகவாழ்வுக் கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய சகவாழ்வு மேம்பாட்டை நோக்கிய ஊடகவியலாளர்களுக்கான இருநாள் செயலமர்வு யாழ். நகர விடுதி ஒன்றில் கடந்த 2 நாள்கள் நடத்தப்பட்டது.

அங்கு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

நாட்டில் புதிய யுகத்தை ஆரம்பித்துள்ளோம். மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அரசியல் மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடியாமல் இருந்தது. கடந்த ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் ஜனநாயக போராட்டங்களை முன்னெடுக்கவோ, ஊடக மாநாடுகளை நடத்தவோ முடியாமல் இருந்தது. தற்போது துப்பாக்கிகள், குண்டுகள், வன்முறைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். கலந்துரையாடல்களின் மூலம் நாட்டில் சகவாழ்வினை கட்டியெழுப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இனங்கள் மத்தியில் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த மக்கள் மத்தியில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். சமத்துவம் இல்லாவிடின், ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது. அடுத்தவர்களின் உரிமைகளைத் தட்டிப்பறிக்கவும் தேவையில்லை. எமது உரிமைகளை விட்டுக் கொடுக்கவும் தேவையில்லை. இந்த அரசில் எல்லாம் நடைபெற்றுவிட்டன என்று கூறமுடியாது. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். அரசியல் தீர்வு கிடைத்து விட்டது என்று சொல்லவரவில்லை. அரசியல் தீர்வினை நோக்கிய நகர்வு இருக்கின்றது.

சிங்கள மக்களுக்கு தமிழ் மக்கள் பற்றிய இரண்டு அச்சங்கள் இருக்கின்றன. தனிநாடு கோரி விடுவார்களோ மற்றும் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகி ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டு விடுவார்களோ என்ற நிலைப்பாடுகள் இருக்கின்றன. அதேபோன்று தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்கள் மீது இரண்டு அச்சங்கள் இருக்கின்றன. பன்மைத் தன்மை கொண்ட நாடாக சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதுவார்களா? என்ற அச்சம் நிலவுகின்றது.

தேசிய இனப் பிரச்சினைக்கான பாதை ஒன்றில் தற்போது பயணிக்கின்றோம். முழுமையாக தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை. படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (ற-106)

# போரால் இறந்தவர்களின் மனைவியரை விசாரணை என துன்புறுத்த வேண்டாம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்காவிடம் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 20

போரால் இறந்தவர்களின் மனைவியரை விசாரணை என்னும் பெயரில் பொலிஸார் தொடர்ந்தும் துன்புறுத்துவது குறித்து சட்டம் ஒழுங்கு அமைச்சர் சிறப்புக் கவனம் எடுக்க வேண்டும். அவர்கள் இடையூறின்றி வாழ வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்தார் .

நீண்ட காலமாக இடம்பெறும் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சாள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் இடம்பெற்ற போர் நிறைவுற்று 7 ஆண்டுகள் கடந்துள்ளன. போர் காரணமாக இறந்தவர்களின் மனைவியரை விசாரணை என்னும் பெயரில் பொலிஸார் தொடர்ந்தும் துன் புறுத்துவதனை சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் சிறப்பு[illegible] வேண்டும். அண்மையில் கலையழகன் என்பவரது மனைவியை இவ்வாறு விசாரணை என்னும் பெயரில் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் உள்ள புலனாய்வாளர்கள் துன்புறுத்துகின்றனர். தயவு செய்து அந்தப் பெண்களை நிம்மதியாக வாழ வழி விடுங்கள்.

பொலிஸார் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டுமானால் படித்துப் பட்டம் பெற்ற தமிழ் இளைஞர்களை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பணி நிலைக்கு நியமிக்க வேண்டும்.

கடற்படையினர் கூட சட்டவிரோதமாகவே [illegible]ஆம் திகதியன்று மன்னார்க் கடற்பரப்பில் வைத்து ஒரு படகுடன் 5 கிலோ தங்கத்தை மடக்கிப் பிடித்ததோடு ஒருவரையும் கைது செய்தனர். ஆனால் அவரை வேறு ஒருவரின் தலையீட்டால் சட்டத்தின் முன்பாக நிறுத்தாது கடற்படையினர் விடுவித்து விட்டனர். சட்டம் நீதி மன்ற நடவடிக்கை எல்லாம் படிக்காத பாமரனுக்கும் ஏழை, எளிய மக்களுக்கும் மட்டும் தானா?- என்று கேள்வி எழுப்பினார்.

பதிலளித்த கடற்படையினர் இது ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டு. இவ்வாறு ஒரு சம்பவம் தெரிவிக்கப்படவில்லை என்றனர். சம்பவத்தின்போது கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவரையும் தெரியும் என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் அவரின் பெயரைக் கடற்படையினரிடம் தெரிவித்தார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதி மலசலகூடங்களிலிருந்து துர்நாற்றம்

### பொது மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ். நகரின் நவீன சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள மலசல கூடங்கள் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன. அதனால் தாம் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றோம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

குறித்த மலசல கூடம் தினமும் துப்புரவு செய்தாலும் கூட துர்நாற்றம் வீசுகின்றது. மலசல கூடங்களைப் பாவிக்க முடியாது மக்கள் சிரமப்படுகின்றனர். பஸ் தரிப்பு நிலைய வைரவர் கோயிலை அண்டிய நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள மலசல கூடத்திலேயே இந்தத் துர்நாற்றம் வீசுவது கூடுதலாகக் காணப்படுகின்றது- என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த மலசல கூடங்கள் தினமும்துப்புரவுசெய்யப்பட்டுவருகின்றன. அதனைவிட மலசல கழிவுகளும் குறிக்கப்பட்ட காலங்களில் அகற்றப்படுகின்றன.

சில சமயங்களில் மலக் கழிவுகள் குழாய்களில் அடைக்கப்பட்டால் துர் நாற்றம் வீசலாம். உலக வங்கியின் உதவியுடன் நவீன சந்தைக்கட்டடப் பகுதியில் பொதுமலசல கூடம் விரைவில் அமைப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்.மாநகரப் பகுதியில் பல்வேறு இடங்களில் இந்தப்பொதுமலசலகூடங்கள் நவீன முறையில் அமைக்கப்படும்.

பஸ் நிலையப் பகுதி, குருநகர் சந்தை, கல்வியங்காட்டு சந்தை, நல்லூர் பிராமணக்கட்டுக்குளப் பகுதி, கொட்டடி மீன் சந்தை, பண்ணை துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகில் உள்ள யாழ்.மாநகர வளாகம் போன்ற இடங்களிலும் இந்த நவீன வடிவமைப்பிலான மலசல கூடங்கள் அமையவுள்ளன. நவீன சந்தைக்கட்டடப்பகுதியில் உள்ள மலசல கூடங்களை தற்போது சுகாதார முறையில் பராமரிப்பதற்கு மேலும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்று மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ந-4,17)




யாழ்.பிரதேச செயலகம் பழைய பூங்கா வளாக புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்து இரண்டு வருடங்களாகின்றன. பிரதான வீதியில் முன்பு இயங்கிய இடத்திலுள்ள பெயர்ப்பலகை இன்னமும் அகற்றப்படாதுள்ளது. இதனால் பொதுமக்கள் அங்குமிங்கும் அலையும் நிலை காணப்படுகிறது. (ந-135)

# கேரதீவு உப்பளத்துக்கு மீனவர்கள் மீண்டும் எதிர்ப்பு

### கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று தென்மராட்சி பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டம்



தென்மராட்சி, செப்.20

தென்மராட்சி தெற்கு, கேரதீவில் உப்பளம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்கள் நேற்று சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக மீண்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத் தினர்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்நேற்று நடைபெறவிருந்த போது அங்கு கூடிய கெற்பேலி, கோயிற்குடியிருப்பு, தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி, கச்சாய் பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கேரதீவுப் பகுதியில் உப்பளம் அமைப்பது தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள நெற் செய்கையாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களின் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து மாவட்டச் செயலர் தலைமையில் சாதக, பாதக விடயங்களைத் தெளிவுபடுத்தி அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி உப்பளம் அமைப்பது தொடர்பான விரிவான அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று சூழல் பாதுகாப்பு சபை மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளிடம் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகச் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரன் அறிவுறுத்தினார்.

இணைத் தலைவர்களில் ஒருவரான மாவை. சேனாதிராசா தெரிவித்ததாவது:

போரால் அழிவடைந்த எமது தாயகப் பிரதேசத்தில் பல்வேறு தொழில் திட்டங்களை உருவாக்க பலர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்கள் மாகாண சபையின் பரிசீலனையில் உள்ளன. தொழிற்சாலை அமைப்பதால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றாலும் பலரின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் செயற்பாட்டில் இறங்கக்கூடாது என்பது எமது நோக்கமாகும்.

முதலீட்டுத் திட்டங்களை வரவேற்கும் நாங்கள் மக்களின் வாழ்வாதாரத்துக்கு தீமை ஏற்படக்கூடாது என்பதில் கவனமாக உள்ளோம். அரச நிலங்கள் மாகாண சபைக்குச் சொந்தமானவை. அவை முதலமைச்சரின் அனுமதியுடனேயே வழங்கவேண்டும். அவ்வாறான நடவடிக்கையில் முதலமைச்சர் ஈடுபடவில்லை. சிலர் தப்பான கருத்துக்களை மக்களிடையே பரப்பி வருகின்றனர். ஆனையிறவு உப்பளத்தை விஸ்தரித்தால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதுடன் நாட்டின் உப்புத் தேவையை 60 வீதம் பூர்த்தி செய்யலாம்.

எமது பகுதியில் வேலை வாய்ப்பின்றிக் காணப்படும் இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களின் தேவைப்பாடுகளை உணர்ந்து மாகாணத்தில் தொழிற்றுறைகளை மேற்கொள்ள வேண்டியது எமது கடப்பாடாகும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இதனை நாங்கள் வெளியிட்டிருந்தோம். புலம்பெயர்ந்த நாடுகளில் தங்கியுள்ள எமது மக்களில்சிலர் இங்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விண்ணப்பித்துள்ளனர். முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அதே நேரத்தில் எமது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் பார்த்துக் கொள்ளவேண்டும் - என்றார்.

(ந-9)

## கிளிநொச்சி சந்தை தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதலீடுகள் உருவாக்கப்படும்

### மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

30 வருட கால போரால் பல உயிரிழப்புக்களை சந்தித்த கிளிநொச்சி மக்கள் வீடு வாசல்களையும் இழந்துள்ளனர். இடரை எண்ணி மனம் வெதும்பிக் கொண்டிருக்காது மீண்டும் வர்த்தகத்தை மேற்கொள்ளக் கூடியவர்களாக மாற வேண்டும். வர்த்தகர்களுக்கான முதலீட்டை உருவாக்கிக் கொடுக்க தீர்மானித்துள்ளோம். இவ்வாறு தமிழரசு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

காப்புறுதி செய்யப்படாத பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்புறுதிக்கு ஈடான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற தீ விபத்தில் முற்றாகச் சேதமடைந்த கிளிநொச்சி சந்தைக் கட்டடத்தை நேற்று மாலை நேரில் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது-

கிளிநொச்சி வர்த்தக சந்தை தீக்கிரையாகியமை சாதாரண மக்களுக்கு மிகப் பெரிய அழிவு. போரால் சொத்துக்கள் மற்றும் உறவுகளை இழந்த மக்கள், தமது வியர்வையைச் சிந்தி, வங்கிகளில் கடன் பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தற்போது அவர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப் பாணத்துக்கு கடந்த சனிக்கிழமை பய ணம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துரைத்தோம். அதற்கு அவர் வர்த்தகர்கள் காப்புறுதி செய்துள்ளார்களா? எனக் கேட்டார். வர்த்தகர்கள் காப்புறுதி செய்யவில்லை. தற்காலிக கொட்டகைகளில் சிறு வியாபாரங்களைச் செய்தார்கள் என்று கூறினேன். அவ்வாறாயின் அவர்களின் இழப்புக்குரிய மதிப்பீட்டைக் கூறுங்கள். அதற்கான ஈழப்பீட்டை எவ்வாறு ஈடு செய்ய முடியும் என்று பார்க்க முடியும் என்று கூறினார்.

காப்புறுதி செய்யப்படாத பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்புறுதிக்கு ஈடான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஆலோசிக்கின்றோம். பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் வங்கியில் பெற்றிருக்கும் கடன்களை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் பிரதமரிடம் கேட்கவிருக்கின்றோம்.

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் தீயணைப்பு இயந்திரம் இருக்க வேண்டும் என வலியுறுத்தவுள்ளோம்.

வர்த்தகர்களுக்கான முதலீட்டை உருவாக்கிக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். கிளிநொச்சி சந்தைக்கு நிரந்தரக் கட்டடம் உடனடியாகக் கட்ட முடியாது. அதுவரையும் தற்காலிக கொட்டில்களை அமைத்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் - என்றார். (ந-21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவன்சா தொற்று ஏற்பட்டால் சிகிச்சை அளிக்கும் வசதி இல்லை

## இலங்கை தாதிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.20
நாட்டில் இன்புளுவன்சா, எச். வன்.என்.வன்.(H1.N1) வைரஸ் தொற்றுக்குள்ளான பலர் இனங் காணப்பட்டுள்ளனர். அத்தகைய நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான உபகரணங் கள் மருத்துவமனைகளில் இல்லை.
இவ்வாறு இலங்கை தாதிகள் சங்கம் குற்றஞ்சாட்டியது.
சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்ததாவது:
இதுவரை இன்புளுவன்சா தொற்றுக்குள்ளான நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

> இதுவரை இன்புளுவன்சா தொற்றுக் குள்ளான நால்வர் அடையாளம் காணப்பட் டுள்ளனர். அவர்களில் இருவர் சிலாபம் மருத்து வனையில் சிகிச்சை பெற்று, சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தனர்.

அவர்களில் இருவர் சிலாபம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று, அது பயனளிக் காது உயிரிழந்தனர்.
இன்புளுவன்சா தொற்றுக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதில் பெரும் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது - என்றார்.
இதுகுறித்துச் சுகாதார அமைச்சின் கருத்தைப் பெற முடியவில்லை. (ஐ-4)

# திருமலை, பொலன்னறுவையில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு

## தொடரும் வறட்சியான காலநிலையால்

கொழும்பு, செப்.20
இலங்கையின் பல பகுதிகளில் அதிக வறட்சியான காலநிலை தொடர்ந்தும் நிலவுகின்றது. திருகோணமலை, பொலன்னறுவை மாவட்டங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.
பொலன்னறுவையில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் குடிதண்ணீர் இன்றித் தவிக்கின்றனர். திருகோணமலையின் பெரும்பாலான பகுதிகளில் பொதுமக்கள் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர் கொண்டுள்ளனர்.
பாதிக்கப்பட்டவர்களுக்குக் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# கடலில் மகன்கள் மூழ்கியதால் தந்தை, தாய் பரிதாப முடிவு

கொழும்பு, செப்.20
குளிக்கச் சென்ற தமது இரு மகன்கள் கடலுக்குள் மூழ்கிக் காணாமற் போனதால் மனமுடைந்த பெற்றோர் தவறான முடிவை எடுத்து தூக்கிட்டு இறந்தனர். கிழக்கில் உள்ள கல்குடா, பட்டியடிச் சேனைக் கிராமத்தில் நேற்று முன் தினம் இந்தச் சோகச் சம்பவம் நடந்தது.
பாசிக்குடாக் கடலில் நேற்றுமுன்தினம் நண்பர்களுடன் குளிக்கச் சென்றவர்களில் இரு சகோதாரர்கள் கடலில் மூழ்கிக் காணாமல் போயினர். சண்முகம் சதீஸ்குமார் (வயது 20), சண்முகம் சுரேஸ் (வயது - 18) ஆகியோரே காணாமல் போயினர்.
ஐவர் கடலுக்குள் குளிக்கச் சென்றனர் என்றும் அவர்கள் கடலுக்குள் மூழ்கியபோது மூவர் மீனவர்கள், சுழியோடிகள் உதவியுடன் மீட்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காணாமற் போன சகோதரர்களின் பெற்றோரான வேலுப்பிள்ளை சண்முகம் (வயது-54), யோகேஸ்வரி சண்முகம் (வயது-45) ஆகிய இருவரும் மனமுடைந்து வீட்டில் உள்ள மரமொன்றில் தூக்கிட்டு உயிரிழந்தனர்.
இந்தச் சம்பவம் குறித்த கிராமத்தைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.
காணாமற்போனவர்களைத் தேடும் பணியில் கடற்படையினரும், பிரதேச மீனவர்களும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். இதுவரை உடல்கள் கண்டெடுக்கப்படவில்லை.
காப்பாற்றப்பட்ட மூவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ-4)

# போராட்டங்கள் நடத்த புசல்லாவவில் தடை விதிப்பு

## இறந்தவரின் உடல் உறவினர்களிடம் ஒப்படைப்பு

கொழும்பு, செப். 20
புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டவரின் சடலம் உடற்கூற்றுச் சோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பதற்றம் ஏற்படாதிருப்பதற்காக நேற்றுப் பிற்பகல்வரை அந்தப் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளக் கூடாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
புசல்லாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கம்பளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.
புசல்லாவ ரொத்சைல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நடராஜா ரவிசந்திர னுக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு கடந்த சனிக் கிழமை புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார்.
குறித்த நபர் அடைக்கப்பட்டிருந்த கூண்டில் தூக்கிட்டு உயிரை மாய்த்தார் என்றும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அதையடுத்து பொலிஸ் நிலையத்தைச்சுற்றி வளைத்த பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். நேற்றுமுன்தினம் அங்கு பதற்றம் நீடித்தது.
உடனடியாக இரு பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டனர். புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் உள்ள அனைத்து பொலிஸாரையும் இடமாற்ற வேண்டும் என பொதுமக்கள் நேற்றுமுன்தினம் மாலை 3 மணி வரை கண்டி நுவரெலியா வீதியில் புசல்லாவ பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.
உடற்கூற்று பரிசோதனைக்குப் பின்னர் சடலம் நேற்றுமுன் தினம் இரவு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.
நல்லடக்கம் செய்யும் முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ போராட்டங்கள் நடத்த முடியாது என தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. (ஐ-4)

# மாத்தறை சிறைக்குள் கைதி சாவு!

கொழும்பு, செப்.20
மாத்தறைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதுகுறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும்தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரும் நேற்றுமுன்தினம் தூக்கிட்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி

கொழும்பு, செப்.20
பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பயிற்சி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
அண்மையில் பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரி ஆசிரியர்களாக நியமனம்பெற்ற ஆயிரத்து 35பேருக்கும் வதிவிடப் பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன என்றும் அமைச்சு குறிப்பிட்டது.
நாடு முழுவதுமுள்ள 5 மத்திய நிலையங்களில் பயிற்சிகள் நடைபெறும். இரண்டு கட்டமாக நடைபெறவுள்ள பயிற்சி நெறியின் முதற் கட்டம் கடந்த 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதிவரைபயிற்சிநெறிநடைபெறும். இரண்டாம் கட்டம் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறும். அதில் 435 ஆசிரியர்கள் கலந்து கொள்வர். பயிற்சியின் பின்னரே அவர்கள் தமக்குரிய பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.
மஹரகம தேசிய கல்விக் கல்லூரி, கண்டி மஹாவலி தேசிய கல்விக் கல்லூரி, வேயாங்கொட சியனே தேசிய கல்விக் கல்லூரி, களுத்துறை பஸ்துன்ரட்ட கல்விக் கல்லூரி, வவுனியா தேசிய கல்விக் கல்லூரி ஆகிய மத்திய நிலையங்களில் பயிற்சி நெறி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# வாடகைக்கு வாகனங்களை எடுத்து அவற்றை விற்று வந்த பலே ஆசாமி

கொழும்பு, செப்.20
வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனங்களில் வாகனங்களைப் பெற்று அவற்றை விற்பனை செய்தும், அடகு வைத்தும் ஏமாற்றினார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார். அவரால் ஏமாற்றப்பட்ட 10 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 21 வாகனங்கள் நீர்கொழும்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனம் நீர்கொழும்பு பிராந்திய சட்டத்தை நிலை நிறுத்தும் பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடு செய்தது. தமது நிறுவனத்தில் வாடகைக்குப்பெற்றமூன்றுவாகனங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்று அதில் குறிப்பிட்டிருந்தது.
அதேபோன்று வாடகைக்கு வாகனம் வழங்கும் வேறொரு நிறுவனமும் தமது 5 வாகனங்களைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்தது.
இரு நிறுவனங்களிலும் வாகனத்தை வாடகைகுப்பெற்றவர் வெயான்கொட, கட்டோவிட்டவைச் சேர்ந்த ஒருவர் என்று விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் நீர்கொழும்பு, அஷ்ரப்பா வீதியைச் சேர்ந்த அவரது சகோதரர் கைது செய்யப்பட்டார்.
இதேபோன்று யக்கல பிரதேசத்தில் வாடகைக்கு வாகனம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் 10 வாகனங்களும், நிட்டம்புவ பிரதேசத்தில் வாடகைக்கு வாகனம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் 3 வாகனங்களும் காணாமல் போயுள்ளன.
குறித்த வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டும், வேறு நபர்களிடம் அடகு வைக்கப்பட்டும் உள்ள நிலையிலும், வாடகைக்கு விடப்பட்ட நிலையிலும் நீர் கொழும்பிலும் அயல் பிரதேசங்களில்கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# நெல் உற்பத்தியில் தன்னிறைவு

கடந்த வருடம் அரிசி உற்பத்தியில் இலங்கை முழுத் தன்னிறைவு கண்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் அது கண்டறியப்பட்டுள்ளது.
இவ்வாறு யாழ். மாவட்ட புள்ளி விவரவியலாளர் ம.வித்தியானந்தன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
இலங்கையின் தற்போதைய மொத்த அரிசித் தேவையாக 24 லட்சத்து 37 ஆயிரத்து 926 மெற்றிக் தொன் வேண்டும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இருந்த போதிலும் கடந்த வருடம் 29 லட்சத்து 57 ஆயிரத்து 475 மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கையிருப்பில் இருந்த அரிசி 7 லட்சத்து 95 ஆயிரத்து 719 மெற்றிக் தொன் உள்ளது.
2 லட்சத்து 76 ஆயிரத்து 171 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் போர் நிறைவின் பின்னர் தற்போது அரிசித் தேவை யில் நாடு தன்னிறைவினை அடைந்துள்ளது. கடந்த வருடம் தேவையான அளவினை விடவும் 5 லட்சத்து 19 ஆயிரத்த 849 மெற்றிக் தொன் அரிசி மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
இலங்கையின் அதிக அரிசி உற்பத்தி மாவட்டங்களாக குருநாகல், பொலநறுவை, அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மிக்க குறைந்த உற்பத்தியே காணப்படுகின்றது. மாகாண ரீதியில் கணக்கிடும் வேளையில் அது போதுமானது.
நாட்டின் தேவையில் 37 வீத உருளைக் கிழங்கும், பெரிய வெங்காயம் 33 வீதமும், 47 வீதமான சிறிய வெங்காயமும் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. [illegible] வீதங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. சின்ன வெங்காய உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது - என்றார். (ஐ-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்கான உயிரின் தியாக நெய்தல் பயணம்

ந.லோகதயாளன்



புனித பயணத்தின் ஐந்தாம் நாள் இருள் கவிதல் என்பது திலீபனின் தியாக ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆறாவது நாள் ஆரம்பமும் அவனது உருக்கமும் ஏதோ ஒன்றை சுட்டி நின்றது. இந்த நிலையிலே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து உயர் அதிகாரியொருவர் யாழ்ப்பாணம் வருகை தருகிறார் என்பதான செய்தி நல்லையின் வீதியெங்கும் உலவுகிறது. அனைவரும் வேகம் கொள்கின்றனர். திலீபனின் தியாக வேள்வியின் கனதியையும் அவனைச் சூழ்ந்து உணர்வால் கூடியுள்ள மக்கள் எங்களைப் பார்த்தும் இந்தியா ஏதாவது ஓர் உத்தரவாதத்தினைப் பேச்சளவிற்கேனும் வழங்கும் என நம்பினர்.

ஆனாலும் கொழும்பில் இருந்து வருவோர் நல்லூருக்கு வரமாட்டார்கள் பலாலியிலேயே சந்திப்பு இடம்பெறும் என்பதான செய்தி மீண்டும் மக்களிடையே பரபரப்பாகிறது. உடன்பாடுகள் எட்டப்படும் என்ற நம்பிக்கையோடு அனைவரும் காத்திருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அன்ரன் பாலசிங்கம், யோகி உள்ளிட்ட குழுவினர் பேசுவதற்காகப் பலாலி நோக்கிப் புறப்படுகின்றனர். ஆனாலும் அவர்களின் பயண முடிவு என்பது எதிர்மாறானதாக இருந்தது. இந்தியத் தூதுவர் புலிகளைச் சந்திக்க வருகை தரவில்லை. மாறாக இந்திய இராணுவ பிரிகேடியர் ராகவன் உள்ளிட்ட படை அதிகாரிகளே வருகைதந்திருந்தனர். சந்திப்பின் இறுதியில் எந்தவிதமான உத்தரவாதங்களோ அல்லது உறுதியான பதில்களோ கிடைக்கவில்லை. தனித்து உங்கள் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்ற வார்த்தைகளும் போராட்டத்தினை கைவிடுங்கள் என்ற வலியுறுத்தலுமே பதிலுரையாக கிடைத்தது. திலீபனோடு பேசி பதிலளிப்பதாகக் கூறியபடி புலிகளும் அங்கிருந்து வெளியேறினர்.

பேச்சின் முடிவினை அறிந்துகொள்ள ஏனைய புலி உறுப்பினர்கள் ஆவலாய் இருந்தனர். சற்றும் தடுமாறாது நிதானமாக படுத்துறங்கியபடி இருந்தான் திலீபன். பேச்சின் முடிவுகள் எந்தப் பெறுமதியும் அற்றவை என்பதை அன்று இரவு வரை தனக்குத் தகவல் தரப்படாத ஊகத்தின் அடிப்படையிலே உணர்ந்துகொள்கிறான். இறுதியில் யோகி நடந்த சம்பவங்கள் தொடர்பில் திலீபனிடம் கூறுகிறார். எந்த சலனமுமின்றி புன்னகையை பதிலாக வழங்கினான். அனைவரும் உச்ச சோகத்தில் இருக்கின்றனர். கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் எங்கும் எதிரொலிக்கிறது.

எதிரொலியில் "வந்து பாரடா... வந்து பாரடா...! வாடா முன் வந்து ஓர் சேதி கூறடா...!" என்ற தொனிப்பு வீரமாய் படபடத்தது. எந்தவொரு செய்தியும் 8 ஆவது நாள் வரைக்கும் கிட்டவில்லை. திலீபனின் இயங்கு நிலை தளர்வுறுகிறது. மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகிறான். போராட் டம் இன்னமும் கனதியாகிறது.

நல்லூரில் உயிர்பெற்ற தியாகப் போராட்டம் வடக்கிலிருந்து கிழக்கு பகுதியெங்கும் விடுதலை உணர்வாகப் பரவுகின்றது. வடமராட்சியில் ஓர் மேடை அமைக்கப்பட்டு அங்கு சில மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் போராட தயாராகின்றனர். முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் போராளிகளும் தொடர் போராட்டத்திற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்திலே விபரீதங்களை சற்றே உணர்ந்து கொள்கிறது இந்தியா. போலி உத்தரவாதங்களை வழங்கத் தயாரானது.

இதன் பிரகாரம் 9ஆம் நாள் இந்தியத் தூதுவர் டிக்சிற் புலிகளைச் சந்திப்பதற்கு யாழ்ப்பாணம் வருகை தந்தார். அச் சந்திப்பானது மாலை 6-30 மணிவரை இடம்பெற்றது. தலைவர் மிக அமைதியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களில் இந்தியத் தரப்பில் அப்போதைய இந்தியத் தூதுவர் டிக்சிற், இந்தியப் படைகளின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், இலங்கையில் உள்ள அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னான்டஸ் , ஆகியோருடன் இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் தலைவர் வே. பிரபாகரன் உட்பட, பிரதித் தலைவர்.கோ. மகேந்திரராசா (மாத்தையா).அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர்) , செ. கோடீஸ்வரன் (வழக்கறிஞர்) , சிவானந்தசுந்தரம் ஆகிய பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். போராட்டத்தைக் கைவிடுங்கள் என்ற செய்தியாக அது அமைந்திருந்தது; உண்மையிலே மக்கள் உணர்வின் மேலீடு ஒட்டுமொத்தத் தேசத்திற்குமாகப் பரவி அது மக்கள் எதிர்ப்பாக மாறுவதை மளுங்கடிக்கும் நோக்கம் கொண்டே இந்த அறிவிப்பு இந்தியாவிடம் இருந்து அப்போது வெளிப் பட்டிருந்தது.

குறித்த செய்தி திலீபனிடம் தெரியப்படுத்தப்படுகின்றது. மெல்லக் கையசைத்தவன் வாய்ச் சொல்லின்றி எழுத்து மூலம் அதனைத் தர வேண்டும் என சைகையூடாக வெளிப்படுத்துகிறான். எழுத்தில் வழங்க முடியாது ஆனால் நிறைவேற்றப் படும் எனக் கூறினார் டிக்சிற். ஏற்க மறுத்த திலீபன் எழுத்தில் பதில் வழங்காது போனால் நேரில் வந்து இந்த மக்கள் கூட்டத்தின் முன்பாக கோரிக்கைகளை நிறைவேற்ற இந்தியா உறுதியளிக்கின்றது என சொல்லட்டும். நான் போராட்டத்தைக் கை விடுகின்றேன் என்கிறான். எந்தப் பதிலும் வரவில்லை. இந்தியாவின் நிஜ முகம் நயவஞ்சகமாக வெளிக்காட்டப்படுகிறது.

நிலமைகள் விபரீதம் அடைகின்றன. புலிகளின் முக்கிய தளபதிகள் அனைவரும் நல்லூரை வந்தடைகின்றனர். 10 ஆவது நாள் முதல் நிகழப்போகும் சம்பவங்களை புலிகள் மட்டுமல்ல மக்களும் ஓரளவு உணர ஆரம்பிக்கின்றனர். திலீபனின் உரிமைக்கான போராட்ட நெய்தல் பயணம் என்பது உயிரின் தியாக வலிமையோடு ஒன்றுகூடியபடியே அங்கலாய்ப்பின்றி நகர்ந்து கொண்டிருந்தது.

## இந்திய நபருக்கு மறியல்

கொழும்பு, செப். 20

வெளிநாட்டு நாணயங்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட இந்திய நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

12.3 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களைக்கடத்த முயற்சித்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டில் குறித்த நபர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த இந்தியப் பிரஜை சுகவீனமுற்றுள்ளார் என விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் நீதிவானிடம் அறிவித்ததன் பிரகாரம், சந்தேகந பரை நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்க நீதிவான் அனுமதி வழங்கினார். (ரு-4)

## தோட்ட தொழிலாளர்கள் திரண்டு தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, செப். 20

தலவாக்கலை மடக்கும்புற மிடில் டிவிசன் தோட்டத்தைச் சேர்ந்த 95க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை தோட்டத்தில் உள்ள முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை வழங்கவில்லை என்றும் சலுகைகளை உடனடியாக வழங்குமாறும் கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தோட்ட நிர்வாகத்தால் தேயிலை மலைகளை முறையாக பராமரிக்காமல் கைவிடப்பட்டுள்ளன என்றும், தேயிலை மலைகள் காடாகியதால் தற்போது வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தேயிலை மலைகள் காடாகியுள்ளதால் விசப் பூச்சிகள், விசப்பாம்புகள் மூலம் பல சிரமங்களை எதிர்நோக்கும் தொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாமல் அச்சத்துடன் தொழில் செய்ய வேண்டியுள்ளது என்று குற்றஞ்சாட்டும் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

தேயிலை மலைகளில் புற்கள் வளர்ந்துள்ளதால் அட்டைகள் அதிகரித்துள்ளன. அட்டை கடிப்பதால் பல நோய்கள் உண்டாகின்றன. பல தொழிலாளர்கள் நோய்வாய்ப் பட்டுள்ளனர். தொடர்ச்சியாக தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

தொழிலாளர்களின் நலன் கருதி தோட்ட நிர்வாகம் செயற்படாமல் தமது பிரச்சினைகளைக் கண்டு கொள்ளாமல் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது பிரச்சினைகளுக்கு தோட்ட நிர்வாகம், அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ரு-4)

## வாக்காளர் இடாப்பில் 28ஆம் திகதி வரையே மாற்றம்

கொழும்பு, செப். 20

நடப்பு வருடத்துக்கான வாக்காளர் இடாப்பு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இந்தமாதம் 28ஆம் திகதி வரையே இடம் பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டுக்கான வாக்காளர்கள் பெயர்கள் பதியப்பட்ட இடாப்புக்கள் காட்சியிடப்பட்டுள்ளன. அதில், ஏதும் மாற்றங்கள் இருப்பின் எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் வாக்காளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வாக்காளர் இடாப்புக்களை, தான் பதிவாகியுள்ள கிராமசேவையாளர் பிரிவிலும், உள்ளூராட்சி சபை காரியாலயங்களிலும், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் என்பவற்றில் பார்வையிடலாம் எனவும் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (ரு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களுக்கு வந்த சத்திய சோதனை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவுக்குப் பின்னர் ஏற்பட்ட தலைமை வெற்றிடத்தை நிரப்பும் தமிழர்களுக்கு இடையேயான போட்டி 2009இல் ஆரம்பமானது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னைப் பலமான சக்தியாக - தமிழ் மக்களின் முதன்மைத் தனிப் பிரதிநிதியாக - நிலை நிறுத்தியது. ஆனாலும் போட்டி இன்னும் முடிந்துவிடவில்லை.

இந்தப் போட்டியில் ஏற்கனவே தோற்றுப்போன சக்திகள், மக்கள் தம்மை நிராகரித்தமைக்கான காரணங்களைச் சீர்செய்யாமலேயே மீண்டும் தலைமையை அபகரிக்கத் துடிக்கின்றன. தருணம் பார்த்துக் காத்திருக்கின்றன. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்தத் தரப்புகள் "கூட்டமைப்புக்கும் ஒரு மாற்றுத் தேவை" என்ற முழக்கத்தோடு களமிறங்கித் தோற்றன. "மாற்றம்" என்ற முழக்கம் தெற்கில் வலுப்பெற்றிருந்த நிலையில், அதே முழக்கத்தை வடக்கிலும் தமக்குச் சாதமாக்க முயன்றன; முடியவில்லை. தமிழ் மக்கள் மிகத் தெளிவாக இந்தத் தரப்புக்களைப் புறமொதுக்கினர்.

ஆங்கிலேயர்களிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து யாரை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பதில் தமிழ் மக்கள் மிகத் தெளிவாகவே இருந்திருக்கின்றனர்; தடுமாற்றம் இருந்ததில்லை. தாயகம், சுயநிர்ணயம் என்பவற்றை அடைவதற்குத் தாம் வைத்த குறியை அடைவதற்குச் சாத்தியமான வழிகளில் முயன்ற உரிய சக்திகள் அனைத்தையும் காலத்திற்குக் காலம் மிகத் தெளிவாகவே ஆதரித்தனர்.

தந்தை செல்வாவையும், அதன் பின்னர் பெடியன்களையும், அதற்கும் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அது முடிந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் என அவர்களின் தெரிவுகள் பிசகியதே இல்லை. தமது வேணவாவை முன்கொண்டுசெல்லக்கூடியவை எனச் சரியாகக் கணித்தே இந்தத் தரப்புக்களை தமிழர்கள் ஆதரித்தார்கள். அதன் மூலம் தங்கள் வேணவாவை தொடர்ந்து தக்கவைத்து வெற்றியை நோக்கி ஒவ்வொரு அடியாக முன்னேறினார்கள். அதனால்தான் சாத்தியமான தெரிவுகளை முன்வைத்த தரப்புக்களை மட்டுமே ஆதரித்தார்கள்.

தீவிரக் கருத்துக்கொண்ட தரப்புகளும், மக்கள் தூக்கியெறிந்த நெகிழ்ச்சிக் கருத்துக்களை முன்வைத்த தரப்புகளும் எல்லாக் காலங்களிலும் இருக்கவே செய்தன. சாத்தியமற்ற அவற்றின் வழிகளுக்காகவே தமிழ் மக்கள் அவற்றை நிராகரித்தனர். ஆனாலும், மக்களைக் குழப்பி - அரசியல் அதிகாரத்தை மீண்டும் தமது கைகளுக்குள் எடுத்து - தமிழர்களின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் இந்தத் தோற்றுப்போன தரப்புகள் சோர்ந்து போகவில்லை. மீண்டும் மீண்டும் முயன்றுகொண்டே இருக்கின்றன.

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், தமிழ் விழாக்கள் என்ற பல்வேறு முகங்களோடு அந்தத் தரப்புகள் தமிழ் மக்களை வளைத்துப்போட முயல்கின்றன. எதிர்த் தரப்பில் நிலை குலைந்து நிற்கும் சிலரையும் தம்மோடு சேர்த்தால் தாம் வெற்றி பெற்றுவிடலாம் என்று - கருணாவை தம் பக்கம் வளைத்துக்கொண்ட சிங்கள அரசைப் போலவே - எண்ணுகின்றன. தமிழ் மக்களின் சிந்தனைத் தெளிவைப் புடம் போட அவை முயல்கின்றன. சத்தியசோதனைக்கு உள்ளாக்குகின்றன.

விரும்பியோ விரும்பாமலோ இந்தத் தரப்புகளின் போலி வேடங்களைத் தகர்க்க வேண்டியவர்களாகத் தமிழ் மக்கள் மாறியிருக்கிறார்கள். அவர்களிடம் தெளிவு இருக்கிறது.

# இரு தரப்புக்களது இறுக்கமான நிலைப்பாடு பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையே!

'தி ஜெருசலேம் போஸ்ட்' இஸ்ரேல் நாளிதழில் வெளியான ஆசிரிய தலையங்கம்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவும், பலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டதே மிகக் குறைவு. ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம் 2015இல் பாரிஸ் நகரில் இடம் பெற்றபோது இருவரும் சில வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டதோடு சரி. 2010ஆம் ஆண்டு முதல் இவ்விருவர் மத்தியில் பேச்சுவார்த்தை எதுவும் இருந்ததில்லை.

அமெரிக்க அதிபர் ஒபாமா கோரியதால், நெதன்யாகுவுக்கு விருப்பம் இல்லாத நிலையிலும், மேற்குக் கரைப் பகுதிகளில் குடியிருப்புகளை உருவாக்குவதை 10 மாதங்களுக்கு இஸ்ரேல் நிறுத்தி வைத்தது. ஆனாலும், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒன்பது மாதகாலம் கடந்த பிறகும் அப்பாஸ் அவரது கருத்துகளையோ, நடவடிக்கைகளையோ மாற்றிக்கொள்ளவில்லை. இஸ்ரேலை யூதர்களின் நாடாக அப்பாஸ் ஏற்றுக்கொண்டால், குடியிருப்புகள் கட்டுவதை நிறுத்தி வைத்துள்ள காலத்தை மேலும் நீடிப்பதாக நெதன்யாகு அறிவித்தார். அப்பாஸ் மறுத்துவிட்டார். ஒரு வாய்ப்புத் தவறிப் போனது.

எதிரிகளுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு மாற்றங்களை உருவாக்கும் ஆற்றல் உண்டு. எமது எதிரியோடு பேசும்போது அவரும் மனிதத்தன்மை உள்ளவர் என்று எம்மால் உணர முடியும். இட்சாக் ரபீனும், யாஸர் அரபாத்தும் கைகுலுக்கிய வரலாற்று நிகழ்வால் மாற்றம் எதுவும் வரவில்லை. அதற்குப் பிறகும் அரபாத் தொடர்ச்சியான பயங்கரவாதத் தாக்குதல்களைத்தான் தொடுத்தார்.

அப்பாஸை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் சந்திக்கத் தயார் என்று நெதன்யாகு பல சமயங்களில் தெளிவுபடுத்தியுள்ளார். குடியிருப்புக்களைக் கட்டுவதை நிறுத்த வேண்டும், பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று அப்பாஸ் முன் நிபந்தனைகள் விதித்தார். ஆனால், தற்போது எந்தவித முன் நிபந்தனைகளும் இல்லாமல் மாஸ்கோவில் நேரடிப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அப்பாஸ் அறிவித்துள்ளதாகப் பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார். ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, அப்பாஸ் அதற்குச் சம்மதித்திருப்பதாக அவர் கூறுகிறார். இதில் அப்பாஸின் உண்மையான நிலை என்னவென்று தெரியவில்லை. ஆனால் மறுபக்கத்தில் நெதன் யாகு சம்மதிக்காததால் இந்தக் கூட்டம் நடக்க வாய்ப்பில்லை என்றும் அப்பாஸே தெரிவித்துள்ளார்.

> இஸ்ரேலுடன் நட்புறவாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பலஸ்தீனர்களுக்கு உணர்த்த அப்பாஸ் தவறியுள்ளார். இஸ்ரேலை ஒரு பேய் போலவும் சித்திரிக்கிறார். இஸ்ரேலின் மக்களைக் கொல்லும் பயங்கரவாதிகளை அவர் போற்றிப் புகழ்கிறார். அவரது இத்தகைய போக்கால் அவர் நேரில் நெதன்யாகுவோடு பேச்சுவார்த்தை நடத்தினால், பலஸ்தீனத்தின் நோக்கங்களுக்கு அப்பாஸ் துரோகம் செய்துவிட்டார் என்பார்கள் பலஸ்தீனர்கள்.

இஸ்ரேலுடன் நட்புறவாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பலஸ்தீனர்களுக்கு உணர்த்த அப்பாஸ் தவறியுள்ளார். இஸ்ரேலை ஒரு பேய் போலவும் சித்திரிக்கிறார். இஸ்ரேலின் மக்களைக் கொல்லும் பயங்கரவாதிகளை அவர் போற்றிப் புகழ்கிறார். அவரது இத்தகைய போக்கால் அவர் நேரில் நெதன்யாகுவோடு பேச்சுவார்த்தை நடத்தினால், பலஸ்தீனத்தின் நோக்கங்களுக்கு அப்பாஸ் துரோகம் செய்துவிட்டார் என்பார்கள் பலஸ்தீனர்கள். அத்தகைய அரசியல் சூழலைத்தான் பலஸ்தீனத்தில் அப்பாஸ் உருவாக்கியுள்ளார்.

ரஷ்ய அதிபர் புடின், இரு தலைவர்களின் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தாலும், பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் மீதுள்ள எதிர்மறையான எண்ணத்தால், இஸ்ரேலுடன் ஏற்படும் சமாதான உடன்படிக்கை நடைமுறையில் சாத்தியப்படாது என்றுதான் கருதுவார்கள்.

ஆயுத மோதலுக்கு முடிவு கட்டுவதற்கான வாய்ப்புகளைக் கடந்த காலத்தில் அப்பாஸ் வீணடித்துவிட்டார். குறிப்பாக, 2008 சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது மேற்குக் கரையிலிருந்தும், கிழக்கு இஸ்ரேலின் அரபுப் பகுதிகளிலிருந்தும் படைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், பழைய நகரை சர்வதேச நாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கவும் இஸ்ரேல் முன்னாள் பிரதமர் எகுத் ஒல்மெர்த் முன்வந்தார். அப்பாஸ் அதையும் வீணடித்தார். அப்பாஸ், தற்போதைய களநிலைமைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்துகிற ஒரு நேரடிப் பேச்சுவார்த்தையை இஸ்ரேல் பிரதமரோடு நடத்துவதற்கு அவர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

*சுருக்கமாகத் தமிழில் :*
*த.நீதிராஜன்*

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.லோகதயாளன்

# கலைந்த கனவு!

## பொல்லாத அந்தப் பகிடிவதை

யாழ். பல்கலைக் கழக பகிடி வதை காரணமாகக் கல்வியை இழந்துதவிக்கும் கிளிநொச்சி திருநகர் இளைஞனின் தந்தையின் உள்ளக் குமுறலைப் போக்கப் பத்திரிகைச் செய்தியின் பின்னராவது பல்கலைக்கழக நிர்வாகம் முன்வர வேண்டும் என மூத்த கல்வியியலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

2016ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவில் இணைந்து அந்த இளைஞன் கல்வி கற்றவேளை, 3 மாதங்கள் மட்டுமே கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், சக மாணவர்களின் பகிடிவதை கட்டுக்கடங்காமலே சென்றுள்ளது. தினமும் கல்வி கற்கச் செல்லும் மனநிலை மாறி, ஏதோ கசாப்புக் கடைக்குச் செல்லும் பலி ஆட்டின் நிலையை அந்த இளைஞன் உணர்ந்துள்ளார்.

திருநகரில் பிறந்து, கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற மங்களதேவன் - விஜயகுமார் என்னும் மாணவனே 2016ஆம் ஆண்டில் வர்த்தகப் பிரிவில் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்று தமிழர்களின் கலாசார மையம் என வர்ணிக்கப்படும் யாழ். பல்கலைக் கழகத்துக்கு தேர்வானான்.

இவ்வாறு தேர்வானவன், கலாசாரத்துக்கு பெயர் போன யாழ்ப்பாணத்தில் தானே கற்றல் செயற்பாட்டுக்குச் செல்கின்றேன் என்ற பலத்த எதிர்பார்ப்புக்களுடன், பல்கலைக்கழகத்துக்குள் காலடி வைத்தவனுக்குப் பல்கலைக்கழக சக மாணவர்களது பகிடிவதைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் கடும் மன அழுத்தத்துக்கு உள்ளானான். தினமும் பெற்றோரிடம் அது குறித்து முறையிடலானான். பெற்றோர் தான் என் செய்வர்? மிகப் பின்தங்கிய, மிகவும் வறுமைப்பட்ட குடும்பம் அது.

இவ்வாறு தினமும் பகிடிவதை என ஆரம்பித்த சித்திரவதை, அறைகளில் பூட்டி வைத்து, அடி உதை கொடுக்கும் கட்டத்தையும் எட்டியது. இதனால் மனமுடைந்த விஜயகுமார் மானத்துக்காக உயிரே விட்ட இனமாச்சே, அதனால் மானத்துக்காகக் கல்வியையும் விடத் துணிந்தான். இனித் தாக்கினால் திருப்பித் தாக்குவேன் எனக் கூறியுள்ளான். சக மாணவர்கள் கண்டு கொள்ளவில்லை. இதனால் அடுத்த தடவை தாக்கப்பட்டபோது திருப்பித் தாக்கிய அவன் மன அழுத்தத்துடன் தனது உடைமைகளைச் சுமந்து வீடு திரும்பினான்.

இவ்வாறு வீடு சென்றவன் பல்கலைக்கழக கல்விக்காக மானத்தையும் அடைவு வைத்துத்தான் கற்கவேண்டுமானால், அந்தக் கல்வி இல்லாமலேயே வாழ்கின்றேன்- என்கிறான். மானம், மரியாதை, புகழை உயர்த்தக் கற்கும் நிலையில், இவற்றை இழக்காதிருக்கக் கற்காமலேயே இருக்கின்றேன் என ஒரு மாணவன் முடிவெடுப்பதானால், அவனுக்கு நேர்ந்த மன அழுத்தத்தின் உச்ச அளவை உணர்ந்து கொள்ள முடியும்.




இத்தகைய நிலைக்குட்பட்ட குறித்த இளைஞனைத் தேடிக் கண்டறிந்து விவரத்தை அறிய முயன்றோம். நீண்ட முயற்சியின் பின்பு அந்த இளைஞனைச் சந்திக்க முடிந்தது. இருப்பினும் கதைக்கவோ விவரம் தரவோ அஞ்சுகின்றார். இதன் காரணமாக அந்த இளைஞனது தந்தையைத் தேடினோம். ஒருவார கால முயற்சியின் பின்பு எமது முயற்சி கைகூடியது.

அந்த இளைஞனது தந்தையான மங்களதேவன் தெரிவித்த விவரங்கள் மேலும் நெஞ்சை இறுக்கின. 47 வயதேயான அவர், தனது நிலை தொடர்பில் விவரித்தார். குடும்பத்தில் விஜயகுமார் உள்ளிட்ட 6 பிள்ளைகள். இதில் விஜயகுமாரே அனைவரிலும் மூத்தவன். இவரின் கீழ் உள்ள ஐவரில் அடுத்த நிலை நால்வரும் பெண்கள், கடைசியாக உள்ளவன் மட்டுமே ஆண் பிள்ளை என்று மங்களதேவன் தமது குடும்பத்து நிலையை விவரித்தார். திருமணமாகி 6 பிள்ளைகளுடன் சிரமத்துடன் வாழ்க்கையை ஓட்ட நேர்ந்த நிலையிலும், இந்த கோர போர்க் காலத்திலும், எவ்வளவோ பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும், எனது மகனைக் கல்வி கற்பதில் ஊக்குவித்தேன். எனது தொழில் தேங்காய் விற்பனையே. அதன் மூலம் கிடைத்த குறைந்த வருமானத்தின் மூலமே குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தினேன். அந்த வருமானத்திலேயே கற்பித்தேன். எனது மகன் விஜயகுமார் இயற்கையாகவே கல்வியில் திறமை கொண்டிருந்ததால், மனதில் பல எதிர்பார்ப்புக்களுடன் கற்பித்தேன். ஓர் திறமையான பிள்ளை கற்கும் போது நான் பொருளாதாரச் சிரமத்தை வெளிக்காட்டாது முடிந்த வரை மகனது கற்றல் செயற்பாட்டுக்கான பணத்தேவையை வழங்கி உற்சாகப்படுத்தி வந்தேன்.

எதிர்பார்த்தது போன்று மகனும் நல்ல பெறுபேற்றைப் பெற்றான். குடும்பத்தில் மூத்தவன் தலை எடுத்தால் ஏனையவர்களும் அதன்வழி வந்து விடுவார்கள் என நம்பி நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ஆனால், அந்த எதிர்பார்ப்புகளுக்கு 3 மாதத்திலேயே மண் விழுந்து விட்டது. எனது பிள்ளை கற்றலை விட்டு வந்து நானும் வியாபாரம் செய்கின்றேன் என்கின்றான். நாம் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கதைத்து வேண்டிய ஒழுங்கு செய்கின்றோம் அல்லது எவராவது பெரியவர்கள் மூலம் கதைத்து நீ கல்வியைத் தொடரலாம் என்றால் அதற்கும் அஞ்சுகின்றான்.

தற்போது அதிகம் வற்புறுத்தினால், உங்களுக்கு நான் பாரமாக இருந்தால் சொல்லுங்கள்; பல்கலைக்கழகம் செல்வதைவிட உயிரை மாய்த்துக்கொள்கிறேன் எனத் தாயிடம் கூறுகின்றான். இதனால் எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதற்குமேல் வேறு பல்கலைக் கழகத்தில் இணைந்து கல்வியைத் தொடர வழி உண்டா என்பதும் எமக்குத் தெரியாது.

மகன் விஜயகுமாரது நிலைமையே இவ்வாறு என்றால், அடுத்த பிள்ளைகளும் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறஇயலுமா என்ற மன அச்சமும் பெற்றோரான எமக்கு ஏற்படுகின்றது. எம்மைப் போன்ற கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகளும் பட்டதாரிகளாக வரவேண்டும் எனக் கனவு கண்டோம். அது பலிக்க மாட்டாது என்று மனம் விரக்தி அடைகிறது. இருப்பினும் எனது முயற்சியை நான் கைவிடப்போவதில்லை. அடுத்த பெண் பிள்ளையையாவது ஓர் பட்டதாரியாக்கியே தீருவேன் என்றார் அந்தத் தந்தை மன உறுதியுடன்.

## மகிந்தவின் படத்தைப் பிரசுரித்து எங்களை வேதனைப்பட வையாதேங்கோ!

உதயன் பத்திரிகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் படங்களை அடிக்கடி அதுவும், பெரிய அளவிலான படமாகப் பிரசுரிக்கிறீர்கள். உதயன் பத்திரிகையை வாசிக்கும் போது மகிந்தவின் படங்கள் கண்ணில் தட்டுப்பட்டதும், ஒரு கணம் உதயன் மீது பொல்லாத கோபம் வருகிறது.

ஏனையா, மகிந்த ஏதோ சாதனை வீரரோ? அல்லது நல்ல ஆட்சித் தலைவரோ அல்லவே?

சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தன், மோர்சிங் வித்துவான் போன்றோரின் படங்களைப் போட்டீர்கள்; பெருமையாய் இருந்தது. அதுபோல் நல்ல மனிதர்களது படங்களைப் போடுங்கோவன். எனக்கு இப்போது 73 வயது நடக்கிறது. உலகத்திலை எந்த ஒரு நாட்டிலும் உயர்ந்த பதவியான ஜனாதிபதிப் பதவியில இருந்த எவரும், அந்தப் பதவி பறிபோனதும் அதிகாரம் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகித்ததை நான் கேள்விப்பட்டதில்லை. மீண்டும் ஒருநாள் ஜனாதிபதியாய் வந்திட வேணுமென்ட பதவி மோகத்தாலை தான், இப்படியும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கிறார். இன்னமும், தானே ஜனாதிபதி எண்ட நினைப்பு அவருக்கு. அதனாலதான் வெளிநாடுகளுக்குப் போய் வர ஆசைப்பட்டுப் போய் வாறார். அவரைப் பற்றி ஏதாவது செய்தி பிரசுரிக்க வேண்டி இருந்தால் அதனை வெறுமனே செய்தியாகப் பிரசுரியுங்கோ. படமெல்லாம் போட்டு அவருக்குக் 'கியாதி' எழுப்பவேண்டாம்.

குள்ளநரி ஜே.ஆர் கூட தமிழ் மக்களுக்கு இந்த அளவுக்கு நாசம் ஏற்படுத்தவில்லை. உலக நாடுகளுக்குப் பயந்து கொஞ்சம் கட்டுமட்டாய்த் தான் தமிழர்களுக்குக் கொடுமை புரிந்தார். ஆனால், இந்த மகிந்தவோ, எவரையும் கணக்கில் எடுக்காது விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு எத்தனை அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழித்தவர்.

எனவே, மகிந்தவின் படத்தை உதயனில் பிரசுரித்து தமிழ் மக்களை மேலும் மேலும் வேதனைப்பட வையாதேங்கோ!

உதயன் அபிமானி,
கிளிநொச்சி.

## சங்கானை மீன் சந்தை சுகாதாரச் சீர்கேடின்றிப் பாதுகாக்கப்படுமா?

சங்கானை மீன் சந்தைக்கென பல்வேறு சிரமங்களின் மத்தியில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் 'புறநெகு' திட்ட நிதியிலிருந்து புதிய கட்டடம் அமைக்கப்பட்டு மீன் சந்தை தற்போது புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்தையை இடம்மாற்றுவதற்கு பொதுமக்கள் வழங்கிய ஆதரவுக்கு முக்கிய காரணம், பழைய மீன் சந்தையின் சுகாதாரச் சீர்கேடே ஆகும். இந்தச் சந்தையை இடமாற்ற முன்னின்று உழைத்த சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை சார்பில் புதிய மீன் சந்தைக்குள் காகங்கள், நாய்கள் உள்ளே சென்று அசுத்தப்படுத்துவதைத் தடுத்து நிறுத்துவோம் என்ற உறுதி மொழியை பொதுமக்களுக்கு வழங்கியிருந்தோம். இருந்தும், இன்றுவரை காகங்கள், உள்ளே சென்று மீன் களின் மேல் எச்சமிட்டு வருகின்றன. இந்த விடயத்தைத் தடுக்குமாறு பொது மக்கள் எம்மைக் கோரி வருகின்றனர். எனவே, இரண்டு கதவுகளுக்கு இரும்புச் சங்கிலியைத் தொங்கவிடுவதனூடாக காகங்கள் உள்ளே செல்வதைத் தடுக்க முடியுமென நாம் நம்புகிறோம். இது குறித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து காகங்கள் உட்செல்வதைத் தடுக்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகத்தை பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

கு.குணஸ்ரீ, தலைவர்
சங்கானை. பட்டின அபிவிருத்திச் சபை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்த பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடகாவில் இன்று கலவரம் வெடிக்கலாம்

தமிழ்நாட்டுக்கு காவிரி நீரைப் பங்கிட்ட விவகாரத்தில் கர்நாடகா, தமிழ் நாடு என இரு மாநிலங்களிலும் பெரும் கலவரங்கள் வெடித்தன. தற்போது அங்கே ஓரளவு அமைதியான சூழல் நிலவுகின்ற நிலையில் இன்று கர்நாடகாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

கர்நாடகா அமைப்புக்களின் இந்த முடிவால் நேற்றுக் காலையிலிருந்து இரு மாநிலங்களின் எல்லையிலும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். கர்நாடகா பஸ்கள் கர்நாடகா எல்லையிலும் தமிழ் நாட்டு பஸ்கள் தமிழ் நாட்டு எல்லையிலும் தடுத்து நிறுத்தப்பட்டன.

கடந்த 6 ஆம் திகதியிலிருந்து இரு மாநிலங்களுக்கு இடையிலும் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை. 14 ஆவது நாளாக நேற்றும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இன்றும் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-ரி4)



கோப்புப் படம்



# பலூஜாவில் மீளக் குடியேறுகின்ற அரசு தரப்பு பொறுப்பேற்காத நி

பக்தாத், செப்.20

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வசமிருந்த பலுஜா நகரை அரச படைகள் போராடி மீட்டதன் பிற்பாடு, அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குறித்த பகுதிகளில் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் கடந்த இரண்டு வருடங்களாக ஈராக்கின் பலூஜா நகர் இருந்தது. இதனையடுத்து குறித்த அமைப்புக்கு எதிராக ஈராக் அரசும், ஏனைய பல நாடுகளும் தாக்குதல் நடத்தி வந்தன. இதன் வெற்றியாக பலூஜா நகர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து முழுவதுமாக மீட்கப்பட்டது. இதனையடுத்து பலூஜா நகர் மக்கள் குறித்த பகுதியில் மீண்டும் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

ஈராக் அரசின் கட்டுப்பாட்டுக்குள் பலூஜா நகர் வந்தபோதிலும், அந்த அரசு, மக்கள் மீளக்குடியமரக்கூடிய வகையில் குறித்த நகர் உள்ளதாக தெரிவிக்கவில்லை. அத்துடன் பலூஜா நகருக்கும், மக்களுக்கும் முழுமையான பாது காப்பு வழங்க முடியும் என்றும் குறிப்பிடவில்ல

பாதுகாப்பு இ

சொந்த இடங்

ஈராக்கில் இ

பாவுக்குள்

ளன. ஆனால்

ஒவ்வொருவ

முகவர்களுக்

பணவசதியற்

பலூஜாவுக்கு

கப்படுகிறது.

இந்தத் தகவ

அல் ஜசீரா

# காஷ்மீர் தாக்குதல் விவகாரம் பான் கீ-மூன் கடும் கண்டனம்



காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 சிப்பாய்கள் சாவடைந்தனர். ஆயுத தாரிகளின் இந்தத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள்சபையின்பொதுச் செயலாளர்பான் கீ-மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி போன்றோரும் தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

காஷ்மீர்எல்லையிலிருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் குறித்த இராணுவ முகாம் உள்ளது. தாக்குதலை அரங்கேற்ற திட்டமிட்ட ஆயுததாரிகள், நேற்றுமுன்தினம் அதிகாலை இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள பகுதிக்குத் தீவைத்துள்ளனர். தமது பகுதியில் தீ பரவுவதை உணர்ந்த இராணுவத்தினர் வெளியே வந்து பார்த்த போது, இயந்திரத் துப்பாக்கிகளால் ஆயுததாரிகள் சரமாரியான தாக்குதல் நடத்தினர். சம்பவ இடத்தில் 17 சிப்பாய்கள் சாவடைந்தனர், 19 சிப்பாய்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் நள்ளிரவு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மேலும் மூன்று சிப்பாய்கள் சாவடைந்தனர். இந்த நிலையில் குறித்த தாக்குதலுக்கு பன்னாடுகளிலும் இருந்து கண்டனங்கள் குவிந்துவருகிறது. காஷ்மீர் தாக்குதல் தொடர்பான செய்திகளை, ஐக்கிய நாடுகள் சபை மிக நெருக்கமாகக் கவனித்து வருகிறது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். தாக்குதலில் சாவடைந்த இந்திய இராணுவச் சிப்பாய்களின் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார்.

காஷ்மீர் இராணுவ முகாம் மீதான தாக்குதல் கோழைத்தனமான செயல். வெறுக்கத்தக்க செயல். இந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தண்டனையை அனுபவித்தே தீருவார்கள் என மோடி தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார்.

இந்தத் தகவலை இந்திய ஊடகமான தி இந்து வெளியிட்டது. (ம-ரி4)

காவிரி விவகாரம்

# பிரியாணிக்காக பஸ்களுக்கு தீ வைத்தாராம் இளம் பெண்

காவிரி நதிநீர் வன்முறையின் போது தமிழ்நாட்டின் தனியார் நிறுவனமொன்றைச் சேர்ந்த பஸ்கள் பல தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இளம்பெண் பிரியாணிக்கு ஆசைப்பட்டே, தான் தீ மூட்டினார் எனப் பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்.

தமிழ்நாட்டுக்கு காவிரி நீரைத் திறந்துவிட்டதையடுத்து கர்நாடகாவில் கலவரங்கள் வெடித்தன. தமிழ்நாட்டின் இலக்கத் தகடுகள் பொறிக்கப்பட்ட பல பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன. குறிப்பாக ஒரே நிறுவனத்தின் 42 குளிரூட்டப்பட்ட பஸ்கள் கொளுத்தப்பட்டன. இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்வலையைத் தோற்றுவித்தது. இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த சம்பவத்தின் பின்னணியில் பெண் ஒருவர் இருப்பது கண்டறியப்பட்டது. மேலதிக விசாரணைகளில் யசோத நகரைச் சேர்ந்த பாக்கியசிறி என்ற (வயது-22) இளம்பெண் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் அவர் தனது தவறை ஏற்றுக் கொண்டதுடன், தான் பிரியாணிக்கு ஆசைப்பட்டே குறித்த சம்பவத்தை செய்ததாகத் தெரிவித்தார். அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவரைத் தவிர மேலும் 9 பெண்கள் கர்நாடகாவில் கலவரத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சோமாலியா

### கார்க் குண்டு தாக்குதலில் இராணுவ அதிகாரி சாவு

மொகடிசு, செப்.20

சோமாலியாவில் இடம்பெற்ற தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் மூத்த இராணுவ அதிகாரி முகமட் றொபிள் ஜிமாத் சாவடைந்தார்.

றொபிள் ஜிமாத்தும், அவரது பாதுகாப்பு படைச் சிப்பாய்களும் சாலையில் காரில் சென்றுகொண்டிருந்த போது, குறிக்கிட்ட காரொன்று இராணுவ அதிகாரியின் காருடன் மோதியது. காருக்குள் இருந்த சக்தி வாய்ந்த வெடி குண்டுகள் வெடித்ததில் இராணுவ அதிகாரியும் அவரது பாதுகாப்பு சிப்பாய்களும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான அல் ஜசீரா வெளிப்படுத்தியது. (ம-ரி4)



# அமெரிக்கத் தாக்குதலுக்கு ஐ.எஸ்ஸே. பொறுப்பேற்பு



வோஷிங்டன், செப்.20

அமெரிக்காவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மூன்று தாக்குதலில் ஒரு தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நியூஜேர்சி, செல்சி பகுதிகளில் ஒரு மணிநேர இடைவெளியில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன. இதில் 29 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல்கள் நடைபெற்ற சில மணிநேர இடைவெளியில் நியூயோர்க் நகரின் வணிக வளாகம் ஒன்றில் நபரொருவர் 9 பேரைக் கத்தியால் குத்தினார். மூன்று பேர் கடுமையான காயங்களுக்கு ஆளாகினர். எவரும் சாவடையவில்லை. கத்தியால் குத்திய நபரை பொலிஸார் அதிரடியாகச் செயற்பட்டு சுட்டுக் கொன்றனர். இந்த நிலையில் குறித்த தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. இவற்றைவிட நேற்றையதினம் மேலும் சில பகுதிகளில் ஐந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. இதனால் நியூயோர்க் நகரில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

பிரதான பகுதிகளில் இடம்பெற்ற குறித்த தாக்குதல்களால், அமெரிக்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக சந்தேகம் வெளியிடப்பட்டது.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களான டொனால்ட் டரம், ஹிலாரி கிளிங்டன் இருவரும் குறித்த தாக்குதல்களுக்கு தமது கண்டனங்களைத் தெரிவித்தனர். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான சி.என்.என். வெளிப்படுத்தியது. (ம-ரி4)


## றனர் மக்கள் நிலையிலும்


வில்லை. மொத்தத்தில் தமக்குரிய
ப்பு இல்லாத நிலையில் மக்கள் தமது
இடங்களுக் குள் சென்றுள்ளனர்.
ல் இருந்து படகுகளின் மூலம் ஐரோப்
தள் செல்வதற்கு வாய்ப்புக்கள் உள்
ஆனால், அவ்வாறு செல்ல வேண்டுமாயின்
ாருவரும் குறிப்பிட்ட தொகைப் பணத்தை
களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு
சதியற்றவர்களே வேறு வழியில்லாமல்
வுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்
கிறது.
தகவல்களை பன்னாட்டு ஊடகமான
சீரா வெளிப்படுத்தியது. (ம-ரி4)

## புடினின் கட்சி அபார வெற்றி

ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் புடின் சார்ந்திருக்கும் ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சி அபார வெற்றிபெற்று மூன்றில் இரண்டு பங்கைக் கைப்பற்றியது.

ரஷ்ய நாடாளுமன்றம் 450 உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது. இதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. செல்லுபடியான மொத்த வாக்குகளின் அடிப்படையில் 450 தொகுதிகளில் 300 தொகுதிகளைக் கைப்பற்றி, மிகப் பெரும்வெற்றிபெற்றது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் சார்ந்திருக்கும் ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சி. (ம-ரி4)





சீனாவின் புகழ்பெற்ற புறோசலின் கோபுரம் இடிபாடுகளிலிருந்து மீண்டும் நிர்மாணிக்கப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கோபுரம், 150 வருடங்களுக்கு முன்னர் கிளர்ச்சிக் குழுவால் உடைக்கப்பட்டது. இந்த நிலையில் வா ஜியங் லிங் என்ற செல்வந்தர் குறித்த கோபுரத்தை தனது சொந்த நிதியிலிருந்து புனரமைத்தார். (ம-ரி4)

## ஜப்பானில்

# மிகப் பழைமையான காலத்து தூண்டில்கள் கண்டு பிடிப்பு

டோக்கியோ, செப்.20

23 ஆயிரம் வருடத்துக்கு முற்பட்ட காலத்தையுடைய மீன் கொக்கிகள் சில ஜப்பானிய கடல் தீவுக்குகையில் கண்டுபிடிக்கப்பட்டன.



கடல் உயிரினங்களின் ஓடுகளிலிருந்து அந்தத் தூண்டில்கள் தயாரிக்கப்பட்டதாகவும், இதுவரை கண்டெடுக்கப்பட்ட கடல் உபகரணங்களில் இதுவே மிகப் பழைமையானது என்றும்-ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். முன்னதாக பப்புவா, நியூகினியா தீவுகளில் 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்து கொக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான பி.பி.சி. வெளிப்படுத்தியது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாய்வானில் படகு விபத்து 13 பேர் சாவு: பலர் காயம்

பாங்கொக், செப்.20

தாய்வானின் புகழ்பெற்ற சுற்றுலாத் தளமான ஆயுத்தயா நகரில் 100 பேருடன் சென்ற படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் சாவடைந்தனர். இந்த அசம்பாவிதம் நேற்று நடைபெற்றது. ஆயுத்தயா நகரிலுள்ள புகழ்பெற்ற வட் சனாம் சாய் கோயிலுக்குச் சென்றவர்களே அவ்வாறு விபத்துக்குள்ளாகினர்.

பாலம் ஒன்றுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றதாக அறியவருகிறது. இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான பி.பி.சி. வெளிப்படுத்தியது. (ரி4)

# உங்கள் பெயரின் முதல் எழுத்துக் கூறும் ஜோதிட இரகசியம்



*(நேற்றைய 16 ஆம் பக்கத் தொடர்ச்சி..)*

M- தைரியம், அறிவு மற்றும் கடின உழைப்பைக் குறிக்கும். உண்மையான நட்பை உங்களால் கண்டு பிடிக்க முடியாது. நீங்கள் உண்மையுள்ள நண்ப னாக இருப்பீர்கள். அறிவுரை வழங்குவதில் வல்லவ ராக இருக்கும் உங்களுக்கு நம்பத்தகுந்த துணை கிடைக்கும்.

N- எழுத்து ஓவியத் திறனைக் குறிக்கும். துடிப்பு மற்றும், முயற்சி வேட்கையுடைய பண்பைக் கொண்டவரான உங்களைப் பிறரிடம் இருந்து விலக்கியே வைக்கும். அனைத்திலும் முழுமை யை எதிர்ப் பார்க்கும் நீங்கள், உங்கள் துணையை தேர்ந் தெடுப்பதில் மிகவும் அக்கறை கொள்வீர்கள்.

O- நீங்கள் ஆசிரியராகவோ, எழுத்தாளராகவோ வருவீர்கள். ஒழுக்கத்துடன் இருக்கும் நீங்கள், எது நல்லதோ, அதன் பக்கமே நிற்பீர்கள். உங்கள் துணையிடமும் அதே குணங்களைத் தான் எதிர்ப் பார்ப்பீர்கள்.

P- நீங்கள் திறமைசாலியாக, அறிவுக் கூர்மை மிக்கவராக, புதுமைமிக்கவராக இருப்பீர்கள். படபடவெனப் பேசும் உங்களுக்கு எப்படிக் குதூகல மாக இருப்பதுஎன்பதுதெரியும். உடல்தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், நல்ல அழ கான துணையைத்தான் தேடுவீர்கள்.

Q- நல்ல எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், நாடக ஆசிரியர்களாகவும், இசையமைப்பாளராக வும், நடிகர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக் குத் திடமான கருத்துக்கள் இருக்கும். அவர்களுக்கு தனித்துவமான கம்பீரம் இருக்கும்.

R- உண்மையான, கருணையான மற்றும் அன்பு மிக்க மனிதராக இருப்பீர்கள். சவால்கள் என்றால் உங்களுக்குப் பிடிக்கும். அதேபோல் அனைத் தையும் சுலபமாக எடுத்துக் கொள்வீர்கள். அமைதி யுடன் வாழ விரும்பும் நீங்கள், உங்களுக்கேற்ற நல்ல துணையைத் தேடுவீர்கள்.

S- எழுத்தானது பாலுணர்வு, கவர்ச்சி மற்றும் கொடை உணர்வை குறிக்கும். உங்களுக்கு கவர்ச்சி என்றால் பிடிக்கும். அனைவரின் கவ னத்தையும் ஈர்க்கவே விரும்புவீர்கள். புதிய உத்தி கள், நிகழ்வுகள் போன்றவைகளை உருவாக்கி, அதனை வெற்றிபெற வைக்கக் கடினமாக உழைப் பீர்கள்.

T- எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பீர்கள். சில நேரம் அளவு கடந்த சுறுசுறுப்பால் உங்களால் உறவுகளை பராமரிக்க முடியாதுபோகும். உங்கள் தொழிலில் கவனம் செலுத்த விரும்பும் உங்க ளுக்கு, நினைத்தபடி வேலை நடைபெறவில்லை என்றால் மன வலி உண்டாகும். மனதளவில் திட மானவராக விளங்கும் நீங்கள், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவீர்கள்.

U- அறிவுமிக்க தனித்துவமான இந்த நபர்கள் சிறந்த ஓவியர்கள் மற்றும் எழுத்தாளர்களாக விளங்குவார்கள். எதையும் ஒழுங்கற்ற முறையில் பராமரிக்காமல் செயற்படுவார்கள். அதனால் இவர் களுடன் வாழ்வது சற்றுக் கடினமாக விளங்கும். ஒருத்தரை திருமணம் செய்வதற்கு பதில் பல பேரு டன் உறவில் ஈடுபடும் அனுபவம் கிட்டும்.

V- நீங்கள் ஒரு நடைமுறைவாதியாகத் திகழ்வீர்கள். உண்மையுள்ள, காதல் உள்ளம் கொண்ட, மென் மையான இதயம் உள்ளவராக விளங்குவீர்கள். ஆற்றல் வாய்ந்த குணத்துடன் இருப்பதால், வாழ்க்கையில் பலவற்றைச் சாதிப்பீர்கள்.

W- கொடை உள்ளத்துடன் இருப்பீர்கள். வாழ்க் கையின் எந்த இரகசியத்தையும் உங்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். மனதில் பட்டதைப் பேசும் நீங்கள் தெரிந்தே எதையும் மறைப்பதில்லை.

X- சொகுசை விரும்பும் உங்களை சுலபமாக வழிநடத்தலாம். ஆனால் ஒப்பிய பொறுப்புக்களில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்பமாட்டீர்கள். வாழ்க் கையில் சொகுசையும், சுகத்தையும் எதிர்ப் பார்ப்பீர்கள். இயற்கையாகவே வலியப்போய் எதிர்பாலினரிடம் அதிகமாகப் பழகுவீர்கள்.

Y- சுதந்திரத்தை குறிக்கும். நீங்கள் ஒரு துணிச்சல் மிக்க தொழிலதிபராக இருப்பீர்கள். எந்த ஒரு இடர் பாட்டைச் சந்திக்கவும் தயங்கமாட்டீர்கள். செயற் றிட்ட முன்னேற்றமுடைய யோசிப்பாளரான நீங் கள் பிறரை ஈர்ப்பீர்கள். நீங்கள், வாழ்க்கையில் நடக்கும் நல்லதை பார்த்து மகிழ்வீர்கள்.

Z- எழுத்தை உடைய பெயரைப் பார்ப்பது அரிது. இவர்களைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருக்க வேண்டும். இவர்கள் ஒரு சிறந்த அதிகாரியாக இருப்பார்கள். பிறரை பற்றி நன்கு புரிந்து கொள் வார்கள்.

# தாவரங்கள் இயற்கையின் கொடை

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

தாவரங்கள் மனிதனுக்கும் மண்ணுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் ஆற்றி வரும் நன்மைகள் அளப்பரியன. மரங்கள் செடி கொடிகளின் மகத்துவம் நன்கு உணரப்பட்டுள்ளது. மரங்களை, வீட்டு மரங்கள்,காட்டு மரங்கள், கோயில் மரங்கள் எனப் பல வகைப்படுத்தலாம். கோயில் மரங்களான ஆல், அரசு,வேம்பு, இத்தி, கொன்றை, வில்லவம் ஆகியன தேவையான ஒட்சிசனைத் தருகின்றன. வீட்டு மரங்கள், கோயில் மரங்கள் என்பவற்றில் இருந்துதான் மங்கல விடயங்களுக்கான இலைகள், கொடிகள் சேகரிக்கப்படுகின்றன. மலர்கள், கோயில் மற்றும் வீட்டுச் செடிகளில் இருந்து பறிக்கப்படுகின்றன. மல்லிகை, முல்லை, கனகாம்பரம், தாமரை, செவ்வந்தி, செம்பரத்தை, அல்லி, அரளிப்பூ, வாடாமல்லி, சூரிகாந்தி என்பவை மலர்களில் அடங்குகின்றன.

மலர்மாலை என்பது எமது பண்பாட்டுச் சின்னம். இன்று இந்த வழக்கம் மாறி போலியான கிண்கிணி மாலைகளை வரவேற்பு நிகழ்வுகளில் போடுகின்றனர். யாவும் காலம் செய்த கோலம். உணவை உண்ணப் பயன்படும் வாழையிலை உடல் நலத்துக்கு உகந்தது. சுற்றுப்புறச் சூழலுக்கு நட்பானது. மணம் வீசும் துளசி இலைகள் மருந்தாகப் பயன்படும். பெரிய மரங்களுடன் எமது வாழ்வும் பண்பாடும் பின்னிப் பிணைந்துள்ளன.

நிழல் தரும் மரங்கள் கல்விக் கூடங்களாக, சந்தை களாக, சமூக சேவை மன்றங்களாக மிளிர்ந்து வந்துள்ளமை வரலாறு. பல குளிர் சாதன இயந்திரங்கள் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக ஓடுவதனால் ஏற்படும் குளிர்ச்சியை ஒரு மரம் தன் நிழல் மூலம் தந்து உதவுகின்றது. பதினெட்டுப் பேருக்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவை ஓர் ஏக்கரில் உள்ள மரங்கள் தருகின்றன. இது பேராசிரியர் டி.எம்.தாஸ் நீண்ட ஆய்வில் கண்ட உண்மைகள்.. மேலும் மண்சத்தைப் பாதுகாத்தல். காற்றின் ஈரப்பதனைப் பாதுகாத்தல், உணவுச்சத்து அளிப்பு ஆகியன தாவரங்களின் பணிகள். சுவிற்சர்லாந்து பசுமையை நேசிக்கும் நாடு. அங்குள்ள விளம்பரம் இது தான்.

மனிதா! உலகில் உள்ள கடைசி மீனையும் பிடித்துவிட்டாய்! கடைசி மரத்தையும் வெட்டி விட்டாய்! அடுத்து என்ன செய்யப்போகிறாய் என்பதை நினைவில் வைத்து, இயற்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க இடமளிக்க வேண்டாம். இறுதியாக மரம், செடி, கொடி, ஆகியவைகளை நேசித்து நட்ட மரங்களை, தானாக வளர்ந்த தாவரங்களைக் காப்பாற்றி புதிதாக மரங்களை நடுவோம். கட்டட மயமாக்கத்திலிருந்து விடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசேகரன் சக்தீனா

# போர் அச்சுறுத்தல் ஏற்பட்டபோதும் மூடப்படாது இயங்கிய கல்லூரி

*நேற்றைய தினம் வெளியான '200 ஆண்டுச் சாதனையுடன் யாழ்.மத்திய கல்லூரி" என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி...)*

நான் பாடசாலைக்கு வரும் போது கூட நினைக்கவில்லை இவ்வளவு தூரம் என்னால் சாதிக்கமுடியும் என்று.

என்னுடைய இப்போதைய 30 வருட காலத்தினுள் யாழ்.மத்தியகல்லூரியில் படித்த 13 வருடங்கள் மறக்க முடியாதவை. என்னைப் புடம்போட்டு சிறந்த மாணவனாக உருவா க்கிய காலங்கள் அவை. நான் வேறொரு பாடசாலையில் இணைந்திருந்தால் எனது பாடசாலை எனக்கு அளித்த வாய்ப்புக்கள், ஊக்குவிப்புக்கள் கிடைத்திருக்குமா என்பதும் சமூகத்தில் அனைவராலும் அறியப்பட்டவனாக இருந்திருப்பேனா என்பதும் இன்றுவரை எனக்குள்ள சந்தேகம். இன்று என்னை சமூகத்தில் ஒருவனாக சிறந்த மனிதனாக இனங்காண வைத்திருப்பது எனது பாடசாலைதான் என்பதை பெருமையுடன் கூறுவேன்.

எங்களுடைய யாழ்ப்பாணத்துக்குப் பலவற்றை எமது பாடசாலை அறிமுகப்படுத்தி இருக்கிறது. எமது பாடசாலை இருநூறாவது ஆண்டை முன்னிட்டு நடத்திய நடைபவனியில் குறிப்பிட்டது போன்றே வடக்கின் நாகரிகத்தின் முன்னோடிகள் என்ற தலைப்பிலேயே நாங்கள் அதனை மேற்கொண்டிருந்தோம்.

என்னுடைய பள்ளிக் காலத்தில் நான் சாரணியத்தின் துடுப்புத்தலைவனாக இருக்க முடிந்தது. சேவைக்கழகத்தின் தலைவனாகவும் அறிவிப்பாளர் கழகத்தின் தலைவனாகவும் விவாதக் கழகத்தின் தலைவனாகவும் இருக்கமுடிந்தது. மூத்த மாணவத் தலைவனாக 2001 ஆம் ஆண்டு இருக்க முடிந்தது.

எங்களுடைய பாடசாலை ஒரு அரசபாடசாலை. எங்களுடைய பாடசாலைக்கு அதிபர்களாக, ஆசிரியர்களாக பணியாற்ற வருபவர்கள் எங்களுடைய பாடசாலையின் பண்பாடுகளை அறியாதவர்களாக இருந்தாலும் காலப்போக்கில் சிறந்த பண்பாடுகளை வளர்ப்பவர்களாக இருப்பார்கள். இப்பொழுது பாடசாலையை விட்டு வெளியில் இருந்தாலும் என் பள்ளி எனக்களித்தவைகளை மறக்கமுடிவதில்லை. சிறந்த ஆசிரியத்துவத்தில் மதிப்புமிக்கவர்க்ளாக எம்மை உருவாக்கி இருக்கின்றது என்றார்.

> எங்களுடைய பாடசாலை ஒரு அரச பாடசாலை. எங்களுடைய பாட சாலைக்கு அதிபர்களாக ஆசிரியர்களாக பணியாற்ற வருபவர்கள் எங்களுடைய பாடசாலையின் பண்பாடுகளை அறியாதவர்களாக இருந்தாலும் காலப்போக்கில் சிறந்த பண்பாடுகளை வளர்ப்பவர்களாக இருப்பார்கள். இப்பொழுது பாடசாலையை விட்டு வெளியில் இருந்தாலும் என் பள்ளி எனக்களித் தவைகளை மறக்கமுடிவதில்லை.







தொடர்ந்து யாழ்.மத்திய கல்லூரியின் பழையமாணவர் சங்கச் செயலாளராகவும், இலங்கை சமூக பாதுகாப்புச் சபை வடபிராந்திய மூத்த இணைப்பதிகாரியாகப் பணிபுரியும் பாக்கியராசா பிரதீபன் கூறும் பொழுது எனது இருப்பிடத்துக்கு அண்மையில் பல பாடசாலைகள் இருந்தன. ஆனால், எனது பெற்றோரின் விருப்பு மத்திய கல்லூரியில்தான். நான் கல்வி கற்க வேண்டும் என்று. அவர்களின் ஆசைப்படி எனது பரம்பரையில் மூன்றாவது தலைமுறையாக நானும் மத்திய கல்லூரியில் இணைந்தேன். 1985- 1998ஆம் ஆண்டு வரை அதாவது 13 வருடங்கள் மத்திய கல்லூரியுடனான எனது வாழ்வாக இருந்தது. நான் கல்வி கற்றுக் கொண்டிருந்த பொழுது எமது பாடசாலைக்கு அண்மையில் உள்ள யாழ்.கோட்டையில் இராணுவ முகாம் அமைந்திருந்தது. அந்த இராணுவ முகாமில் அடிக்கடி எறிகணைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெறுவது வழக்கம். ஆகையால், எமது பாடசாலை மாணவர்களின் தொகை 250 ஆகக் குறைவடைந்தது. அந்தச் சூழ்நிலையில் கோட்டை இராணுவ முகாமில் இருந்து வந்த துப்பாக்கிச்சன்னத்துக்கு இலக்காகி எங்களுடைய மாணவ சபையின் தலைவனாக இருந்த மாணவன் பொன். விபுலானந் பாடசாலையிலே உயிர்நீத்த சம்பவமும் நடந்தது. அந்தச் சம்பவத்தின்பின் மேலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. இந்தக் காரணத்தால் பாடசாலையை மூடவேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், பெற்றோர்கள் இதனை விரும்பவில்லை. அதாவது அப்பொழுது கல்வி கற்றுக் கொண்டிருந்த 250 மாணவர்களின் பெற்றோர்கள் இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. யாழ். மத்திய கல்லூரி இடம்மாறக் கூடாது என்பதையே பெற்றோர்கள் விரும்பினார்கள். அந்தப் பெற்றோரின் விருப்பம் போலவே அவர்களின் எண்ணம் போலவே எமது பாடசாலை இன்று வளர்ந்துள்ளது.

நானும் ஒரு வணிக பீடமாணவனாக தொழில்மாணிப் பட்டப் படிப்பை முடிப்பதற்கும் என் பாடசாலை தான் காரணம். இது என் பாடசாலைக்கு நான் கொடுத்த மரியாதை. என்னைப் போன்றே இன்று எமது நாட்டிலும் பிறநாடுகளிலும் சிறந்த பதவிகளில் பலர் இருக்கிறார்கள். இதைவிட யாழ். மத்திய கல்லூரித் தாய்க்கு வேறென்ன வேண்டும் என்றார்.

மலேசியன் பிறிமியர் லீக்கினால் நடத்தப்படுகின்ற கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வரும் மத்திய கல்லூரியின் மாணவன். எட்வேட் எடின் தனது பள்ளிக்கால அனுபவங்களை பகிர்ந்தபோது, படிப்பு என்பதைவிட முழுக்க முழுக்க விளையாட்டுதான் எனது குறிக்கோளாக இருந்தது.

ஆரம்பக்கல்வியின் சில வகுப்புக்களை நாம் மரத்தின் கீழிலிருந்தும் தொடர்ந்திருக்கிறோம். 1996ஆம் ஆண்டாக இருந்தது. எமது பாடசாலைக் கட்டடங்கள் போரால் அழிவடைந்த காலம். அப்பொழுது அதிபராக இருந்தவர் இராசதுரை. அவரை மாதிரி ஒரு அதிபரை நான் இன்னும்பார்க்கவில்லை. கூறப்போனால் அவர் இப்பொழுது காலமாகி விட்டாலும், அவர் இப்பொழுது இருந்திருந்தால் எமது கல்லூரியின் நிலை வேறு. மிகவும் துடிதுடிப்பான மனிதர். என்னையும் அவரின் கைகள் தட்டிக் கொடுத்திருக்கின்றன. எனக்கு ஓடுவது என்றால் பயம். அப்பொழுது அவர் தந்த நம்பிக்கை நீ பயப்படாததை உன்னால் முடியும்; உன்னை நீ சோர விடாதே என்பார். தேசிய மட்டத்தில் சம்பியனாக ஆக்கியது அவரின் அந்த தட்டிக் கொடுப்புக்கள்தான். இன்றும் கூட என் வாழ்க்கையின் தனிப்பட்ட வளர்ச்சிக்குக் காரணம் மத்திய கல்லூரிதான் என்பதில் மாற்றமில்லை என்றார்.

யாழ். மத்திய கல்லூரி தனது இருநூறாவது ஆண்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடன் கொண்டாடி மகிழ்ந்துள்ளது. இந்த விழாவை பலர் ஆசியுடன் பெரும் விழாவாகக் கொண்டாடியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுபேறு

சங்கருக்குப் பத்து வயது. இந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்ற உள்ளான். அவனது பிரதேசத்திலிருந்து இதுவரை எவரும் அந்தத் தேர்வில் சித்தியடையவில்லை. தேர்வின் பெறுபேறு வெளியிடப்படும் காலங்களில் ஓரிரு புள்ளிகளால் தமது பிள்ளைகள் தவறிவிட்டதாக அப்பகுதி பெற்றோரால் கூறப்படுவ துண்டு.

அவனது கிராமத்தவர்கள் படிப்பில் பெரிதாக அக்கறை காட்டுவது இல்லை. சண்டை சச்சரவென்றால் முன்னுக்கு நிற் பார்கள். கோடு கச்சேரி ஏறுவதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.



முரண்பாடு ஏற்பட்டால் எவர் பக்கம் சரி பிழையென சீர் தூக்கிப் பார்க்கமாட்டார்கள். எவர் பலசாலியென்றே பார்ப்பர். சின்னச் சண்டையென்றாலும் குஞ்சு குருமன்களும் களத்தில் இறங்கி விடுவர். பெரியோரைக் கனம் பண்ணுவதில்லை; உறவுமுறை பார்ப்பதுமில்லை; பெற்றோர்கள் சொல்லித் திருத்துவதுமில்லை.

சங்கரின் அப்பப்பா சங்கரப்பிள்ளை. அவர் தனது பேரனைத் தரம் ஐந்து புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடையச் செய்ய உறுதி பூண்டார். பல புத்திமதிகளை அவனுக்குக் கூறுவார். படிப்பின் பயன்பற்றி எடுத்துரைப்பார். அவனில் மிகக் கரிசனை கொண்டார்.

அன்று ஒரு நாள் சங்கரின் வீட்டு வேலியுடன் இறந்த நாய் ஒன்று வீசப்பட்டிருந்தது. அயல் வீட்டு வீரவாகுவின் வேலையாகத்தான் அது இருக்கும் என ஓரளவு அவர்களுக்குப் புரிந்தது. வீரவாகு வீட்டு நாய்தான் என அதனை இனங்கண்டனர். வீரவாகு ஒரு சண்டியன். சண்டையை அவரது விருப்புக்குரிய ஒரு செயலாகக் கொண்டவர். சங்கரின் தந்தையும் இலேசப்பட்டவரல்ல. இதனால், சண்டை நடக்கும் என சங்கர் எதிர்பார்த்தான். சங்கருக்குச் சண்டையென்றால் ஒருவித பயம். கூச்சல் குழப்பம் அவனுக்கு அறவே பிடிக்காது.

சங்கரின் அப்பா வீட்டுக்கு வந்ததும் இறந்த நாயை எவரோ இழுத்து வந்து அவர்களது காணிக்கருகில் போட்டிருப்பதைக் கண்டார். அது. எவரின் வேலையாக இருக்குமென்றும் அவருக்குத் தெரியும். அவரது முகத்தில் கோபம் கொப்பளித்தது. வாழை மரத்துள் மறைத்து சொருகி வைக்கப்பட்டிருந்த வாளை உருகி எடுத்தார். வீரவாகுவும் சண்டைக்குத் தாயாராக இருப்பதை சாடைமாடையாக சங்கர் அறிந்து வைத்திருந்தான்.

தனது அப்பப்பாவிடம் தனது தந்தையை மறிக்கும்படி சங்கர் மன்றாடினான். தனது தந்தை சண்டைபிடிக்கப் போகாவிட்டால், தான் எப்படியும் புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைவேன் என உறுதி கூறினான். சண்டை நடந்தால் தான் படிக்கவே மாட்டான் எனவும் மறைமுகமாக எச்சரித்தான்.

சங்கரப்பிள்ளை தனது மகனின் காலில் விழாத குறையாக கெஞ்சிக் கேட்டுச் சண்டைக்குப் போகாமல் மறித்தார். சங்கரின் அப்பாவின் கோபம் தணியவில்லை. அவர் குமுறிக் கொண்டே இருந்தார்.

சங்கரும், அப்பப்பா சங்கரப்பிள்ளையும் இறந்த நாயை கொழுக்கி ஒன்றால் வளவினுள் இழுத்து வந்தனர். இரண்டு எலுமிச்சை மரங் களிடையே அதனை ஆழக் குழி தோண்டி அதனுள் புதைத்தனர்.

சில மாதங்களில் அந்த எலுச்சை மரம் ஒரு காலமும் இல்லாதவாறு காய்த்துக் குலுங்கியது. சங்கரின் தந்தை அவற்றைச் சந்தைக்கு எடுத்துச் சென்றார். ஊரில் அந்தக் காலப்பகுதியில் போதிய எலுமிச்சம்பழம் விளையவில்லை. ஆதலால் கிலோ அறுநூறு ரூபாவுக்கு விற்கப்பட்டது. சங்கரின் தந்தை ஆறு கிலோவுக்கான காசைக் கொண்டு வந்து வீட்டுக்குக் கொடுத்தார்.

அயல் வீட்டு வீரவாகுவின் மகன், இருபது ரூபாக் காசுடன் வந்தான். தனது தாயார் ஒரு எலுமிச்சம் பழம் வாங்கி வரச் சொன்னதாகக் கேட்டான். சங்கரின் தந்தை நான்கைந்து எலுமிச்சம் பழங்களைக் கொடுத்து விட்டார். காசு வாங்கவில்லை. அவரது புண்ணியத்தில் தான் இந்தமுறை எலுமிச்சை காய்த்துக் குலுங்கியதாகக் கூறிக் குதூகலமடைந்தார். அவர்களது செத்த நாய் உரமாகியதால் தான் அவ்வாறு காய்த்துக் கொட்டியதாக நம்பினார்.

அதனைப் பார்த்துச் சங்கர் மகிழ்ந்தான். எலுமிச்சை மரத்தின் பெறுபேற்றை விட தனது புலமைப்பரிசில் தேர்வு பெறுபேறு இன்னும் சிறப்பாக இருக்குமென தனது அப்பப்பாவிடம் சங்கர் கூறினான். "அதுதான் எனக்குத் தெரியுமே" என்று கூறி சங்கரைக் கட்டியணைத்தார். சங்கரப்பிள்ளை. இதைப்பார்த்த சங்கரின் அப்பாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

செ.செல்வதாசன், அரியாலை

# வரலாற்றில் இன்றைய தினம்

1948 - அறிவியல் வளர்ச்சிக்கான அமெரிக்கச் சங்கம் உருவாக்கப்பட்டது.

1854 - அல்மா போர்; பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் துருப்புகளால், கிறீமியாவில் ரஷ்யப் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

1857 - கிழக்கிந்தியக் கம்பனிக்கு ஆதரவான துருப்புகளால், டெல்லி மீளக் கைப்பற்றப்பட்டதையடுத்து 185ஆம் ஆண்டின் இந்தியக் கலகம் முடிவுக்கு வந்தது.

1881 - ஜேம்ஸ் ஏ.கார்பீல்ட்ஸ் சாவடைந்ததையடுத்து காலையில் அமெரிக்க ஜனாதிபதியாக செஸ்டர் ஏ.ஆர்தர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

1893 - பெற்றோலில் இயங்கும் வாகனம் முதன் முதலாக அமெரிக்காவில் வீதி ஓட்டத்தில் பரீட்சிக்கப்பட்டது.

1942 - உக்ரைன் லெற்சிவ் பேரிடரில் இரண்டு நாள்களில் 3000 வரையான யூதர்கள் ஜேர்மனியரால் படுகொலை செய்யப்பட்டனர்.

1946 - இரண்டாம் உலகப் போரால் 7 ஆண்டுகள் தாமதித்த கேன்ஸ் திரைப்பட விழா முதன்முறையாக நடைபெற்றது.

1977 - வியட்நாம் சோஷலிஸக் குடியரசு ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதிக்கப்பட்டது.

1984 - லெபனான் நாட்டின், பெய்ரூட்டில், அமெரிக்கத் தூதராலயம் தற்கொலைக் குண்டுதாரியால் தாக்கப்பட்டதில் 22 பேர் உயிரிழந்தனர்.

2001 - பயங்கரவாதத்தின் மீதான போரை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் காங்கிரஸ் அமர்வில் பிரகடனம் செய்தார்.


2002 - ஆலயத்துக்குள் புகுந்து குதிரை வாகனம் திருட்டு. சண்டிலிப்பாயில் சம்பவம்.

- நாடாளுமன்ற உறுப்பினர் விமலின் உடைமைகள் பற்றி லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை.

2006 - ஏ-9 வீதி உடன்படிக்கைக்கு உட்பட்டது, மாற்றுப் பாதை சாத்தியமேயில்லை என புலிகள் வட்டாரம் கிளிநொச்சியில் தெரிவிப்பு.

- நிபந்தனையற்ற பேச்சுக்கு இணங்கியதற்கு தலைவர் பிரபாவுக்கு யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளால் நன்றி தெரிவிப்பு.

# ஏன் ஓட்டம்



எலியாரே எலியாரே ஏன் ஓட்டம்
எவரைக் கண்டு தான் ஓட்டம்
பூனை மாமா எந்தன் பின்னால்
வருவதைக் கண்டு தான் ஓட்டம்
பூனையாரே பூனையாரே ஏன் ஓட்டம்
எவரைக் கண்டு தான் ஓட்டம்
நாய் மாமா எந்தன் பின்னால்
வருவதைக் கண்டு தான் ஓட்டம்
நாயாரே நாயாரே ஏன் ஓட்டம்
எவரைக் கண்டு தான் ஓட்டம்
சிறுத்தை மாமா எந்தன் பின்னால்
வருவதைக் கண்டுதான் ஓட்டம்
சிறுத்தையாரே சிறுத்தையாரே ஏன் ஓட்டம்
எவரைக் கண்டு தான் ஓட்டம்
சீறும் சிங்கமாமா எந்தன் பின்னால்
வருவதைக் கண்டு தான் ஓட்டம்
சிங்கத்தாரே சிங்கத்தாதே ஏன் ஓட்டம்
எவரைக் கண்டுதான் ஓட்டம்
வேட்டையாடும் மனிதன் அவன்
வேட்டுச் சத்தம் கேட்டதனால்தான் ஓட்டம்

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமிய வாழ்வின் சிறப்புக்கள்

பளையூர் பா.பாலாஜினி

இயந்திரங்களுக்குள் கட்டுப்பட்டு அவசர வாழ்க்கை வாழுகின்ற இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் மக்களைக் கவர்ந்திழுப்பது நகரமயமாக்கல் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த அளவுக்கு உலகின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் நகரங்களை நோக்கி மக்களின் இடப்பெயர்வு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் சனத்தொகைப் பெருக்கம் அதிகமாகி நகரங்களுக்குப் புறத்தே சேரிக்குடியிருப்புகள் உருவாகுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தச் சேரிக்குடியிருப்புகளில் வாழ்பவர்கள் பலவகை இன்னல்களை அனுபவிப்பதோடு, ஏனைய மக்களுக்கும் பெரும் இன்னல்களைக் கொடுக்கின்றார்கள்.

இந்த சேரி வாழ் மக்கள், வீடு, உணவு, வேலைவாய்ப்பு என எந்தவித வசதியுமின்றி வாழ்கின்றனர். இதனால் தம் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கொலை, களவு முதலிய சட்டத்துக்குப் புறம்பானகாரியங்களில் ஈடுபடுகின்றனர். நகர்ப்புறங்களில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் இவர்களேயாவார். மேலும் தங்குமிட வசதியில்லாது வீதிகளிலும் கூடாரங்களிலும் வாழ்வதால் பல சமூகக் கலாசாரச் சீரழிவுகளும் ஏற்படுகின்றன. அத்தோடு வீதியோரங்களில் மலங்கழித்தல், குளித்தல் முதலியவற்றில் ஈடுபடுவதனால் இளம் சந்ததியினரின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கி விடுகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்தி, இவர்களுக்கு சிறந்த தொரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு எவ்வளவோ முயற்சி செய்தாலும், இவர்கள் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனர். அதிலும் பெண்களில் பலர் வறுமையைத் தணிப்பதற்காக விபச்சாரத் தொழிலிலும் ஈடுபடுவதைக் காணக்கூடியதாகஉள்ளது. இந்தக் குடியிருப்புகளானவை இலங்கை, இந்தியா உட்பட அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் பெருகி வருகின்றன.

இந்த சேரிக்குடியிருப்புக்கள் எவ்வாறு உருவாகின்றன. இது வரை சிந்தித்தீர்களா? நகர வாழ்க்கையில் மோகம் கொண்ட மக்கள் கூட்டத்தினர் அதன் வசதியாலும், ஆடம்பர மோகத்தாலும் கவரப்பட்டு கிராமப் பகுதிகளில் உள்ள தங்கள் வீடுகள், நிலங்களை விற்று நகரத்துக்கு வந்துவிடுகின்றார்கள். இவ்வாறு நகரத்துக்கு வந்தவர்களில் பாதிப் பேருக்கு வாழ்வதற்கு நல்ல இடமும் மாடிக் குடியிருப்பும் கிடைத்து விடுகின்றது. மீதிப் பேர் தங்குவதற்கு இடத்தைத் தேடிச் சில நாள்கள் அலைந்து திரிவதிலேயே அவர்களின் கையிலிருந்த முழுப்பணமும் கரைந்து விடுகின்றது. இதனால் நகர்ப்புறங்களில் கூடாரங்களை அமைத்துக் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஏனெனில் கிராமத்திலுள்ள வீடு, நிலங்களை விற்றதனால் அங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது.



இவ்வாறான காரணங்களால் சேரிப்புறக் குடியிருப்புக்கள் உருவாகி விடுகின்றன. வசதியான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, இறுதியில் வாழ்வதற்குக்கூட அடிப்படை வசதிகள் இந்த மக்களுக்கு இல்லாது போய் விடுகின்றன. இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால் மக்களுக்கு கிராமிய வாழ்க்கையின் இனிமையையும், நலத்தையும் உணரச் செய்தல் வேண்டும். நகரமயமாக்கம், சூழல் நெருக்கடிகள் எதுவுமே அற்ற ஓர் இயற்கையான சூழல் கிராமத்தில் மட்டும் தான் உண்டு. கிராமத்து மண் வாசனையே ஒரு தனிச் சுகம் தான். கிராமத்தில் வீசும் காற்றினிலே ஓர் ஆரோக்கியம், புத்துணர்வு என்பன நிச்சயம் இருக்கும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் புல்வெளிகளையும் பசிய இலை மரங்களையும் காணலாம். மருந்து மணமற்ற உடனடிக் காய்கறிகளையும் பெற்றுக் கொள்ளலாம். கிராமங்களில் வசிப்போர் ஓய்வு எடுப்பதற்கு என்று தனியாக ஒரு நாளையோ அல்லது நேரத்தையோ ஒதுக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லா நாள்களும் சிறப்பான நாள்கள் தான். நகரத்துச் சந்தடியில் சிக்குண்டு வாழ்பவர்களுக்குத்தான் அவற்றில் இருந்து விடுபட்டு நிம்மதியாக சுவாசிக்க ஓய்வு நாள்கள் அதிகம் தேவை.

நகரங்களில் வேலை வாய்ப்புக்காக வசிப்பவர்கள் தங்களுடைய விடுமுறை நாள்களை கழித்துக் கொள்வதற்காக கிராமப்புறங்களில் உள்ள தங்கள் வீடுகளுக்கு ஓடோடி வந்து விடுவார்கள். எம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகவும் அடிப்படையாகவும் விளங்குகின்ற பண்பாடும், பழக்கவழக்கங்களும் கிராமத்தில் தான் கொட்டிக் கிடக்கின்றன.

என்னதான் நாகரிகத்தில் மூழ்கிப் போய், பண்பாடுகளை மறந்து திரிகின்ற பெண்களின் பின்னால் ஆண்கள் அலைந்து திரிந்தாலும், திருமணம் என்கின்ற நிலைக்குத் தள்ளப்படும்போது கிராமத்திலே பண்பாடுகளுடன் வாழ்கின்ற பெண்களைத்தான் விரும்பித் தெரிவு செய்கின்றனர். இது 95 வீதமான உண்மை. இவ்வாறாகப் பல நன்மைகளையும் ஆரோக்கிய வாழ்வையும் தருகின்ற கிராமப் புறத்தை நாம் வெறுத்து ஒதுக்குவது நியாயமா? நகரத்தில் வாழ்ந்தால் மட்டுமே பெரியவர்களாக வரமுடியும் என நாம் நம்புவது பெரிய தவறு. ஆபிரகாம் லிங்கன் உட்பட அத்தனை பெரியதலைவர்களும் கிராமப்புறங்களில் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் தான்.

மக்களே! கிராமங்களில் வசதிகள் காணப்படவில்லை என்பதற்காக உடனடியாக நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்து விடாதீர்கள். கிராமங்களிலும் ஓரளவு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதை மறந்து விடாதீர்கள். அதிலும் இலங்கை அரசானது நகர்ப்புறங்களில் சன நெருக்கடியைக் குறைப்பதற்காக கிராமங்களை நகரமாக்கும் திட்டத்தை அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே நகர விரும்பிகளே இத்தனை தீமைகள் நகர வாழ்க்கையில் இருப்பதை அறிந்த பிற்பாடும் நகரத்தைத் தேடி ஓடி நீங்களும் கஷ்டத்தை அனுபவித்து மற்றவர்களையும் படுகுழியில் தள்ளி, நாட்டினுடைய முன்னேற்றத்தையும் சீர்குலைக்க விரும்புகின்றீர்களா? நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான வாழ்க்கையையும் நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் நிச்சயம் தெரிவு செய்ய வேண்டியது கிராமப்புற வாழ்க்கையையே. கிராமப்புற வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து சேரிப்புறங்கள் உருவாவதையும் தடுத்து, உங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக்கிக் கொள்ளுங்கள்.

## ஏமாற்று வித்தைகள் இனியும் வேண்டாம்..! வஞ்சித்தால் நீயும் வஞ்சிக்கப்படுவாய் உணர்ந்து செயலாற்ற வேண்டும்..!

இலங்கையில் கடந்த காலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த அரசுகளின் நிலமைகளை ஒத்த சற்றே மாறுதலான விவேகங்களின் பிரயோக நடைமுறைகளை தற்போதைய நல்லாட்சி அரசு முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக வாய் வார்த்தைகளின் வழியே சொல்லிவிடுகின்ற சொல்லுருபுகளின் நிஜ வடிவங்களை எப்போதுமே நன்முறையில் நிலைநிறுத்தியதில்லை. கால நீட்சியின் வழி ஒப்பாசாரமாக தன்னலன் சார்ந்த ஒய்யாரங்களோடு செயல் வலுவற்ற ஆரம்பங்களைத் தந்து ஒளிந்துகொள்கிறது. இராஜ தந்திரங்களின் வழி அவ்வப்போது மேற்குலக வருகைகளுக்குக் கையசைத்துக் கொள்கின்றன. அதிகார வர்க்கமாக அவர்களை ஓராட்டிச் சீராட்டி கைகளைக்கட்டி அனுப்பி வைக்கின்றனர்.

நல்லாட்சி அரசினுடைய ஆரம்பங்கள் சொன்ன நல்லிணக்கம், சமத்துவம், தீர்வு முயற்சிகள் என்பன பாதிக்கப்பட்ட சமூகம் சார் இனத்துவ நலன்களை, அவர்களின் அடிப்படையான அபிலாசை வேண்டுதல்களை சரிநிகர் சமானமாய் உள்ளீர்த்ததாக தெரியவில்லை.! வெறுமனே பொது நிகழ்வுகளைகளையும், அபிவிருத்தி என்ற போர்வையின் வழி தோற்றம் கொண்ட வகையுறா திறப்பு விழாக்களையும் ஒன்று கூடி நிகழ்த்துவதோடு ஓய்ந்து போகிறது! மாறாக தமிழர்களுக்கு தீர்வுகளை இன நல்லிணக்கமாகச் சாட்டுதல் செய்வதற்கான எந்த வரையறைகளும் இதுவரை நேர்த்தியான முறையிலே கையாளப்படவில்லை. தற்போது சொல்லப்பட்டு வருகின்ற அரசமைப்பு ஆயத்தங்களின் ஆவியாதல் கூட கடந்தகால அரசுகளின் பேயாட்டங்களின் தாற்பரியங்களை நிகழ்த்தத் தவறவில்லை.!

வரலாற்றின் அடிப்படையிலே ஆட்சி அதிகாரங்களைத் தக்க வைத்துத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் இரு பிரதான கட்சிகளும் இனவாதம் என்கின்ற சேற்றினை மாறி மாறிக் குழைத்து அப்பிக் கொள்ளும் குட்டைக்குள் வாழும் வெட்டைகளாகத் தான் இருந்து வருகின்றன. தமிழர் விடயங்கள் சார்ந்த எந்தவொரு விடயங்களிலும் ஒற்றுமைப்பட்டு, சாதகமான மனநிலையோடு கருத்துரைத்துச் செற்படுவதாகத் தெரியவில்லை.!

இந்த நிலையிலே புதிய அரசமைப்பின் நாடாளுமன்ற வாக்கெடுப்பிற்கான பிரசன்னம் தொடர்பில் மகிந்த அணியினர் வெளிப்படுத்தியுள்ள கருத்தானது சகுனப் பிழையாகத் தென்படுகிறது..! இதனை வெறும் வார்த்தைப் பிரயோகங்களாக கருதி இருந்துவிட முடியாது.! எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டியபடி மௌனம் சாதிக்காது இந்த அரசமைப்புத் தொடர்பிலான சாதக பாதகங்களை தமிழர் தலைமைத்துவங்கள் உள்நுழைந்து பார்க்க வேண்டும்.!

அடர்ந்த காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. எப்போதும் யாரையாவது ஏமாற்றுவதனையும் அவர்கள் ஏமாறுவதைக் கண்டு மனம் மகிழ்ந்து கொள்வதனையும் பொழுது போக்காக கொண்டிருந்தது. ஒரு நாள், கொக்கு ஒன்றை நரி சந்தித்தது. அதனுடன் நட்புப் பாராட்டியது. தன் வீட்டிற்கு விருந்துக்கும் அழைத்தது. கொக்கும் நரியை நண்பனாக கருதி அதனோடு சென்றது.

வீட்டிற்கு வந்த கொக்கை உபசரிப்பது போல நடித்து அதன் இயலாமையைக் கருத்திலெடுத்து ஒரு தட்டில் கஞ்சியை எடுத்து வந்து கொக்குக்கு உண்ணக் கொடுத்தது. நீண்ட அலகுடைய கொக்கால் தட்டிலிருந்த கஞ்சியை சாப்பிட முடியவில்லை! கொக்கு படும் துன்பத்தைக் கண்டு நரி சிரித்து மகிழ்ந்தது! உண்மையிலே வாயகன்ற பாத்திரத்தில் கஞ்சி இருந்திருந்தால் கொக்கு தன் அலகின் உதவி கொண்டு கஞ்சியை உறிஞ்சிக் குடித்திருக்க முடியும்..!



இந்த நிலையிலே அவமானம் அடைந்த கொக்கு.. நரிக்கு பாடம் புகட்டத் தீர்மானித்தது. நரியாரின் பாணியிலே விருந்துக்கு அழைத்தது. வந்த நரியை நன்கு உபசரித்தது கொக்கு.. வாய் குறுகிய ஜாடி ஒன்றில் கஞ் சியை எடுத்து வந்து கொடுத்தது. நரியாருக்கும் அதே நிலமை. கஞ்சியை தன் நாக்கால் நக்கிக் குடிக்க முடியவில்லை..

கொக்கு நரியாரின் இயலாமையைக் கண்டு சிரிக்கவில்லை.! ஏளனமும் செய்யவில்லை.! நரியாரே என்று அழைத்தது. இப்படி அறிவுரை சொன்னது..! இப்பொழுது எப்படி உங்களால் கஞ்சியைக் குடிக்க முடியவில்லையோ.. அதே போல தட்டில் இருந்தால் எப்படி என்னால் கஞ்சியைக் குடிக்க முடியும்.? இது உமக்குத் தெரிந்திருந்தும் எனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி மனம் மகிழ்ந்தீர்கள். ஆனால் நான் அப்படியில்லை.. உங்களுக்கு பாடம் புகட்டவே ஜாடியில் கஞ்சியை வைத்தேன்.. என்று கூறியது. கஞ்சியை தட்டில் ஊற்றிக் கொடுத்தது. தன்னை ஏமாற்றிய நரிக்கு கொக்கு நல்லதே செய்தது.!

ஆக, அங்கும் இங்குமாய் பிரதான கட்சிகள் பிரிந்து நின்றாலும் தமிழர் தொடர்பில் மீண்டும் மீண்டும் உள்ளார்ந்து ஒற்றுமைப்பட்டு செயற்பாடுகளை குழப்பி செய்ய நினைக்கும் விடயங்களை தவிர்த்திருக்க வேண்டும்.! ஏமாற்று வித்தைகள் இனியும் வேண்டாம்..! புரிந்துகொள்ள வேண்டும்.! வஞ்சித்தால் நீயும் வஞ்சிக்கப்படுவாய் என்பதனை உணர்ந்து செயலாற்ற வேண்டும்..!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | | | 4 | | | 9 |
| | | | | 3 | | 8 | | |
| 9 | | | | | | | 6 | |
| | | | 6 | | | | | 2 |
| | 8 | | | 7 | | | 3 | |
| 3 | | | | | 5 | | | |
| | 9 | | | | | | | 1 |
| | | 1 | | 9 | | | | |
| 4 | | | 3 | | | 2 | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 8 | 4 | 2 | 1 | 6 | 7 |
| 4 | 6 | 8 | 7 | 1 | 5 | 2 | 9 | 3 |
| 1 | 2 | 7 | 9 | 3 | 6 | 8 | 4 | 5 |
| 7 | 4 | 2 | 1 | 6 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 1 | 9 | 3 | 5 | 7 | 6 | 2 | 4 |
| 3 | 5 | 6 | 4 | 2 | 8 | 9 | 7 | 1 |
| 9 | 8 | 1 | 6 | 7 | 4 | 5 | 3 | 2 |
| 6 | 7 | 5 | 2 | 8 | 3 | 4 | 1 | 9 |
| 2 | 3 | 4 | 5 | 9 | 1 | 7 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

மனைவி: வேலைக்காரனுக்கு உங்க சட்டையை ஏன் கொடுத்தீங்க?

கணவன்: ஏன், என்னாச்சு?

மனைவி: நீங்கதான் எண்டு நினைச்சு...


கணவன்: நினைச்சு!

WhatsApp

மனைவி: பின்னாடியே போய்...

கணவன்: போய்...?

மனைவி: பூரிக்கட்டையால அடிச்சிட்டன்...!







தருபவர்: வித்யா



**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரம், சிறந்து விளங்கும். வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாக புரிந்து கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு சேமிப்புப் பணம் வீட்டுச் செலவுக்குப் பயன்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடலாம். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப் படுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில், இலாபம் சுமாராக இருக்கும். உடல் நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை கொள்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய சாதனை உண்டாகும். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் நீண்ட நாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவர்.

**தனுசு:** பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வேலைப்பளு அதிகரிக்கும். இலாபம் படிப்படியாக உயரும். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்க வாய்ப்புண்டு.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மந்தகதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்குத் தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும். உடல்நிலை சீராக இருக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். நீண்டநாள்களாகத் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த வகையில், நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில், குளறுபடி உண்டாகி மறையும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் சிக்கனமாகச் செலவழித்து சேமிக்க முயல்வர்.

## சினிமாவாகிறது ராஜீவ் கொலையாளி தனுவின் கதை

முன்னாள் பிரதமர் ராஜீவ், மனித வெடிகுண்டால் தமிழ்நாட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தைப் பின்னணியாக கொண்டு பல திரைப்படங்கள் வெளிவந்திருக்கிறது. தமிழில் ஆர்.கே. செல்வமணி குற்றப்பத்திரிக்கை என்ற படத்தை எடுத்தார். இந்தப் படம் தடை செய்யப்பட்டு நீதிமன்ற போராட்டத்திற்குப் பிறகு- 14 ஆண்டுகளுக்கு பிறகு- வெளிவந்து தோல்வி அடைந்தது.
கர்நாடக இயக்குநர் ஏ.எம்.ஆர்.ரமேஷ் சயனைட் என்ற பெயரில் ராஜீவ் கொலையாளிகளான சிவராசன், சுபா ஆகியோர் பெங்களூருக்குத் தப்பிச் சென்றது, அங்கு வைத்து அவர்களை பொலிஸ் கண்டுபிடித்து சுட்டுக் கொன்றது ஆகியவற்றை மையமாக வைத்துப் படம் எடுத்தார். தமிழில் 'குப்பி' என்ற பெயரில் வெளிவந்தது. தற்போது மீண்டும் ஏ.எம்.ஆர். ரமேஷ் ராஜீவ் படுகொலை பற்றிய படத்தை இயக்குகிறார். இது ராஜீவ் படுகொலையில் நேரடி தொடர்புடைய மனித வெடிகுண்டாக செயற்பட்ட இளம் பெண் தனுவின் கதை. தனு எப்படி உருவானார், அவர் இயக்கதில் சேர்ந்தது எப்படி, அவர் மனித வெடிகுண்டாகச் சம்மதித்தது எப்படி, அவரது தனிப்பட்ட வாழ்க்கை என்ன, அவரது மன நிலை என்ன, என்கிற விடயங்களோடு படம் தயாராகிறது. தி ஹியூமன் பொம்ப் என்று தலைப்பு வைத்திருக்கிறார்கள். தமிழ், கன்னடம், இந்தி மொழிகளில் ஒரே நேரத்தில் தயாராகிறது. தமிழில் மனித வெடிகுண்டு என்று பெயர் வைக்கப்படலாம் என்று தெரிகிறது. மஞ்சு கிருபா, அக்ஷயா கிரியேஷன் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. எதிர்வரும் 21ஆம் திகதி இதன் தொடக்க விழா [illegible] படப்பிடிப்பை ஆரம்பித்து வைக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | – | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | – | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | – | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | – | 800 | 600 | – | 440 |
| சுறா | 500 | 650 | – | 800 | 800 | – | 600 |
| சீலா | 300 | 500 | – | 600 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | – | 600 | 500 | – | 500 |
| முரல் | 300 | 500 | – | 500 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 400 | – | 400 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 300 | – |
| திரளி | 300 | 300 | – | 150 | 250 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | – | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | – | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | – | 400 | 400 | – | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | – | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | – | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | கல்வியங்காடு | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | – | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | – | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | – | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 100 | 80 | 80 | – | 80 | 60 |
| பயிற்றை | 50 | 60 | 80 | 40 | 40 | – | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 120 | 100 | 100 | – | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 100 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 90 | 90 | 90 | – | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 80 | – | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30 | – | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 50 | 50 | 40 | – | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 | 100 | – | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | – | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | – | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 70 | 100 | 70 | – | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 | 40 | – | 70 | 50 |
| கோவா | 80 | 90 | 80 | 80 | 80 | – | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 40 | – | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 120 | 170 | – | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | – | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 35 | 30 | – | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | – | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 280 | 220 | 300 | – | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | – | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100 | – | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 200 | 120 | 160 | – | 80 | 100 |



# பலாப்பழத் தோசை

### செய்முறை:

முதலில் அரிசியை ஆறு மணி நேரம் தண்ணீரில் நன்றாக ஊற வைக்க வேண்டும். ஊற வைத்த அரிசியை உரலில் போட்டு ரவை போன்று இடித்துக் கொள்ளவும்.

பிறகு வெல்லத்தையும், பலாப் பழத்துண்டுகளையும் உரலில் பசுந்தையாக இடிக்கவும். இவற்றை அரிசிமாவுடன் நன்றாகச் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவேண்டும். அதில் ஏலக்காய் பொடியையும் சேர்த்துக் கொண்டால் நல்ல மணமாக இருக்கும்.

அரை மணிநேரம் கழித்து, தோசைக்கல்லில், நெய் விட்டு, தோசைபோல் வார்த்து எடுத்துக் கொண்டு பரிமாறினால் ருசியான பழாப்பழத் தோசை தயார்.

### தேவையான பொருட்கள்:

பச்சை அரிசி - 1 கப்
ஏலக்காய் பவுடர் - 1 தேக்கரண்டி
பலாப்பழத் துண்டுகள் - 2 கப்
வெல்லத்தூள் - 1 கப்
நெய் - தேவையான அளவு







# சமையலறை சமாச்சாரங்கள்

- ஒரு பாத்திரத்தில் குளிர் நீரை எடுத்துக்கொண்டு, அதனுடன் சிறிதளவு எலுமிச்சைச் சாற்றைக் கலந்து உரித்த உருளைக் கிழங்குகளைப் போட்டு வைத்தால் உருளை புதிதாக இருப்பதுடன் வெள்ளை நிறம் கெடாமல் இருக்கும்.
- பால் காய்ச்சுவதற்கு முன் அந்தப் பாத்திரத்தில் சிறிதளவு நீரை ஊற்றினால் பால் பாத்திரத்தில் ஒட்டாமல் இருக்கும்.
- சமையல் எண்ணெயில் ஊசல் வாடை வராமல் தடுக்க அதனுடன் 6-7 பச்சை மிளகாய்களைச் சேர்க்கவும்.
- சப்பாத்தி அல்லது பூரி மாவில் சிறிதளவு எண்ணெயைத் தெளித்து வைத்தால் நீண்ட நேரத்துக்கு மாவைக் கெடாமல் பாதுகாக்கலாம்.
- சப்போட்டா, அன்னாசிப்பழம் ஆகியவற்றை குளிர் சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாது. அது ஓரளவு வெப்பமான சூழ்நிலையில்தான் கெடாமல் இருக்கும்.
- மீன்கள் வாடை வராமல் இருக்க கழுவிய மீனை வெதுவெதுப்பான பாலால் சுத்தம் செய்யவும்.
- மிக்ஸியில் இட்லி மாவை அரைக்கும்போது அரிசி மா நன்றாக அரைபடவில்லை, நேரமாகிறது என்பார்கள். பிரச்சினையைப் போக்க எளிய வழி; புழுங்கல் அரிசியை வெந்நீரில் ஊற வைத்து அரைத்தால் சுலபமாக அரைபடும்.
- தேங்காய்ப் ரொபி தயாரிக்கும்பொழுது சில சமயம் பதம் தவறி முறுகி விடலாம். அப்படி நேரும்போது அதை பாலில் ஊற வைத்து, மீண்டும் கிளறி இறக்கும் சமயம், நெய்யில் வறுத்த கடலை மாவை சிறிது தூவி இறக்கினால், ரொபி மறுபடியும் சரியான பதத்துக்கு வந்துவிடும்.
- எலுமிச்சம் பழங்களை உப்பு ஜாடியில் போட்டு வைத்து விட்டால் அவை எப்போதும் புதியதாக இருக்கும். அந்த எலுமிச்சம் பழங்களிலிலிருந்து நிறையச் சாறும் கிடைக்கும்.
- காய்கள், பழங்கள் வாங்கும்போது நல்ல சிவப்பு நிறமாக இருப்பதையே வாங்க வேண்டும். அவற்றில்தான் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.
- காய்கறிகளை அவ்வப்போது வாங்கிப் பயன்படுத்துங்கள். வாடி வதங்கிய காய்கறிகளில் முழுமையான சத்துக் கிடைக்காமல் போகலாம்.



## நாளை

புரட்டாதி-05
புதன்கிழமை
-21.09.2016
திதி: பஞ்சமி
பி.ப.02.06
நட்சத்திரம்: கார்த்திகை
மு.இ.11.44
ராகுகாலம்:
12.02-01.32 வரை
சுபநேரம்:
04.32-06.02 வரை
கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## உடையிலிருந்து மின்சாரம்

உடல் வெப்பத்தை மின்சாரமாக மாற்றும் நவீன உடையை (ரீ சேர்ட்) விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். இந்த அதி நவீன உடையை அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாண பல்கலைக்கழக நிபுணர்கள் வடிவமைத்துத் தயாரித்துள்ளனர்.

இதை அணியும் போது உடலில் இருக்கும் வெப்பம் அதில் உள்ள மூலப்பொருள்களால் மின்சாரமாக மாறும். அதன் மூலம் மிக சிறிய அளவிலான இலத்திரனியல் கருவிகளை இயக்க முடியும் என இதனைத் தயாரித்த நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இவை மின்சாரத்தை எடுத்துச் செல்லும் வகையில் மிக குறைந்த எடையுடன் கூடிய மூலப்பொருள்களால் தயாரிக்கபட்டுள்ளது. இந்த உடையின் ஒரு சதுர சென்டிமீட்டர் பரப்பளவில் 20 மைக்ரோ வோட் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.



## தெற்காசியப் பெண்கள் முகப்புத்தகத்தில் குறைவு

தெற்காசியப் பிராந்திய நாடுகளில் சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தைப் பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டனைச் சேர்ந்த வி ஆர் ஸ்பெல் என்ற கலந்தாய்வு நிறுவனம், அண்மையில் முகப்புத்தகம் தொடர்பான ஆய்வொன்றை நடத்தியது.

தமது இறுதி முடிவுகள் குறித்து வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஆசிய பசிபிக் பகுதியில் முகப்புத்தகப் பயனாளர்களில் 38 சதவீதானவர்கள் பெண்கள். குறிப்பாக இந்தியாவில் இந்தத் தொகை மேலும் குறைவாக உள்ளது. அங்கு உள்ள பேஸ்புக் பயனாளர்களில் 24 சதவீதமான பெண்களே உள்ளனர்.

பங்களாதேஷில் இந்தத் தொகை 23 சதவீதமாகவும், பாகிஸ்தானில் 22 சதவீதமாகவும் உள்ளது. அதேபோன்று நியூஸிலாந்தில் பேஸ்புக் பயனாளர்களில் 59 சதவீதமானவர்கள் பெண்களாக உள்ளனர்.

குறித்த பயன்பாட்டுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் பெண்கள் மீதான பாரபட்சம்தான் இந்த நிலைமைக்கு காரணம். இந்த சமத்துவமின்மை தான், தெற்காசியாவில் டிஜிட்டல் பயன்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# சிலிங்கோ லைப் குடும்ப சவாரி ஐவருக்கு இங்கிலாந்து பயணம்




சிலிங்கோ லைப்பின் குடும்பசவாரித் திட்டத்தின் கீழ் 5 காப்புறுதிதாரர்கள் இங்கிலாந்துக்கு, சகல செலவுகளும் வழங்கி அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள். ஆயுட் காப்புறுதி முன்னோடியான சிலிங்கோ லைப் அதன் குடும்ப சவாரி மெகா ஊக்குவிப்புத் திட்டவரிசைத் தொடரில் இந்த 10ஆவது சுற்றுலா 2017ஆம் ஆண்டு இடம்பெறுகிறது.

புதிதாகச் செல்ல இருக்கும் இடம் குடும்ப சவாரி ஊக்குவிப்புத் திட்டத்தின் அதிஉயர் பரிசாகும் என்று, இலங்கையின் சகல மாவட்டகிளைத் தலைவர்களின் கொழும்பில் இடம் பெற்ற ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் தெரிவித்த கம்பனி இந்த 10ஆவது குடும்ப சவாரியில் காப்புறுதிதாரர் குடும்பங்களுக்கு டுபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கான விடுமுறை சுற்றுலாவும் லெசர் வேல்ட்டுக்கு ஒருநாள் பயணமும் அடங்குகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த 3 வருடங்களில், குடும்ப சவாரியில் மாபெரும் பரிசுகளைவென்றெடுத்த காப்புறுதிதாரர்களுக்கு ஜப்பான் (2014), சுவிற்ஸர்லாந்து (2015), ஜேர்மனி (2016) ஆகிய நாடுகளுக்கு விடுமுறை சுற்றுலாக்கள் பரிசாகவழங்கப்பட்டன. எல்லாமாக இதுவரை 17,000 பேர் இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த ஊக்குவிப்புத் திட்டம் நிதி ஈடுபாட்டைப் பொறுத்த மட்டிலும் விநியோக நிர்வாகவியலைப் பொறுத்தமட்டிலும் மிகப்பெரும்பொறுப்பேற்பாகும். ஆனால் இதனைத் தொடர்ந்து மேற்கொள்வது மட்டுமன்றி காப்புறுதிதாரர்களின் அபரிமிதமான பிரதிபலிப்பு காரணமாக ஒவ்வொருவருடமும் அதன் வாய்ப்பெல்லையை விஸ்தரிப்பதே நோக்கமாகும் என்று சிலிங்கோ லைப் பிரதம நிறைவேற்றதிகாரி ரி. ரணசிங்க தெரிவித்தார். பெரும் தொகையான காப்புறுதிதாரர்கள் இதனால் அனுகூலம் பெற்றது மட்டுமல்லாமல் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதும் நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மக்களுக்கிடையே பரஸ்பர தொடர்புகளும் ஏற் படுகின்றன என்பதும் இதன் பிரதான அனுகூலமாகும் என்றும் ரணசிங்கமேலும் கூறினார். (த)

## வணிகம்

# அதிமதிப்பு வாய்ந்த வங்கியாக கொமர்ஷல்

கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் தொடர்ந்து 12ஆவது வருடமாக இலங்கையின் அதி மதிப்பு வாய்ந்த வங்கி என்றும் தொடர்ந்து 6ஆவது வருடமாக நாட்டின் அதிமதிப்பு வாய்ந்த நிறுவன அமைப்பு என்றும் எல்.எம்.டி சஞ்சிகையின் 2016ஆம் வருட அதிசிறந்த நிறுவனத்துக்கான மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி 'நேர்மைக்கு' இலங்கையில் முதல் தரம் என்ற நிலைப்பாட்டை தொடர்ச்சியாக 4ஆவது வருடமாக தக்க வைத்துள்ளது. நிதிச் செயற்பாட்டிற்குமுதல்தரம்என்றுதொடர்ந்து இரண்டாவது வருடமாக வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளது. கடைசியாக வெளியிடப்பட்ட தரப்படுத்தலிலும் 10 துறைகளுக்குள் 6 துறைகளில் உள்ள5உயர்நிறுவனங்களுக்குள் ஒன்றாகக் கொமர்ஷல் வங்கி வந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி அதிமதிப்பு வாய்ந்த முதல் 5 நிறுவனங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டிலும் இருந்து வருகின்றது. எல்.எம்.டி சஞ்சிகை 2005ஆம் ஆண்டில் தரப்படுத்தலை ஆரம்பித்ததிலிருந்து அதன் வருடாந்த தரப்படுத்தலில் கொமர்ஷல் வங்கி அதிமதிப்புவாய்ந்தவங்கியாகஇருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அதிசிறந்த நிறுவனங்கள் பற்றிய எல்.எம்.டி தரப்படுத்தலின் சமீபத்திய பதிப்பில் நாட்டில் மிகப் பெரியதும் மிகவும் பல்வகைப்படுத்தப்பட்டதுமான பெரிய நிறுவனங்களும் உலகின் மிகப் பிரபல்யமான சில பல்தேசியக் கம்பனிகளும் அடங்குகின்றன.

கொமர்ஷல் வங்கியின் முகாமைப் பணிப்பாளர், பிரதம நிறைவேற்றதிகாரி ஜெகன் துரைரட்ணம் கருத்து தெரிவிக்கையில், 'நிறுவன ரீதியான இலங்கையின் விவரப் பட்டியலில் அதி உயர்வாகத் தரப்படுத்தப்பட்ட வங்கியாக இருப்பது குறித்து நாம் பெருமைப் படுவது நியாயமானதே. நேர்மை, நிதிச் செயற்பாடு ஆகியவற்றிலும் நாம் அதி உயர் ஸ்தானத்தைப் பிடித்திருப்பது குறித்தும் நாம் மீண்டும் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தொலைநோக்காற்றல், சுறு சுறுப்பு, தர விழிப்புணர்வு, புதுமை காணல் ஆகியன வங்கி நடவடிக்கையில் குறிப்பாக முக்கியமானவை என்பதால் வங்கி இத்துறைகளில் சிறப்புற்று விளங்குவதாக தரப்படுத்தப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்' –என்றார். (த)

## நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -387.80 |
| ஐ.இராச். (பவுண்டு) | -190.34 |
| ஐரோப்பியா (யூரோ) | -163.25 |
| சுவிஸ் (பிராங்) | -149.03 |
| ஐ.அமெ.(டொலர்) | -146.19 |
| கனடா(டொலர்) | -111.18 |
| அவு.(டொலர்) | -110.26 |
| சிங்கப்பூர் (டொலர்) | -107.11 |
| கட்டார் (ரியால்) | -40.15 |



# நவீன மயப்படுத்தப்பட்ட அருங்காட்சியகம் திறப்பு

இலங்கை வங்கிதேசத்திற்கு ஆற்றிவரும் அதன் சேவையின் 77 வருட பூர்த்தியை அண்மையில் பெருமையுடன் கொண்டாடியது. அதன் 77 ஆவது வருட நிறைவுக் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக, கொழும்பு இலங்கை வங்கிச் சதுக்கத்திலுள்ள அதன் தலைமை அலுவலகத்தில் புதிய அருங்காட்சியகத்தைத் திறந்திருந்தது.

இலங்கை மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 1939ஆம் ஆண்டில் இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையான இலங்கை வங்கியின் வளர்ச்சி மற்றும் அதன் கதை இந்த அருங்காட்சியகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வங்கியின் புதிய அருங்காட்சியகம் தலைமைக் காரியாலயத்தின் 28ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தின் வட்ட வடிவ அமைப்பினைப் பயன்படுத்திய கட்டடக் கலைஞர்கள் தனிச்சிறப்புமிக்க வளைவான கலரியாக அருங்காட்சியகத்தை வடிவமைத்துள்ளனர். கட்டடத்தைச் சுற்றிலும் சென்று பார்வையிடக்கூடிய வகையில் வட்ட வடிவில் கலரியொன்று இருப்பதால் பார்வையாளர்கள் கலரியைச் சுற்றிலும் நடந்து சென்று கொழும்பு நகரின் அழகை நன்கு பார்க்கக் கூடியதாகக் காணப்படுகிறது. அருங்காட்சியகத்தின் குறிக்கோள்கள் தொடர்பில் அருங்காட்சியகத்தின் நுழைவாயிலில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப் போர்...

போராளிகளைச் சுட்டுக்கொன்றனர், பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் தடுத்தனர், போர் விதி முறைகளை மீறினர் போன்ற குற்றச்சாட்டுக்கள் இலங்கை இராணுவத்தின் மீது முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இறுதிப் போரின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன 'நந்திக்கடலுக்கான பாதை' எனும் நூலை அண்மையில் வெளியிட்டார். இறுதிக்கட்டப் போரின்போது, 53ஆவது டிவிசனுக்கு இவர் தலைமை தாங்கியிருந்தார். எனவே, குறித்த நூல் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியது.எனினும், நூல் வெளியீட்டு விழாவுக்கு இவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவையும், அவரது ஆட்சியில் பாதுகாப்புச் செயலாளர் பதவியை வகித்த கோத்தபாயவையும் அழைத்திருந்தார். அரச தரப்பில் எவரும் பங்கேற்கவில்லை.

இதனால், இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள கமால் குணரத்ன பொது எதிரணியில் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பிப்பார் என்ற கோணத்தில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அவிசாவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

'நந்திக்கடலுக்கான பாதை' எனும் நூலில் போர் இரகசியங்களை வெளியிட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதே என செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இரகசியங்களை வெளியிடுமளவுக்குக் கீழ்த்தரமான மனிதன் நான் அல்லன் என்பதை ஆரம்பத்திலேயே கூறிக்கொள்கின்றேன்.இரகசியங்கள் பல உள்ளன. அவை நான் உயிரிழக்கும் வரை என்னுடனேயே இருக்கும். உயிரிழந்த பின்னர், என்னுடனேயே மண்ணுக்குள் மறைந்துவிடும். எனவே, புத்தகத்தின் ஊடாக எந்தவொரு இரகசியத்தையும் நான் வெளியிடவில்லை.

35 வருடங்களாக இராணுவச் சீருடையணிந்து நாட்டுக்காக சேவையாற்றிய நான், இராணுவத்தையோ நாட்டையோ ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்று பதிலளித்தார்.

இறுதிக்கட்டப்போர் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நூல் ஒன்றை எழுதவுள்ளார். இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என கேட்ட போது, எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

இறுதியாக 'அரசியலுக்கு வரப்போவதாக கதை அடிபடுகின்றதே' எனச் செய்தியாளர்எழுப்பியகேள்விக்கு பதிலளித்த கமால் குணரத்ன 'இராணுவ சேவையில் அனுபவம் பெற்றவன் நான். அரசியலுக்கு வந்தால் கத்துக்குட்டியாகவே இருப்பேன். ஆகவே உயர்நிலையில் இருந்துவிட்டு மீண்டும் கீழ்நோக்கி வருவதற்குத் தயாரில்லை. எனவே, ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டேன் –என்றார். (வ-21)

## கிளிநொச்சி...

கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்த தாவது:

முள்ளிவாய்க்காலின் ஊடாக சொப்பின் பையோடு வெளியேறி மீளத்துடித்து எமது பெரும் முயற் சியினால் இந்தத் தொழிலை ஆரம்பித்தோம். இருப்பினும் லட்சக் கணக்கில் கடன்பட்டும் வங்கிகளில் அடைவு வைத்தும் இதனை நம்பி வாழ்ந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை தீ இடர் நிகழ்ந்தது. இதனால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் சார்பில் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது இனியொரு அவலத்தை நிகழாமல் தடுக்க நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தருமாறு கோரினோம். இருப்பினும் அதற்கு சுமார் 6 மாத காலம் செல்லும் எனக் கூறுகின்றனர்.

இதனால் உடனடியாக வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல விரும்பும் வர்த்தகர்களில் இதுவரைக்கும் 22 பேருக்கு பிரதேச சபையினால் கடை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றதோடு, இருவர் மட்டும் கடனைப்பெற்று உடனடியாகவே கடை அமைக்கும் பணியில் குடும்ப சகிதமாக ஈடுபட்டுள்ளனர்.அதேவேளை இன்றைய தினம் (நேற்று) ஓர் அன்பரின் மூலம் மேலும் 15 பேருக்கு தலா 20 ஆயிரம் வழங்கப்படவுள்ளதாகக் கூறி விவரம் பெற்றுள்ளனர்.

இவற்றினை தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் அமைப்பது தொடர்பில் எதுவித முன்னேற்றமும் இதுவரையில் கிடைக்கவில்லை. இதனால் வர்த்தகர்கள் குடும்ப சகிதமாக கவலையுடனே உள்ளனர்.

எமது மாவட்ட வர்த்தகர்களைப் பொறுத்தமட்டில் பகைக்கே அஞ்சாதவர்கள். அதனால் இந்தப் புகைக்கு அஞ்சமாட்டார்கள். இருப்பினும் எம்மை நம்பி உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (வ-101,21)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை சோதி மரியதாஸ்

(முன்னாள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளரும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்க உபதலைவரும்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை சோதி மரியதாஸ் நேற்று (19.09. 2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**132, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 2225370, 077 1606077**

**தகவல் :**
**ம.பேர்ட்டி பனிஸ்ரர் (மகன்).**

## மரண அறிவித்தல்

### பீற்றர் புலேந்திரன்

**பிறப்பு** 16 . 11 . 1946



**இறப்பு** 17 . 09 . 2016

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பீற்றர் புலேந்திரன் 17.09.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நேசமணியின் அன்புக் கணவரும், யோகராஜா, ஜெகதீஸ்வரன், றாஜ்குமார் (ஆஸ்திரேலியா), விஜயதர்சினி (இத்தாலி), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாய அமைச்சு), வக்ஷலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாஞ்சலி (ஜேர்மனி), நிரஞ்சினி (RDD), தாரணி (ஆஸ்திரேலியா), கிருபராஜ் (இத்தாலி), திருக்குமரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாலினி (ஜேர்மனி), டாருனியா, லேனுஜன் (ஆஸ்திரேலியா), ஜதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.09.2016 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மல்லாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**254/25, Dr. நடராஜா லேன், சுன்னாகம்.**

(J/4726)

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 454 5759, 075 221 0741**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அம்மாக்குட்டி அப்பாப்பிள்ளை



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்மாக்குட்டி அப்பாப்பிள்ளை நேற்று (19.09.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளையின் அன்பு மனைவியும் பத்மராணி (நோர்வே), கேசவலிங்கம்(பொது நூலகம்-நுணாவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயரத்தினம், வளர்மதி ஆகியோரின் மாமியாரும் வாசுதன் (நோர்வே), ஹர்சிகா ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல் :**
**அ.கேசவலிங்கம் (மகன்)**

கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம்.
பிலிப்பியர் 1:21

### இராசமணி கந்தையா



34/6 இராமநாதன் வீதி கலட்டியை பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கந்தையா (19.09.2016) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற நாகரட்ணம் மற்றும் யோகரட்ணம் (டென்மார்க்), இராசமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான ராசு, கிருஷ்ணப்பிள்ளை, செல்வராசா ஆகியோரின் மைத்துனியும் செல்வரட்ணம், தேவி (டென்மார்க்), வசந்தி (டென்மார்க்), லக்ஸ்மணன் ( போதகர் கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம்), பாஸ்கரன் (லண்டன்), ஜெனி (சுவிஸ்), சசி (இத்தாலி), றமிலா (டென்மார்க்), ஜெனோ (போதகர் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்), ஜெஸ்ரின் (ஜேர்மனி), ஜெகா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (21.09.2016) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் கலட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக தாவடியில் உள்ள கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

### சுந்தரம்பிள்ளை கனகலிங்கம் (தெய்வம்)

(உரிமையாளர் - முன்னாள் துர்க்கா திரையரங்கு, தெல்லிப்பழை . நியூ இந்திரா திரையரங்கு, வவுனியா அஷ்வினா லொட்ஜ் )

**தோற்றம்** 18 . 04 . 1952



**மறைவு** 18 . 09 . 2016

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கனகலிங்கம் (தெய்வம்) 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை- அன்னபூபதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரட்ணம் மற்றும் சத்தியலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காந்தினியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி (கனடா), சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரரும், டர்ஷினி (கனடா), அஷ்வினி (லண்டன்), நிதர்ஷினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலவசந்தன் (கனடா), சுசீலன் (லண்டன்), சுபாஷினி (கனடா), ஜெயக்குமார் (கனடா), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும்,சர்மி, சாதுஜன் ஆகியோரின் பெரியப்பாவும், விநாயக்,விகார்த், அக்ஷரா, றிக்ஷித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 855 7325**

(V/106) (11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா புண்ணியமூர்த்தி

(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 07 . 1942 | 18 . 09 . 2016 |

நெடுந்தீவு கிழக்கு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது இல.18, திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா புண்ணியமூர்த்தி (ஓய்வுபெற்ற கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர்) 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமையினார் - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், புண்ணிய மூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்தியநாதன், பார்வதிப்பிள்ளை, சிவமணி, இராமநாதன் (கனடா), காலஞ்சென்ற லிங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரராச சிங்கம்-காலஞ்சென்ற வள்ளியம்மை, குணநாயகம் - தனலட்சுமி (கொழும்பு), சொர்ணம்மா காலஞ்சென்ற சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), கமலாம்பிகை - மருதையினார் (லண்டன்), லிங்கநாயகம் - மங்கையற்கரசி (நெடுந்தீவு), கோபாலகிருஷ்ணன் - சகுந்தலாதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், மைத்துனியும், பார்வதிப்பிள்ளை பரமலிங்கம், கனகராசா சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.09.2016 வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(V/107)
(11,17)

**024 568 6350, 077 670 5376**

## மரண அறிவித்தல்

### சுந்தரம் பற்குணராசா



யாழ். உரும்பிராய் மேற்கு அன்னங்கையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சுந்தரம் பற்குணராசா 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் பிருந்தா, பிரியா, தட்சனா, ராஜ்பிரித் ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணராசா, யோகராசா (வேவி), சந்திரராணி, உஷாராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கலட்சுமி, யோகேஷ்வரன், உதயசூரியன், பிறேமா, கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும் புறொக்ஷ் ஆனந், ரஜீவ் ஆகியோரின் அன்பு மாமனும் தசானந், மகிஷாந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2016) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் மேற்கு,**
**அன்னங்கை உரும்பிராய்.**
**077 7065843**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி ஆனாச்சி பாக்கியம் தம்பிப்பிள்ளை யோசப்



| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 05.11.1924 | 18.09.2016 |

15/19, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனாச்சி பாக்கியம் தம்பிப்பிள்ளை யோசப் 18.09. 2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கஸ்பார் செபஸ்தி - செபஸ்தி மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை யோசப் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, மரியம்மா, ஆசீர்வாதம், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரன் பாலராஜ் (இளைப்பாறிய ஊழியர், யாழ். பல்கலைக் கழகம்), றோஸ் பெலிசிஸ்ரர் (பெரிய தங்கச்சி), குணகுந்தா (பொன் றோஸ்), சிலுவைராணி மொனிக்கா (ராணி), காலஞ்சென்றவர்களான புளோறன்ஸ் நிர்மலா(பூபதி), திருமதி கொன்சலா புவனராஜேஸ் (ராஜேஸ் - முன்னாள் பணியாளர், யாழ். ப.நோ.கூட்டுறவு சங்கம்) மற்றும் மெயிலி றோஸ் கிறாசியா (முன்னாள் ஆசிரியர் O.L.R), சில்வெஸ்ரர் ஞானதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் எம்ல்டாயூட் (செல்வதி), செல்வரட்ணம்(துரை), லீனஸ் (பெப்பி - யாழ். ப.நோ.கூட்டுறவு சங்கம்), விக்ரர் ஜெயதாஸ் (துரைராசா - திருப்பண்ட காப்பாளர் யாழ். பேராலயம்), அலெக்ஸ் அமலரட்ணம், தர்மினி யசிந்தா (யசி) ஆகியோரின் அன்புமாமியும் நொபின்சியா (ஆசிரியர்), நொஷாந் (வர்த்தக வங்கி - கிளிநொச்சி), நெவின்ஸ்ராஜ் (C.E.B), ராகுலன், றொமியூலஸ் (ரவி - யாழ்.ப.நோ.கூட்டுறவுசங்கம்), றொபின்சன் (லண்டன்), றொகேஷியன் (ஆசிரியர் - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி), றொமிங்ரன் (பிரான்ஸ்), றொஷானி, றொஜெபில்ஜென் (ஆசிரியர் - நானாட்டான் மகாவித்தியாலயம், மன்னார்), அல்டன் (சோமபால கம்பனி - ரத்மலானை), நொயலின் (முன்பள்ளி ஆசிரியர் தி.கு.க.), டெவ்னியா (ஆசிரியர் BBC), சுதர்சன் (LB Finance), வினுஷியா, Dr.யோய் டனீஷியஸ் (பேரதெனியா), ஜெனிபர் டினோஷா (ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜொஸ்லின் டயனிஷியா, ஜொய்லின் டியோனிஷிபா (ஆசிரியர் ஆய்வுகூடம்), ஜனனி டிலக்ஷா (முகாமைத்துவப்பீடம் 1ஆம் வருட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), விதுஷாந், நிருஷாந், மதுஷாந், மௌனிகா, றெனோஷாந் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் லிகானா, டிலுஜன், லித்வினா, ஜெனதீப், ஜெரேஷ், ஷோன் (லண்டன்), ஷைலன் (லண்டன்), ரிஷோத், றொக்சனா, றியான் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.09.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு தூய மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியை தொடர்ந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/19, மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்.**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா கந்தையா

**(சின்னப்பொன்னு)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 03 . 1932 | 18 . 09 . 2016 |

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 21/9, வைரவர் கோயில் வீதி அரியாலையை சொந்த வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா (சின்னப்பொன்னு) கந்தையா 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜேந்திரா மற்றும் செல்வராசா, ஜெகதீஸ்வரன், ஜெயக்குமார், குகராசா, கோபாலசிங்கம், சகுந்தலா, சுசீலா ஆகியோரின் அன்புத்தாயும் பிறேமாவதி, யோகேஸ்வரி, யசோதாதேவி, அகிலா, கமலேஸ்வரி, பாஸ்கர், சுரேஸ் ஆகியோரின் அன்புமாமியும் பிரகாஸ், பிரதீபன், காயத்திரி, சந்தியா, நந்தியா, ஜனனனி, அஸ்வினி, சாயினி, மயூரன், ரஜிதா, தனுஷன், ஆர்த்தி, கபிலன் ஆகியோரின் பேர்த்தியும் விதுஷன், டிஷானா, தக்ஷின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தையலம்மா, சின்னத்தம்பி, பூரணம், நாகேந்திரா மற்றும் பசுபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவபாக்கியத்தின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.09.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்பு:**
**பாஸ்கர் (பாலா)**
**077 7110221, 021 221 1186**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின்...

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் முதன்மை நீதியரசர் கனகசபாபதி ஸ்ரீபவன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசில் தின நிகழ்வு கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை நீதியரசர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். தலைமை நீதியரசர் பரிசில் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னர், பாடசாலை ஆசிரியர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அந்தச் சந் திப்பிலேயே நீதியரசர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்தப் பரிசில் விழாவில் பங்குபற்ற ஆயத்தமாகும்போது, பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் எனது வீட்டுக்கு வருகை தந்தார். அவர், நீங்கள் செல்லும் நிகழ்வுக்கு நாம் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றார். அப்போது நான் கூறினேன் இது நான் படித்த பள்ளிக்கூடம், எனக்கு பெருமளவில் பொலிஸ் பாதுகாப்பு எதுவும் வேண்டாம் என்று தெரிவித்தேன். அதற்கு அந்த அதிகாரி, இல்லை ஐயா இந்தப் பாடசாலையின் ஒருசில மாணவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களில் சிலர் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். எனவேதான் பாதுகாப்பு வழங்குவதுபற்றிக் கூறுகிறேன் என்று கூறினார். இதனைக் கேட்டபோது எனக்கு மிக வேதனையாக இருந்தது.

அதன் பின்னர் எனது மெய்ப்பாதுகாவலரை அழைத்து, எனக்குப் பெரியளவில் எந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்ய வேண்டாம் எனக் கூறினேன். அவர் அதனை மேல் நீதிமன்ற நீதிபதியிடம் சென்று கூறினார். ஒருசில மணி நேர இடைவெளியில் எனக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அதில் சேர் நீங்கள் அந்த நிகழ்வுக்குச் செல்வதாக இருந்தால் உங்கள் பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள் என்று கூறப் பட்டது.

நான் கொழும்பில்கூட பாடசாலைக்கோ அல்லது வேறு நிகழ்வுகளுக்கோ செல்லும்போது இவ்வாறான தொலைபேசி அழைப்புக்களை எதிர்நோக்கவில்லை. நான் இந்தக் கல்லூரியில்கல்விகற்ற காலப்பகுதியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகள் என்பன மிக நேர்த்தியாக இருந்தது. அன்றைய காலத்தில் அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்கள் எவ்வாறு கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்பதை அவர்கள் வாயிலாகவே எமக்கு எடுத்துக் கூறியிருந்தார்கள். ஒரு மாணவன் சமூகத்தில் எவ்வாறு வளர்ந்து வர வேண்டும் என்று கற்பித்தார்கள்.

எனவே ஆசிரியர்கள் ஆகிய உங்களிடம் கேட்டுக் கொள்வதுஎன்னவெனில், மாணவர்களை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றி அவர்களின் கடைமைகள் என்ன? எவ்வாறு நேர்மையாக வாழவேண்டும்? என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்என்பதே அதுவே எனது விருப்பமாகும்.

பாடசாலை மாணவர்களின் ஒவ்வொரு நடத்தையிலும் ஆசிரியர்களாகிய நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக ஒவ்வொரு மாணவனதும் பெற்றோர்களை ஆசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும். எமது காலத்தில் ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கண்டிக்கின்ற நிலமை இருந்தது. ஆனால் தற்போது இது எந்தளவுக்கு இருக்கின்றது என்பது குறித்து எனக்குத் தெரியவில்லை. எனவே ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்கள் மீதும் அக்கறை கொண்டு அவர்களுக்கு நல்வழியைக் காட்டுங்கள்- என்று தெரிவித்தார்.

அதன் பின்னர் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் வைபவ ரீதியாக முதன்மைநீதியரசர்விழாமேடைக்குஅழைத்துச் செல்லப்பட்டார். மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் கல்லூரி அதிபர் தனது உரையில் தெரிவிக்கையில்,

எமது பாடசாலையில் கல்வி கற்ற எத்தனையோ மாணவர்கள் இன்று நீதிபதிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் பதவி வகிக்கின்றனர். வருடாவருடம் எமது பாடசாலை அனுமதிக்காக ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்து சேர்கின்றன. அது மட்டுமல்லாது, சிலர் எப்படியாவது இந்தப் பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்த்து விட வேண்டும் என்பதற்காக, பல அதிகாரிகள் ஊடாகவும் கல்வி அமைச்சின் ஊடாகவும் அனுமதிகளைக் கேட்டுவருகின்றனர். இப்படிப் பெருமை உள்ளஎமதுபாடசாலையின்நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் சில விசமத்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால்எமதுமாணவர்கள் தற்பொழுது நிலமைகளை உணர்ந்து தற்பொழுது ஆசிரியர்களின் சொல்லைக் கேட்டு, அவர்கள் எது நல்வழியோ அதில் பயணிக்கின்றனர். எனவே எம் மாணவர்கள் எமது பாடசாலையின் வரலாறுகளை அறிந்து தாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். என்றார்.

அதன்பின்னர் மேடையில் மாணவர்கள் முன்னிலையில் முதன்மை நீதியரசர் உரையாற்றினார்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் தமது வாழ்வில் பெரும் சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. பல இன்னல்களையும் இழப்புக்களையும் இந்த மாணவர் சமுதாயம் சந்தித்துள்ளது. எமது மாணவர்கள் நல்லவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்கள் எமது இரண்டாம் மொழியான சிங்கள மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில்முதிர்ச்சிஅடைந்துள்ளஅனைத்து அதிகாரிகளுமே மும் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆசிரியர்களுடன் மாணவர்கள் நேசத்துடன் பழகித் தமது வாழ்வின் உயர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும். என்றரர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-4,ரி1)

## வட்டுவாகலில்...

யினருக்கு வழங்க முடியாது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதி நிதிகள் 'குறித்த கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள 617 ஏக்கர் 33 றூட் 31 பேர்ச் கணியில் 352 ஏக்கர் கணி தனிநபர்களுடைய குடியிருப்பு நிலங்கள். இந்த பகுதிகளில் கடற்றொழில் பல்கலைக்கழம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு சுற்றுலா சார்ந்த இடங்கள் அமைப்பதற்கும் எங்கள் மக்களுக்கு அந்தக்காணிகள் வேண்டும். இதை கடற்படையினருக்கு வழங்கினால் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்' என்று தெரிவித்து இந்தக் காணியை கடற்படைக்கு வழங்க முடியாது என தீர்மானத்தை நிறைவேற்றுமாறு இணைத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

மக்கள் பிரதிநிதிகளினுடைய கருத்துக்க்ளை கேட்ட இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன், தற்போது கடற்படையினருடைய ஆளுகையின் கீழ் உள்ள மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணிகளை கடற்படையினருக்கு வழங்க அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். (வ-21,ரி7)

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் பாவனையில் உள்ள 3 Sri minor விற்பனைக்குஉள்ளது. தொடர்பு கொள்ளவும் பகல் ஒரு மணிக்குப் பின் தரகர் வேண்டாம்.

தொடர்பு: 077 805 2324

**உடன் தேவை**

நல்ல நிலையில் உள்ள Pulsar Bike 180,150 சிகப்பு நிறம் X நம்பருக்கு பிறகு வந்தது தேவை. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 1028535

**S.K.Broking**
**வீடு விற்பனைக்கு**

பிறவுண் றோட் இந்து மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் 2¼ பரப்பு காணியுடன் புத்தம் புதிய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.

077 461 3884, 077 1933 490

**இதய அஞ்சலிகள்**

எமது பாடசாலையில் கற்பிக்கும்
**திரு.ப.ஜெயந்தன்** அவர்களின்
தந்தையார்
***சின்னத்தம்பி பரமேஸ்வரன்***
அவர்கள் காலமானதையிட்டு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

தோற்றம்
10
.
09
.
1953



மறைவு
22
.
08
.
2016

அமரர்
**கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (பத்தர்)**

கடந்த (22.08.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (பத்தர்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (21.09.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பலாலி வீதி, உரும்பிராயில் உள்ள காமாட்சி அம்மன் மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், நோயுற்றவேளை வைத்திய சாலையில் அவருடன் துணையாக இருந்த நண்பர்களுக்கும், வேறு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், அயலவர்களின் அன்புள்ளங்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு : இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

V.T.S. வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது சக ஊழியர் **திரு.அ. அஜெந்தன்**
அவர்களின் மாமனார்
***கந்தையா நாகராசா***
அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

**நினைவலையில் அகவை 16**



அமரர் **வேலன்**
**பசுபதி**
(காங்கேசன்துறை வைத்தியசாலை ஊழியர்)

பிறப்பு
25.10.1924

இறப்பு
20.09.2000

பரமனடியில் வாழும் எமதன்புப் பப்பாவே!
எமது உயிர் உள்ளவரை உம் விம்பம்
எமது உள்ளத்திரையிலே
ஆத்மசாந்திக்காக சந்நிதி முருகனை நாடும்

நிரந்தர முகவரி:-
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

மனைவி,
குடும்பத்தினர்.
மானிப்பாய்.

(Ors/4747)(11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வீரர் நவநீதன் புதிய சாதனை படைப்பு

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா வீரர் நவநீதன் புதிய சாதனை ஒன்றை படைத்தார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய கே.நவநீதன் 16 நிமிடங்கள், 15 செக்கன்கள், 5 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து, புதிய சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். 2013 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ரி.தேவராசா 16 நிமிடங்கள், 19 செக்கன்கள், 8 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து படைத்திருந்த சாதனையையே நவநீதன் முறியடித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜெயந்தன் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.விதுர்சன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)






## தேசியமட்ட எறிபந்தாட்டம்; வெள்ளி வென்றது யூனியன்

யாழ்ப்பாணம், செப். 20
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட எறிபந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழையூனியன் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
அச்சிலியாகொட மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து குமாரதாஸ வெல்ல வித்தியாலய அணி மோதியது. முதலாவது செற்றை 27:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. இதனால் அடுத்த இரண்டு செற்களையும் கைப்பற்றினால் மட்டுமே குமாரதாஸ வெல்ல வித்தியாலய அணி சம்பியனாக முடியும் என்ற நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது.
இதற்கேற்ப இரண்டாவது செற்றை 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது குமாதாஸ வெல்ல வித்தியாலய அணி. இறுதி செற்றைக் கைப்பற்றுபவரே தேசியச் சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய குமாரதாஸ வெல்ல வித்தியாலய அணி முடிவில் 2:1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று தேசியச் சம்பியனானது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. (ம-422)

## மன்னாருக்கு தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற இந்தத் தொடரில், மன்னார் மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய எஸ்.சரத்பாபு 01 மீற்றர் 84 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தை தனதாக்கினார். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சதீஸன் வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டி.நவீன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## யாழ். மாவட்டம் தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் யாழ். மாவட்டம் தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களைக் கைப்பற்றியது.
யாழ். மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய எஸ்.செந்தூரன் 55 மீற்றர் 74 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், எம்.சஞ்சீவன் வெள்ளி பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.நிதர்சன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் மன்னார் தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எம். மேரி ஜென்சி 43 நிமிடங்கள், 50 செக்கன்கள் 5 மில்லிசெக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.விதுசா வெள்ளிப் பதக்கத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சுடர்மதி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)





## 400 மீற்றர் ஓட்டம் யாழுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் யாழ். மாவட்டத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சதீஸன் 51 செக்கன்கள் 8 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.விதுர்சன் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.பரணிதரன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)

## முரளி கிண்ணத் தொடர்; இன்று ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம் செப் 20
நடப்பு வருட முரளிக் கிண்ணத் துடுப்பாட்டத் தொடருக்கான ஆரம்ப நாள் நிகழ்வுகள் இன்று இடம் பெறவுள்ளன.
கிளிநொச்சி மத்திய கல்லூரியில பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. ஆரம்ப நிகழ்வுகளுக்கு முரளிதரனும், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்தனவும் கலந்து கொள்கின்றனர். தொடரின் ஆட்டங்கள் நாளை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, மாங்குளம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் ஓவல் மைதானம் ஆகிய மைதானங்களில் தொடர் நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாணத்திலிருந்து ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி இணைந்த அணி, யாழ். மாவட்டப் பாடசாலைகளின் இணைந்த அணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் இணைந்த அணி, மன்னார், வவுனியா மாவட்டப் பாடசாலைகளின் இணைந்த அணி என்பனவும் பெண்கள் பிரிவில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைந்த அணியும் கலந்து கொள்ளுகின்றன. (ம-23)

## 800 மீற்றர் ஓட்டத்தில் கிளி. தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில், கிளிநொச்சி மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பாகக் கலந்தகொண்ட ரி.டென்சிகா 2 நிமிடங்கள், 40 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மோகினநிலா வெள்ளி பதக்கத்தையும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.கனகேஸ்வரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 800 மீற்றரில் வவுனியாவுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 20
மாவட்டமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரில், ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சதீஸ்குமார் 2 நிமிடங்கள 5 செக்கன்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.அனோஜன் வெள்ளிப் பதக்கத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.கெவின் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



படம்- ThePapare.com

# தனது சாதனையைத் தானே தகர்த்தெறிந்தார் அனித்தா

மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற கோலூன்றிப் பாய்தலில் தனது சாதனையைத் தானே தகர்த்தெறிந்து புதிய சாதனையை நிலைநாட்டினார் அனித்தா.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமையும், நேற்றும் மாகாணமட்ட தடகளத் தொடர் நடைபெற்றது. நேற்று பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய ஜெ.அனித்தா 3 மீற்றர் 30 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டித் தங்கப்பதக்கத்தை வென்றார். இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு 03 மீற்றர் 17 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து சாதனை படைத்திருந்தார். தற்போது அவர் தனது சாதனையை தானே முறியடித்தார்.
வெள்ளிப் பதக்கத்தை யாழ். மாவட்டத்தின் மற்றொரு வீராங்கனை வி.சாத்விகாவும், வெண்கலப் பதக்கத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.சுகிர்தாவும் கைப்பற்றினர். (ம-422)

## தட்டெறிதல் போட்டியில் தங்கம் வென்றது யாழ்.

யாழ்ப்பாணம், செப். 20
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் யாழ். மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்றது. யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஏ.கிருஸ்ணமூர்த்தி 33 மீற்றர் 56 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். யாழ். மாவட்டத்தை சேர்ந்த மற்றொரு வீரரான எஸ்.பிரகாஸ்ராஜ் வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த எஸ்.செல்வரஜீவன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)


மாகாணமட்ட தடகளத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. குறித்த தொடரில் நடைபெற்ற ஆண்களுக்கான குண்டுபோடுதலின் போது... (ம-422)

## 200 மீற்றரில் மன்னாருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்றது. ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சிறிமுகுந்தன் 23 செக்கன்கள் 2 மில்லிசெக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தை வென்றார். அதே மாவட்டத்தின் ஏ.கலைவேந்தன் குரூஸ் வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.பவீந்திரன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 400 மீற்றர் தடைதாண்டலில் தங்கம் வென்றது முல்லை

மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.விதுசன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர் நடைபெற்றது. 57 செக்கன்கள் 7 மில்லிசெக்கன்களில் இலக்கை அடைந்து விதுசன் தங்கப்பதக்கத்தை தனதாக்கினார். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ஜொய் ஆகாஸ் வெள்ளிப் பதக்கத்தையும் யாழின் பிறிதொரு வீரரான ரி.செந்தூர்ஜன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)



## 400 மீற்றர் ஓட்டத்தில் கிளி. தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.டென்சிகா தங்கப்பதக்கத்தை வென்றார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. 1 நிமிடம், 06 செக்கன்கள், 1 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து டென்சிகா தங்கப் பதக்கத்தை வென்றார். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பி.தனுஜா வெள்ளிப் பதக்கத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த கே.தனுசியா வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)

## நெப்தலி ஜொய்சன் சாதனை பதக்கங்களை அள்ளியது யாழ்.

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய கே.நெப்தலி ஜொய்சன் சாதனையுடன் தங்கப்பதக்கத்தை வென்றார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய நெப்தலி ஜொய்சன் 4 மீற்றர். 36 சென்ரி மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து சாதனையுடன் தங்கப்பதக்கத்தை வென்றார். கடந்த 2014ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தை சேர்ந்த கணதீபன் 4 மீற்றர் 15 சென்ரிமீற்ரர் உயரத்துக்குப் பாய்ந்து படைத்த சாதனையையே ஜொய்சன் முறியடித்தார்.
வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை யாழ். மாவட்ட வீரர்களான எஸ்.கபிலன், பி.நிதுசன் ஆகியோர் கைப்பற்றினர். (ம-422)



## சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் வவுனியா மாவட்ட வீரர் ஜெனோஜன் தங்கப்பதக்கத்தை வென்றார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. 28 மீற்றர் 9 சென்ரிமீற்ரர் தூரத்துக்கு எறிந்தே ஜெனோஜன் தங்கப்பதக்கத்தை வென்றார். அதே மாவட்ட வீரர் எஸ்.சுதன் 23 மீற்றர் 29 சென்ரி மீற்ரர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த ரி.நிதர்சன் 22 மீற்றர் 15 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பந்தமிட்டபடி ஊதியத்தை வழங்க சிம்பாப்வே கிரிக்கெட் இணங்கியது

ஒப்பந்தம் செய்தபடி சம்பளம் வழங்கப்படும் என்று சிம்பாப்வே கிரிக்கெட் உறுதி வழங்கியதையடுத்து பயிற்சிக்குத் திரும்புவதை உறுதிசெய்தனர் வீரர்கள்.
சிம்பாப்வே கிரிக்கெட் சபை, தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி ஊதி

zimbabwe cricket

யத்தை வழங்கவில்லை எனத் தெரிவித்து சிம்பாப்வே அணியின் வீரர்கள் கடந்த் சில தினங்களாகப் பயிற்சிகளைப் புறக்கணித்தனர். மட்டுமல்லாமல் ஒப்பந்தம் செய்தபடி ஊதியத்தை வழங்கவில்லை என்றால் எதிர்வரும் தொடர்களில் கலந்துகொள்ளப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் மிகவிரைவில் தொடரொன்று நடைபெறவுள்ளது. எனவே சிம்பாப்வே வீரர்களின் குறித்த நடவடிக்கையால் இந்த இரு தரப்புத் தொடர் பாதிக்கப்படும் என்று கருதப்பட்டது. இதனையடுத்து சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்களுக்கும், சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தலைவருக்கும் இடையில் நேற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் திட்டமிட்டபடி சம்பளம் தரப்படும் என்று உறுதிமொழி வழ்ங்கப்பட்டதைத் தொடர்ந்து வீரர்கள் பயிற்சிக்குச் செல்வதாகத் தெரிவித்தனர். (ம)



## விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நுவான் குலசேகர நேற்றுக் கைது

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான நுவான் குலசேகர விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நேற்றுக் கைது செய்யப்பட்டார். நுவான் குலசேகரவின் சிற்றூர்தியும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கடவத்தைப் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சாவடைந்தார். இதனையடுத்து ஆபத்தான முறையில் சாரத்தியம் செய்து விபத்தில் உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் குலசேகர கைது செய்யப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம)



சம்பியன் லீக் தொடரில் நாளை அத்லெட்டிகோ மட்ரிட்டை எதிர்கொள்ளவுள்ள ரியல் மட்ரிட் அணி அதற்கான பயிற்சியில் நேற்று ஈடுபட்டது. (ம)

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அடிப்படைகள் சரியாக இல்லை

*மிஷ்பா தெரிவிப்பு*

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உள்ளூர் ஆட்டங்களின் கட்டமைப்பை கடுமையாக விமர்சித்தார் பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவரான மிஷ்பா.
உள்ளூர் ஆட்டங்களில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சரியான கட்டமைப்பைப் பேணவில்லை. சரியான திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை. இதுவே மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி பலவீனமானதாக இருப்பதுக்கு பிரதான காரணம். மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் பாகிஸ்தான் பெரிதளவில் சாதிக்க, உள்ளூர் ஆட்டங்களிலேயே சரியான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அடிப்படையில் எவ்விதத் திட்டங்களும் கட்டமைப்புக்களும் இல்லாமல் பன்னாட்டு அரங்கில் சாதிக்க இயலாது என மிஷ்பா மேலும் தெரிவித்தார். (ம)



## மார்லன் சாமுவேல்ஸை விமர்சித்தார் ஸ்டோக்ஸ்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரரான மார்லன் சாமுவேல்ஸ், மரியாதை தெரியாத ஒருவர் என்று இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் விமர்சித்தார்.
2015ஆம் ஆண்டு இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டமொன்றில், இருவருக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது. ஸ்டொக்ஸ் ஆட்டமிழந்த பின்னர், அவருக்கு சல்யூட் தெரிவித்து சாமுவேல்ஸ் விடைகொடுத்தார். நடப்பு வருடத்தில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத் தொடரிலும் இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையிலேயே ஸ்டோக்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.
மார்லன் சாமுவேல்ஸுக்கு மரியாதை தெரியாது. கிரிக்கெட் மைதானத்தில் அவருடன் நேரத்தைச் செலுத்தியிருந்தால், அதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்திய பின்னர் அவர் நடந்துகொண்ட விதம் பலரிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியது. தீவுகள் கிண்ணம் வென்ற பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்கு வந்த சாமுவேல்ஸ், அங்கு அமர்ந்து, மேசை மீது காலை வைத்துக் கொண்டார். மரியாதை தெரியாத முறை அது என ஸ்டோக்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

தேவை
Offset machine உதவியாளர்கள் தேவை.
இன்றும் (20.09.2016)
நாளையும் (21.09.2016)
நேரில் சமுகம் தரவும்.
முற்பகல் 10.00 - 2.00 மணிவரை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/26249)(10.17)

களஞ்சியம்
வாடகைக்கு தேவை
யாழ். நகரப்பகுதியில் இருந்து 2 km தூரத்திற்குள்
1000-1500 சதுர மீற்றர் அளவுள்ள களஞ்சியம்
ஒன்று தேவை. வாடகைக்கு கொடுக்க
விரும்புவோர்
0714 27 30 35
என்ற இலக்கத்துக்கு உடன் தொடர்புகொள்ளவும்.
(வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.)
(C 26250)(10.17)

வேலை வாய்ப்பு
DM International
ர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது
லுவலக ரீதியாக வேலை வாய்ப்புக்களை கொடுக்கவுள்ளது.
தகைமை
O/L, A/L படித்தவர்களும் இந்த வருடம் A/L Exam
எழுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு
077 1363797, 077 5566224

## மாகாணமட்டத் தடகளம் யாழ். மாவட்டம் சம்பியன்

மாகாணமட்டப் போட்டிகளில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது யாழ். மாவட்டம்.
நடப்பு வருடத்துக்கான தடகளத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நிறைவடைந்தது. தடகளத் தொடர், பெருவிளையாட்டு என ஒட்டுமொத்தமாகப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில், யாழ். மாவட்டம் முதலிடம் பிடித்தது. இதன்படி யாழ். மாவட்டம் 350 புள்ளிகளைப் பெற்றது. 165 புள்ளிகளுடன் வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்திலும். கிளிநொச்சி மாவட்டம் 157 புள்ளிகளுடன் மூன்றாம், இடத்திலும் உள்ளன. அடுத்த இரு இடங்களை முறையே மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் பெற்றன. (ம-422)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.